# தமிழகப் பெரியார்கள்

313

313/2F

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
5 MAY 951

துமx
N51
104974



A PUBLISHING HOUSE
LORS ESTATE
BAKKAM, MADRAS .......

# தமிழகப் பெரியார்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5 MAY 951
MADRAS

ஆசிரியர் :

**வித்வான் இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா,**
தமிழாசிரியர், கிறிஸ்டியன் காலேஜ் ஸ்கூல், சென்னை.

திருத்தியமைத்தவர் :

**வித்வான் வெ. துரைசாமி ஐயர்,**
தலைமைத் தமிழாசிரியர்,
பி. எஸ். உயர்நிலைப்பள்ளி, மயிலாப்பூர், சென்னை.

தென்னிந்தியப் பதிப்புக் கழகம்
கோடம்பாக்கம் :: சென்னை—24

[விலை அணா 15

பதிப்புரிமை]

முதற் பதிப்பு
திருத்திய பதிப்பு

ந Wx
N57

ARCHIVAL LIBRARY
104974
EGMORE, MADRAS-600 008

ஞானோதயா பிரஸ், 11, ஆண்டர்சன் தெரு, சென்னை-1.

6 MAY 95
MADRAS

# முன்னுரை

'தமிழகப் பெரியார்கள்' என்னும் இந்நூல் தமிழகத்தில் வாழ்ந்த பெரியார்கள் பலருள் அறுவரைப்பற்றிச் சிறுவர்களுக்கு ஏற்றவாறு எழுதப்பட்டதாகும். தமிழகத்தில் புலவர்கள், செயற்கருஞ் செய்கை செய்த பெரியோர்கள், தமிழ்ப் புலவர்களைப் போற்றித் தமிழைக் காத்த புரவலர்கள் முதலியோர் பலர். அவர்களைப் பற்றிய வரலாறுகளை முன்னாளில் எழுதி வைக்காமையால் நமக்குத் தமிழ்மொழி வரலாற்றைத் தெளிவுற அறியவோ, எழுதவோ முடியவில்லை. இக்காலத்தில் ஆராய்ச்சித்துறையில் உழைக்கும் பெரியோர்களின் உதவியால் ஒருவாறு சிலவற்றை அறியக் கூடிய நிலையில் உள்ளோம். ஆனால் அவையும் சிதறுண்டு கிடக்கின்றன. தமிழ்ச் சிறுவர்களுக்கேற்றவாறு அவை எழுதப்படவும் இல்லை. ஆதலால் கிடைக்கும் அளவு புலவர்கள், பெரியோர்கள், அரசர்கள், வீரர்கள், பெண்கள் முதலானவர்களுடைய வரலாறுகளைப் பண்டு முதல் இன்றுவரைத் தொகுத்துச் சிறுசிறு நூல்களாக எழுதி வெளியிட முன்வந்தேன்; செம்மையான நடையில் சிறுவர் உள்ளத்தில் தமிழ்ப் பற்றை உண்டாக்கும் நெறியில் அரிய செய்திகளை எளிய முறையில் வாழ்க்கை வரலாற்றோடு தொடர்பு படுத்தி எழுதியுள்ளேன். தமிழ்ச் சிறுவர்கள் தெள்ளிய உரைநடை எழுதவும் புலவர், புரவலர், வீரர் முதலியோர் சரிதைகள் ஒருவாறு உருப்பெறவும், தமிழ் மணம் கமழவும், தமிழ்ச் சிறுவர்கள் உள்ளத்தில் தமிழ்ப் பற்று உண்டாகவும் செய்வதே என் நோக்கமாகும்.

இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா

## பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திரு. தேசியகவி சி. சுப்பிரமணிய பாரதியார் | ... | 1 |
| 2. | திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ... | 20 |
| 3. | திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை | ... | 36 |
| 4. | திரு. பச்சையப்ப முதலியார் | ... | 60 |
| 5. | பரிதிமாற் கலைஞன் | ... | 76 |
| 6. | திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை | | 93 |



அமரகவி சுப்பிரமணிய பாரதியார்

# தமிழகப் பெரியார்கள்

## 1. தேசியகவி சுப்பிரமணிய பாரதியார்

'பாண்டி நாடே பழம்பதி' என்பது ஆன்றோர் வாக்கு. பொருநை, வையை என்னும் பேராறுகள் பாண்டி நாட்டை வளம்படுத்துகின்றன. பொதியமலை பொலிவுற விளங்குவதும் அந்நாட்டிலேதான். வானளாவும் முடிகளையும், பசுங் கடல் பொங்கி எழுந்தாற்போல் பசுமை நிறைந்த காடுகளையும், சரிவுகளையும் கொண்ட மலைகள், சங்கிலிக் கோவைபோல் ஒன்றின்பின் ஒன்றாய் அமைந்து இணையிலா அழகை அளிக்கின்றன. இயற்கையின் திருக்கொலுவோ என எண்ணும்படி தோன்றும். மலை முகடுகளில் மஞ்சுகள் தவழ்ந்து செல்லும் காட்சி, காண்பார் கண்களுக்கும் உள்ளத்திற்கும் விருந்தாகவும், பல கருத்துக்களைத் தோற்றுவிக்கும் ஊற்றாகவும் அமைந்துள்ளது. எங்கணும் சிற்றாறுகள்! எங்கணும் நீர் அருவிகள்! எங்கணும் நீர் வீழ்ச்சிகள்! எங்கணும் பச்சைப் படாம் போர்த்த வெளிகள்! யானை எழுந்து நின்றாற்போன்ற பெரும் பாறைகள்! பாண்டிய நாட்டின் இயற்கை யழகு என்னே! இதனாலன்றோ இம் மலையைச் செந்தமிழ்க் குறுமுனி தமக்கு உறைவிடமாகக் கொண்டார். இன்பம் என்னும் பொருள் தரும் தமிழ் மொழி அவ்விடத்திலிருந்தே தோன்றிய தெனின் அதனாற்படும் இழுக்கொன்று மில்லை.

"மொய்வைத்த செரி சூழல் வண்டினம் மூரன்ற சந்தின்,
மய்வைத்த சோலை மலையம் தர வந்த மந்தம்,
மெய்வைத்த காலும் தரும், ஞாலம் அளந்த மேன்மைத்
தெய்வத் தமிழும் தரும், செவ்வி மணஞ்செய் ஈரம்"

என்பது தெய்வ மணங் கமழும் சேக்கிழார் பெருமான் அருள்மொழி. சந்தன மரங்கள் நிறைந்த பொதியமலைத் தென்றல் உடலுக்கினிய குளிர்ந்த காற்றையும், அன்பை யூட்டும் தெய்வத் தமிழையும் தரும் என்று கூறியது முற்றிலும் முக்காலும் உண்மை. திருக்குற்றாலம், பாபநாசம் முதலான இடங்களைச் சென்று கண்டார்க்கு இவ்வுண்மை எளிதிற் புலனும். இத்தகைய இயற்கை எழில் நிறைந்த பாண்டிய நாடு பல பெரியாரைக் காலந்தோறும் தோற்றுவித்து மங்காப் புகழ் கொண்டு மிளிர்கின்றது. அந்நாட்டு மக்களோ நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் மிக்காராய்த் தமக்கென வாழாது, பிறர்க்குரியாளராய் வாழ்ந்து, நாட்டிற்கும் மொழிக்கும் அரும்பெருந் தொண்டுகள் ஆற்றியுள்ளனர்.

**எட்டையபுரம்** என்னும் ஊர் பாண்டிய நாட்டில் உள்ளது. அது ஒரு ஜமீன்தார் ஆளுகைக்குட்பட்டது; அவர் தமிழ்ப் பற்றுடையவர். எட்டையபுரம் தமிழ் வளர்ச்சிக்கு நிலைக்களமாகப் பண்டு தொட்டு விளங்கி வருவதாகும். பல புலவர் பிறந்து அவ்வூர்க்குப் புகழ் அளித்துள்ளனர். திருநெல்வேலி மாவட்டத்தைச்சேர்ந்த எட்டையபுரத்தை ஆண்டுவந்த அரசர்கள் தமிழ்மொழியைத் தம் கண்போல் காத்துவந்தனர். அவ்வரசரவையைப் பெரும் புலவர் பல்லோர் எப்பொழுதும் அலங்கரித்துக்கொண்டிருப்பார். புரவலரின் தமிழ்ப்

பற்றும், புலவர்களை ஆதரிக்கும் வள்ளன்மையுமே புலவர் குழுமுவதற்குக் காரணம். சோழநாடு, தொண்டைநாடு, பாண்டியநாடு என்னும் முப்பெருநாட்டுப் புலவர் அனைவரையும் அங்குக் காணலாம். முன்பு **மதுரை, கடைச்சங்கத்தைத் தோற்றுவித்துத் தமிழை வளர்த்தது,** என்பர். அதுபோலவே எட்டையபுரமும் தமிழை வளர்த்தது. எட்டையபுரத்து மன்னரின் அன்பும், ஆதரவும் பெருத பாவலர் தமிழகத்தில் இல்லை என்று கூறுவதில் தவறில்லை. அவ்வாறு விளங்கிய புலவர் பலருள் **கடிகை முத்துப் புலவர்** குறிப்பிடத் தக்கவர் ஆவர். அவர் எட்டையபுரத்து அரசரான **சுகவிரராம வேங்கடேசுர எட்டம நாயக்கரது** ஆதரவைப் பெற்று அரிய பிரபந்தங்கள் பல இயற்றியுள்ளார்.

**சிவலப்பேரி சின்னச்சாமி ஐயர்** என்பவர் அந்தணகுலத்திற் பிறந்தவர். அவர் கல்வியிற் சிறந்து எட்டையபுர அரண்மனையில் வேலை பார்க்க விழைந்து, தம் தாயாருடன் இளம்பருவத்திலேயே எட்டையபுரம் வந்தார். அங்கு அரசரின் ஆதரவு பெற்றுக் கணிதம், தமிழ், தருக்கம் என்பவற்றில் நிறைந்த புலமைபெற்றார். அவர் கூரிய சீரிய நுட்ப புத்தியுடையவர். பள்ளியில் சேர்ந்து கல்வி கல்லாமல் தாமாகவே பாடுபட்டுக் கற்று ஆங்கிலத்திலும் சிறந்த அறிவுடன் விளங்கினார். அவரது மதிநுட்பமும், பன்னூற் புலமையும், நாவன்மையும் ஜமீன்தாருக்கு மகிழ்ச்சியளித்தன. அதனால் அம்மன்னர் அவரைத் தம் அவைப் புலவர்க்கெல்லாம் தலைவராக விளங்கும்படிச் செய்தார். சின்னச்சாமி ஐயர் தம் மதிநுட்பத்தால் அவ்வூருள் பெரிய நெசவுப்

பொறி யமைத்துத் திறம்பட நடத்தினர். எட்டைய புரம் 'மான்செஸ்டர்' ஆகிவிடுமோ என்று யாவரும் வியந்தனர்.

சின்னச்சாமி ஐயர் இலட்சுமி என்னும் அணங்கை மணந்து இனிது விளங்கினர். அவ்வம்மையார் இல்லறத்தை இனிது நடத்திவரும் காலத்தில் 1882-ஆம் ஆண்டு சுப்பிரமணிய பாரதியார் பிறந்தார். குழந்தையாகிய பாரதியார் அருமையாக வளர்க்கப்பட்டார். 'விளையும் பயிர் முளையிலே' என்ற பழமொழிக் கிணங்க அருங் குணங்களும் செயல்களும் அவரிடம் காணப்பட்டன. அவரிடம் குண நலங்கள் வளர்ந்து வருதலைக் கண்டு யாவரும் மகிழ்ந்தனர்; ஆயினும், அன்னையார் அப்பிள்ளையின் வாழ்வின் வளர்ச்சியைக் கண்டு உள்ளம் மகிழும் பேறு பெருதது வருந்தத் தக்கதே. பாரதியாரின் ஐந்தாம் ஆண்டில் அன்னையார் இறந்தார்.

சின்னச்சாமி ஐயர் வள்ளியம்மை என்னும் மாதை இரண்டாந் தாரமாக மணந்து கொண்டார். வள்ளியம்மையார் பாரதியாரைத் தம் மைந்தராகவே கருதி வளர்த்து வந்தார். பாரதியார் சுப்பையா என்ற செல்லப் பெயரால் அழைக்கப்பட்டார். தக்கபருவத்தில் பாரதியாருக்குப் பூணூற் சடங்கு நடந்தது.

பாரதியார் இளம் பருவத்தில் கல்வி கற்கப் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். இளமைப் பருவத்திலேயே பாரதியாருக்குத் தாய் மொழியாகிய தமிழ் மொழியிடத்து அடங்கா ஆர்வம் பிறந்தது. ஆங்கிலப் பள்ளிக்குப் பாரதியார் சென்று கல்வி கற்ருலும், தமிழ்

மொழிப்பற்றை நன்குணர்ந்தார். பாரதியாருக்குக் கம்பராமாயணம், பாரதம், தாயுமானவர், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருக்குறள் என்பவற்றை முறையாகச் சின்னச்சாமி ஐயர் கற்பித்தார். அவர் போதித்த அந்நூல்களை நன்கு பாரதியார் கற்றுணர்ந்து தமிழ்ப் பற்று வளரப்பெற்ருர். தமிழிலுள்ள செஞ்சொற் கவியின்பத்தைத் துய்த்து புலமை எய்தினுர். அவர் கவிகள் இயற்றும் ஆற்றலும் பெற்ருர். ஒன்பதாவது ஆண்டிலேயே பாரதியார் கவி பாடத் தொடங்கினுரென்பர்.

**காந்திமதிநாதம் பிள்ளை** என்பார் திருநெல்வேலி **இந்து கல்லூரியில்** இடைக்கலை மாணுக்கர். பாரதியார் அக்கல்லூரியைச் சார்ந்த கலாசாலையில் அப்பொழுது படித்து வந்தார். கலாசாலை மாணவராயிருந்த பொழுது அவரது புலமை யாவர்க்கும் எளிதில் விளங்கிற்று. பிள்ளைகள் யாவரும் அவரைப் புகழ்ந்தனர். காந்திமதிநாதம் பிள்ளை தமிழில் நல்லறிவு வாய்க்கப் பெற்றிருந்தார். அவர் ஒரு நாள் பாரதியாரை அழைத்து, 'பாரதி சின்னப் பயல்' என்ற ஈற்றடியை அமைத்து ஒரு வெண்பாவைப் பாடும்படி வேண்டினுர். உடனே பாரதியார், கேட்டவர் உட்கருத்தை உணர்ந்து முதல் மூன்றடிகளில் சிறுமை கற்பித்து, மூன்ருமடியின் ஈற்றில் 'காந்திமதிநாதனை,' என அமைத்து, அவர் கொடுத்த ஈற்றடி கொண்டு முடித்தார். அது 'காந்திமதி நாதனைப் பார், அதி சின்னப் பயல்' என்ற பொருள் தந்தது. இளமையில் இவ்வாறு அவர் பாடிய பாடல்கள் பல.

பாரதியார் புத்தகமும் கையுமாய் இராமல் கவிதை செய்வதில் சிந்தனை செலுத்தி இயற்கைக் காட்சியி லும் தனித்திருத்தலிலும் ஈடுபட்டிருந்தார். வயது முதிர்ந்தவர்களோடு வேதாந்த விசாரணையில் ஈடுபட் டுப் பாரதியார் தம் கருத்தைச் சொல்லுவார். அடிக் கடி எட்டையபுர அரண்மனைக்குச் செல்வார்; அரச ரோடு அளவளாவுவார்; கவிகள் பாடி அரசரை மகிழ் விப்பார். தம் பாட்டுக்களின் திறத்தால் தாம் உலகினை ஆள்வதே பாரதியார் கொண்ட பேரவா; ஆதலால் பள்ளியில் மாணவரோடு கலந்துறவாடிக் காலம் கழிப் பது பாரதியாரின் இயல்பு அன்று. உண்மைக் கவிஞ னிடம் காணத்தகும் தனிமை, இயற்கையில் ஈடுபாடு, பசி தாகங்களை மறத்தல், தனக்குத் தானே இன்புறுதல், முதலாயின அவர்பால் காணப்பட்டன. பல புலவர் கூடியிருந்த குழுவில் பதின்மூன்றுமாண்டில் சுப்பிரம ணிய பாரதியார் **பாரதி** என்ற பட்டம் பெற்றார். புல மைக் காய்ச்சல் சில புல்லிய புலவரிடம் உண்டா யிற்று. அவர்களே தம்மைப் புகழும்படி பாரதியார் தம் புலமைத்திறனால் செய்துகொண்டார். பாரதியார் பதினான்காம் வயது நிறைவுற்றார். கிழக்கடையம் **செல்லப்ப ஐயரின்** மகள் **செல்லம்மை** என்பாரைப் பார தியாருக்கு மணம் செய்வித்துச் சின்னச்சாமி ஐயர் அகம் மிக மகிழ்ந்தார்.

பாரதியாரின் அத்தையான குப்பம்மை காசியில் வசித்து வந்தார். சின்னச்சாமி ஐயர் பாரதியாரின் ஆரம்பக் கல்வி முடிந்ததும் தம் உலக வாழ்க்கையையும் முடித்துக்கொண்டார். அது முதல் குப்பம்மை பாரதி

யாரைக் காக்க முன்வந்தார். பாரதியாரின் நடுத்தரக் கல்வி குறித்து அவரைத் திருநெல்வேலி இந்து கல்லூரிக்கு அனுப்பியவரும் அவ்வம்மையே. அங்குப் பாரதியார் பேச்சு வன்மையால் யாவரையும் வென்று விளங்கினர். யாவர்க்கும் அவரது புலமை எளிதில் விளங்கியது. அப்பொழுது சிறியதொரு நிகழ்ச்சி நிகழ்ந்தது. அக்கல்லூரித் தமிழ்ப்புலவர் ஒரு நாள் பாரதியார் பள்ளிக்கூடப் பாடத்தைப் படித்து ஒப்பியாத பொழுது "நீர்மேகம்போலக் கவிமழை பொழிவதாக உம்மைப் பற்றிச் சொல்லுகின்றனர். அதற்கேற்ப உயர்ந்த இடத்தில் இருக்கின்றீர். நீராகப் பாடுவது இருக்கட்டும்; பள்ளிக்கூடப் பாடங்களைக் காளமேகம் போல் பொழியலாமே," என்றார். உடனே பாரதியார் எழுந்து, "ஐயா, நீர்மேகத்தின் பொது தன்மை கூட அறியாதிருக்கின்றீர் போலும்! மேகம் தன்பால் மழைபொழியுமே யன்றிப் பிறர் விருப்பிற்கு இணங்கப் பொழியாதே" என்று வகுப்பு மாணவர் கை கொட்டிச்சிரிக்கும்படி விடை அளித்தார். புலவர் வெட்கமுற்றார். அன்று முதல் புலவருக்குப் பாரதியாரிடம் அன்பு மிகுந்தது.

1898-ஆம் ஆண்டில் குப்பம்மை பாரதியாரைக் காசியில் படிப்பிக்க அழைத்துச் சென்றார். அங்குத் தமிழ் இல்லை. இந்தி மொழியைப் பாரதியார் படித்தார். வட மொழியிலும் ஓரளவு நல்லறிவு பெறப் பாரதியாருக்கு வாய்ப்பு கிடைத்தது. பாரதியார் இந்தி பேசினால் வட நாட்டவர் பேசுவது போலவே இருக்கும். பாரதியார் கல்கத்தாப் பல்கலைக் கழக நுழைவுத் தேர்வுக்குப் படித்து வெற்றியுற்றார்; இடைக்

கலை முதல் வகுப்பிலும் சேர்ந்து ஓராண்டு படித்தார். காசிப் படிப்பு அவ்வளவே. பாரதியார் பத்திரிகைகளைப் படித்து வந்தார். பாலகங்காதர திலகரது வீர கர்ச்சனை அவருக்குத் தேச சேவையில் ஆர்வத்தைத் தோற்றுவித்தது; உள்ளத்தில் தேசிய உணர்ச்சி தோன்றிற்று. தாய் நாடு, தாய்மொழிப் பற்றுக்கள் உரம் பெற்றன. பாரதியார் தேசத் தொண்டில் ஈடுபடலாயினர்.

பாரதியார் காசி சென்றது முதல் எட்டையபுரத்தரசருக்கு அவர் பிரிவு வருத்தத்தை தந்தது. அரசர் பாரதியாரை அழைத்து வந்து உடன் வைத்துக்கொள்ள விரும்பினர். எட்டையபுரத்தரசர் டில்லிக்குச் செல்ல நேர்ந்தது. அப்பொழுது அரசர் காசிக்கும் சென்று பாரதியாரை அழைத்துக்கொண்டு எட்டையபுரம் வந்து சேர்ந்தார். 1920-ல் பாரதியார் காசியிலிருந்து மீண்டு வந்து மனைவியாரோடு எட்டையபுரத்தில் குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டார். பாரதியார் அரசரின் அவைக்களப் புலவருக்குட் தலைவராய் விளங்கினர். பாரதியார் அரசருடன் அளவளாவுதல், செய்தித்தாள்களைப் படித்து விரிவுரை நிகழ்த்துதல், தமிழ் ஆங்கில நூல்களைப் படித்துக் கருத்துரைத்தல், செய்யுளியற்றி அரசரை மகிழ்வித்தல் என்பனவற்றைத் தம் கடமைகளாகக் கொண்டிருந்தார். அக் காலத்தில் ஷெல்லிதாஸன் என்ற புனை பெயரோடு கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டு வந்தார்.

ஒருசமயம், "காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார்போல் சந்தப் பாடல் பாட வல்லவர் இப்

பொழுது யாருளர்; 'அவ்வாறு நான் பாடுவேன்' என்று முன்வரக் கூடியவர் எவருமில்லை'' என்ற பேச்சு அரசர வையில் தோன்றியது. அப்பொழுது பாரதியாரும் இருந் தார். அது அவர்க்குத் தம்மைச் சுட்டிக் கூறியதுபோலத் தோன்றிற்றும். பாரதியார் இகழ்ச்சி தோன்ற நகைத் தாராம். அப்பொழுது அங்கிருந்த ஒருவர், 'இகழ்ந்து நகைப்பதிற்' பயனில்லை; 'இயலுமேல் நாளை மாலைக்குள் பாடி வருக' என்று கூறினராம்; அவ்வளவே. பாரதி யார் விரைந்து வீட்டிற்குச் சென்றார்; சிந்தனை, சிந்து பாடுதலில் ஊன்றியது. குறித்த நேரத்திற்கு முன்பே சிந்தைப் பாடி வந்து, அதனைப் பாடிக் காட்டிப் 'பாட் டுக் கொரு புலவன் பாரதி' என்ற பெயரை நிலை நாட்டி னர். எட்டையபுரத்தரசர் அளவிலா மகிழ்ச்சி கொண் டார்.

பாரதியார்க்குத் தமிழ்மொழிப் பற்று வளர்ந்து கொண்டே வந்தது. எட்டையபுரத்தரசரோடு ஒரு முறை பாரதியாரும் பிற புலவர்களும் சென்னைக்கு வந்திருந்தனர். திரும்புங்காலில் வீட்டிற்கு ஏதேனும் வாங்கிவர, ஒவ்வொருவருக்கும் அரசர் நிரம்ப பணம் கொடுத்தார். பாரதியார் மனைவியார்க்கு ஒரு புடைவை யும் எஞ்சிய தொகைக்குத் தமிழ்ப் புத்தகங்களும் ஆங்கி லப் புத்தகங்களும் வாங்கி வந்தார். மனைவியிடம், அழியும் பொருளைக் கொடுத்து அழியாப் பொருள் வாங்கி வந்த தாகக் கூறினர்; இது, அவரது மொழிப்பற்றையும் உள்ளக் கிடக்கையையும் இனிது விளக்குவதன்றோ?

பாரதியார் மனம் விரிய விரிய, அரண்மனையில் கட்டுப் பாட்டில் இருப்பது கடினமாயிற்று. அவருக்கு

அது சிறைவாசம் போலத் தோன்றிற்று. பறவைகள் போல உலக வெளியில் சுதந்தரமாய் உலவ விருப் முண்டாயிற்று. 1904–ஆம் ஆண்டு பாரதி எட்டைய புரத்தரசரை விடுத்து வெளியேறினர்; மதுரைக்கு வந்தார். மதுரைக் கல்லூரியின் தமிழ்ப் புலவராயிருந்த ம. கோபாலகிருஷ்ணையர் துணையால் பாரதியார் மதுரைச் சேதுபதி கலாசாலையில் தமிழாசிரியராக அமர்ந்தார். மதுரைக் கோபால கிருஷ்ணையருக்கும் சென்னையில் 'சுதேசமித்திரன்' என்ற பத்திரிகையைத் தொடங்கி நடத்திவந்த ஜி. சுப்பிரமணிய ஐயருக்கும் நெருங்கிய நட்புண்டு. சுப்பிரமணிய ஐயருக்குத் துணை யாசிரியர் ஒருவர் வேண்டி யிருந்தது. அவ்விருப்பத்தை கோபால கிருஷ்ணையருக்குத் தெரிவித்தார். கோபால கிருஷ்ணையர் பாரதியாரைத் துணைப் பத்திராதிபராகச் சென்னைக்கு அனுப்பினர். பாரதியார் தமிழாசிரியராய் விளங்கியது மூன்று மாத காலமே. 1904-ல் பாரதியார் சுதேச மித்திரன் துணைப் பத்திராதிபராகி இரண்டரை ஆண்டுகள் உழைத்தார். அதற்குள் அவர் பேரும் புகழும் பரவலாயின. அவரிடம் தேசபக்தி மிகுந்து வளர்ந்தது.

இங்கிலையில் பாரதியாரும் ஸ்ரீ வ. உ. சிதம்பரம்பிள்ளையும் நெருங்கிய நட்பினராயினர். பாரதியார் தேசியக் கவிகள் பாடத் தொடங்கினர். அவரது பாடல்கள், தூங்கிக்கொண்டிருந்த தமிழரைத் தட்டி யெழுப்பின. பாரதியார் பாடல்களை ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி ஐயர் அச்சிட்டுப் பரவச் செய்தார். காசியில் நடந்த தேசிய மகாசபைக் கூட்டத்திற்குப் பாரதியார் சென்றிருந்தார். அக்

காலத்தில் தோன்றிய தேசிய இயக்கமும், வங்காளப் பிரிவினையும் விடுதலையிற் பேராவலை உண்டாக்கின. **ஸ்ரீ திருமலாசாரியார்** என்பார் 1907-ல் 'இந்தியா' என்ற பத்திரிகையைத் தொடங்கிப் பாரதியாரை அதற்கு ஆசிரியராக்கினர். அவருடைய தெளிந்த உரைநடைக் கட்டுரைகளும் எளிய கவிகளும் அப்பத்திரிகையில் வெளியாயின. பாரதியார் சென்னைக் கடற்கரைக் கூட்டங்களிலும் பேசத் தொடங்கினர் எழுத்து, பேச்சு, கவி என்பவற்றால் பாரதியார் தமிழ் மக்களால் பெரிதும் புகழ் பெற்றார். அச்சமயம் வங்காளப் பிரிவினையால் மக்கள் உள்ளம் கொதித்திருந்தது. எங்கும் தேசிய இயக்கம் வலுத்தது. ஸ்ரீ லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டார். எங்கும் அடக்குமுறை தாண்டவமாடிற்று. இந்தியாப் பத்திரிகையின் வெளியிட்டாளர் கைது செய்யப்பட்டனர். பாரதியார் கைது செய்யப்பட வேண்டிய கட்டமாகும் நிலை.

அப்பொழுது புதுவையில் வாழ்ந்த சிட்டி குப்புசாமி ஐயங்காருக்கு அறிமுக கடிதம் வாங்கித் தந்து நண்பர் சிலர் பாரதியாரைப் புதுச்சேரிக்கு அனுப்பினர்.

சிட்டி குப்புசாமி ஐயங்கார் புதுச்சேரியில் எளிய வியாபாரி; தமிழரறிஞர். 1908-ல் பாரதியார் புதுச்சேரியில் வாழ்க்கையை நடத்தத் தொடங்கினர். குப்புசாமி ஐயங்கார் பாரதியார்க்குப் பேருதவி புரிந்தார். சென்னை அரசாங்கமோ அங்கும் அவரைத் தொடர்ந்து அச்சுறுத்தியது. அல்லல்கள் மிகுந்தன. அந்நிலையில் மக்களுட் சிலர் புதுவையில் பாரதியாரை இகழ்ந்தனர். ஆதரவு குன்றத் தொடங்கி, வறுமை மேலிடப் பாரதி

யார் வருந்தினர்; தூண்டிற் புழுப்போலத் துடித்தார்; எனினும், அவர் நெஞ்சில் உரம் குன்றவில்லை; எதற்கும் அஞ்சவில்லை; கவிகள் சமைத்தலில் உணர்ச்சியும் ஊக்கமும் குன்றவில்லை. அங்கிலையில் தீயிலிட்ட பொன்போல் செம்மை ஒளிவீசத் தொடங்கிற்று. குப்புசாமி ஐயங்காரும் அரசாங்கத்தினரின் வற்புறுத்துதலால் பாரதியாரை வீட்டைக் காலிசெய்யும்படி கூறினர். அப்பொழுது ஸ்ரீ குவளை கிருஷ்ணமாசாரியாரால் பாரதியார் ஸ்ரீ சுந்தரேச ஐயர் என்பார்க்கு நண்பரானர்; வசிக்க வீடு ஒன்று அமர்த்திக் கொடுக்கப்பட்டார்.

ஸ்ரீ மண்டலம் சீநிவாஸாசாரியார் துணைகொண்டு புதுவையில் பாரதியார் 'இந்தியா' பத்திரிகையைத் தொடங்கினர். அச்சுப் பொறிகள் சென்னையிலிருந்து வந்தன. அதனையும் பிரெஞ்சு இந்தியாவிற்குள் வரக் கூடாது என அரசாங்கத்தார் தடுத்தனர். துன்பம் மீண்டும் தொடர்ந்தது. இங்நிலையில் பாரதியார் சகுந்தலை என்ற பெண்குழந்தையுடனும் மனைவியுடனும் புதுச்சேரியில் இருந்தனர். 1910-ல் புதுச்சேரிக்கு ஸ்ரீமத் யோகி அரவிந்தர் வந்து சேர்ந்தார். அவரது கூட்டுறவு பாரதியாருக்கு ஆறுதல் அளித்தது. 'கர்ம யோகி' என்ற தமிழ்ப் பத்திரிகையைத் தொடங்கிப் பதஞ்சலி யோக சூத்திரத்தைப் அவர் மொழிபெயர்த்தார். இலண்டன் பாரிஸ் ஒற்றர்களுக்குத் தப்பிப் பக்கிரிக் கோலத்துடன் ஸ்ரீ வ. வே. சுப்பிரமணிய ஐயர் என்னும் தேசபக்தர் புதுச்சேரிக்கு வந்தார். அவர் கூட்டுறவினுல் பாரதியார் சக்தி வழிபாட்டினர்க்குரிய சக்திப் பாடல்களைப் பாடினர்.

பாரதியாரின் புதுவை வாழ்க்கை பல்லாற்றானும் துன்பந் தருவதாயிருந்தது. ஆயினும் பொய்யில் புலவனுக்கும் வெற்றியை அளித்தது. கவி என்பான் இயற்கையில் தோய்ந்து, நுட்பங்களைக் கண்டு உண்மையை நாடி யுணர்வதிலே ஊன்றிய கருத்தும் செவ்விய இலக்கியப் பயிற்சியும் அமைய விளங்குதல் வேண்டும். எழுத்தையோ, சொல்லையோ, கருத்தையோ, உவமையையோ அவன் நாடித் திண்டாடக்கூடாது. அவன் நாவில் கவி தானே ஊற்றெடுத்தோடி வரவேண்டும். உள்ளத்துணர்ச்சி, வாயைத் திறந்ததும் கவியாக வெளிவருதல் வேண்டும். இந் நிலையை அடையும் பக்குவநிலையைப் பாரதியார் புதுவையிலேயே அடைந்தார். புதுவையில் தோட்டம், துரவுகள் மிகுதி. அங்கெல்லாம் பாரதியாரைக் காணலாம்; கடற் கரையிற் காணலாம். அவரது உற்ற நண்பரான ஸ்ரீ கிருஷ்ணசாமி செட்டியார் தோட்டத்திலும் காணலாம். அவருடைய கவிதைகள் பல உருக்கொண்டு வெளிவந்த இடமும் அதுவே. அவர் புதுவையிலிருந்த காலத்தில் 'ஞான ரதம்' என்ற அரிய உரைநடை நூலை எழுதினார். கீதையைப் பற்றி விவாதம் ஒன்றைப் பாரதியார் ஆங்கிலத்தில் நடத்தினார். 'பாஞ்சாலி சபதம்' என்ற புது நூலை இயற்றினார். 'பாரதி அறுபத்தாறு' என்ற நூல் புதுவையிலேயே பாடப்பட்டது. பாரதியார் நூல்கள் யாவுமே புதுவையில் அவர் இருந்த காலத்தில்தான் வெளிவந்தன. அவருடைய கட்டுரைகள் மிகவும் அற்புதமானவை என்று மக்களால் விரும்பி மேற்கொள்ளப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டத் தலைவராயிருந்த ஆஷ் துரை 1911-ல் மணியாச்சி என்னுமிடத்தில் கொல்லப்

பட்டார். அவரைக் கொல்லும் சதிக்கூட்டம் ஒன்று வ.வெ.சு. ஐயர், அரவிந்தர், பாரதியார் என்பாரின் கீழ்ப் புதுவையிலுள்ளதெனப் போலீஸார் கூறினர். இவ்வாறு முடிவு செய்தது தவறென்று வ. வெ. சு. ஐயர் 'பால பாரதி' என்ற பத்திரிகையில் கண்டித்து எழுதினார். போலீஸார் பாரதியார் வீட்டில் முற்றுகையிட்டனர். அவர், வீட்டில் இல்லாத சமயம் போலீஸார் வீட்டிற் புகுந்து சோதனை யிட்டனர். அம்மூவரையும் பிரெஞ்சு எல்லையினின்றும் வெளிப்படுத்த பல முயற்சிகளைப் போலீஸார் செய்தனர்; ஆனால் எவையும் பயன்படவில்லை.

சென்னையில் சுதேசமித்திரன் ஆட்சிப் பொறுப்பை **ஸ்ரீ அரங்கசாமி ஐயங்கார்** ஏற்றார். அவர் பாரதியாருக்கு உதவி புரிய எண்ணி, அரசியல் கலப்பில்லாத கட்டுரைகளையும், கவிதைகளையும் எழுதுமாறு பாரதியாரைக் கேட்டுக் கொண்டார், அவரும் அவ்வாறே எழுதி வர ஒப்பினர். ஸ்ரீ அரங்கசாமி ஐயங்கார், எழுதினாலும் எழுதாவிட்டாலும் மாதம் முப்பது ரூபாய் பாரதியாருக்குத் தவறாமல் அளித்து வந்தார். 1914-முதல் இவ்வாறு வாழ்க்கை நடைபெற்று வந்தது. அப்பொழுது பாரதியார் காங்கிரஸ் சரித்திரத்தை '**ஜீவ வாக்கு**' என்ற தலைப்பளித்து எழுதி வந்தார். '**சகதீச சந்திர போஸ்**' இயற்றிய தாவர நூல் நுணுக்கங்களை மொழி பெயர்த்தார்; **தாகூரின்** கதைகள் சில மொழிபெயர்க்கப்பட்டன. நகைச்சுவைக் கட்டுரைகள், கற்பனைக் கட்டுரைகள் என்பன பாரதியாரால் எழுதப்பட்டு மித்திரனில் வெளி வந்தன.

1918-ல் பாரதியார் புதுவையைவிட்டுத் தாமாகவே வெளியே வந்தார். அவருடன் அவர் மனைவியாரும் மைத்துனரும் இருந்தனர். கடலூரில் அவரைப் போலீஸார் சிறைப்படுத்தினர். ஸ்ரீ அரங்கசாமி ஐயங்காருக்கு அச்செய்தி தெரிந்தது. அவர் தக்கவரிடம் முயற்சிகளைச் செய்து பாரதியாரை விடுவித்தார். பாரதியார் கடையம் சென்றார். கடையம் இயற்கை வளம் செறிந்தது. அங்குள்ள மலை, ஆறு, பொழில்கள், ஆலயங்கள், பசும் புற்றரைகள் யாவும் பாரதியாருக்கு இன்பமூட்டின. கடையத்தில் பாரதியார் இரண்டாண்டுகள் தங்கினார். அவர் மனநிலை மாறுபட்டிருந்தது. அவருக்கு ஸ்ரீ அரங்கசாமி ஐயங்கார், உதவி இருந்தது. உரிமை, சாதி சமய வேறுபாடு நீக்கல், சமுதாய ஒற்றுமை, பெண்களுக்குச் சம உரிமை, மூடப் பழக்கங்களை அகற்றல், தீண்டாமையை ஒழித்தல் முதலிய பல சீர்திருத்த எண்ணங்கள் அவருக்குத் தோன்றின. அவற்றிற்கேற்ப, அவர் மீசை தாடி வளர்த்து, நாமமிட்டு, நான்கு முழத் துண்டு கட்டிச் சித்தர்போலக் காட்சி அளித்தார். ஆனால் அவர் மனக்கருத்திற் கேற்ப அவரது கொள்கைகளை ஏற்கும் திறத்தினர் கடையத்தில் இல்லை. முஸல்மான்களிடம் சென்று குரான் கூறுவதையும், சாதி சமயம் கடந்து உறவாடுவதையும் கண்ட கடைய மக்கள் பாரதியாரை வெறுத்தனர்; தனிப்பட ஒதுக்கினர். பாரதியாருக்கோ மனநிலை முற்றிலும் மாறிற்று. எல்லோரிடத்தும் ஒரு நிகர் அன்பு; மிருகங்களிடத்தும் எல்லா உயிர்களிடத்தும் இறைவன் உறைகிறான் என்பது அவர் உறுதியாகக் கொண்ட கொள்கை. அவர் தமக்கென வைத்திருக்கும் உணவினைக் காக்கை, குருவிகளுக்கு அளித்து மகிழ்வார்.

திருவனந்தபுரத்தில் பாரதியார் மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்று சிங்கத்தைத் தடவிக் கொடுத்து, 'நீ மிருகங்களுக்கு அரசன், மிருகேந்திரன்; நான் கவிகளுக்கு அரசன். நான் உன்னைக் காணவந்தேன். உன் அன்புடைமையை ஒரு கர்ஜனையால் காட்டு' என்றார். சிங்கமும் கர்ஜித்தது. அவர் வாக்கில் கம்பீரம் இருந்தது; தாழ்மை யில்லை. பாரதியார் தமிழ்க் கலைக் கோயில் கட்டித் தமிழை வளர்க்கவேண்டும் என அவாவினர்; ஆனால், பொருளாதார நிலையும் அக்கால நாட்டு நிலையும் இடந்தரவில்லை. காரைக்குடியில் அவர் செய்த அரிய பிரசங்கங்களில் அவரது புரட்சிகர வாழ்க்கையும் உட்கருத்தும் நன்கு விளங்கும். அவரைத் தென்னாட்டு விவேகானந்தர் என யாவரும் போற்றலாயினர்.

பாரதியார் பழைய நூல்களில் பொருள் விளங்காத செய்யுட்களைப்பற்றிச் சிறிதும் கவலைகொள்வதில்லை. அங்குப் பொருள் விளங்கும் எளிய பாடல்களைப் பாடிச் சேர்த்துக்கொள்வோம் என்பார். ஆனால், பழைய நூல்களிடத்தும் பழம்புலவரிடத்தும் பெருமையோ, மரியாதையோ, மதிப்போ குன்றவில்லை. அவர் குறைவாகப் பழித்துப் பேசியதும் இல்லை. அவர் அறிவிற் சிறந்தவர்; தமக்கு விளங்கவில்லை என்று தம் குறைவு தோன்றவே கூறுவார்.

பாரதியாரைக் கடைய மக்கள் முற்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. பாரதியாரின் புரட்சிகரமான முற்போக்கு, கடைய மக்களுக்கு வெறுப்பைத் தந்தது. அதனாலும், வேறு பல காரணங்களாலும் பாரதியார்

மீண்டும் சென்னைக்கு வந்தார். ஸ்ரீ அரங்கசாமி ஐயங்கார் ஆதரவுபெற்றுச் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியர் ஆனார்.

இதுவே அவருடைய பொற்காலம். பாரதியார் சுவையுள்ள கட்டுரைகளைச் சுதேசமித்திரனில் வெளியிட்டு வந்தார். புதுச்சேரியில் நண்பரோடு உரையாடியவைகளெல்லாம் புது மெருகுடன் மித்திரனில் வெளியாயின. பாரதியார் புதுப்புது இசைகளையமைத்து இனிய எளிய அருஞ் சொற்றொடர்கள் அமைந்தபாக்களை இயற்றித் தமிழ் மக்களுக்கு உணர்ச்சியும் உவகையும் ஊட்டினர். திருவல்லிக்கேணியில் தெளிசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் ஒரு மாடி வீட்டில் குடியிருந்தார். ஸ்ரீ வ. வே. சு. ஐயர் சென்னைக்கு வந்து 'தேசபக்தன்' என்னும் பத்திரிகையை நடத்தி வந்தார். ஸ்ரீ குவளை கிருஷ்ணமாசாரியாரும், **சுரேந்திரநாத் ஆரியாவும், துரைசாமி ஐயரும்** சென்னையில் இருந்தனர். பழைய நண்பர்களான அவர்களோடு மிக இன்பமாகக் காலம் கழித்து வந்தார். தமிழ்ப் பணி செம்மையாக நடந்து வந்தது; புகழும் பரவியது.

அக்காலத்தில் **மகாத்மா காந்தியும் அலி சகோதரரும்** கிலாபத் விஷயமாக நாடெங்கும் சுற்றி வந்தனர். அவர்கள் சென்னைக்கும் வந்தனர். காந்தி மகானை நேரில் பாரதியார் கண்டு உரையாடினர். சமீப காலத்தில் சுதந்திர இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த **சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார்** பாரதியாரைத் தமிழ் **நாட்டுத் தேசியகவி** என அறிமுகம் செய்வித்தார்.

சென்னையில் அடையாற்றிலிருந்த அன்னிபெஸண்டு அம்மையார் பாரதியாரைப்பற்றிக் கேள்வியுற்றார். அவர் பாடல்களைப் படித்தறியும் அவா பெருகியது. அவ்வம்மையார் ஜேம்ஸ் கஸின்ஸ் என்பவரைக் கொண்டு பாரதியாரின் கவிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கச் செய்து படித்து இன்புற்றார்.

பாரதியாரின் பிற்கால வாழ்க்கையில் மாற்றங்கள் சில காணப்பட்டன. அவர் எப்பொழுதும் எட்டெழுத்தை உச்சரித்தவராகவே இருந்தார். நாள் தோறும் திருவல்லிக்கேணியிலுள்ள பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலுக்குச் சென்று வணங்கி வருதலை நியமமாகக் கொண்டார். அக்கோயில் யானைக்குத் தேங்காய் பழம் அளித்துத் தடவிக் கொடுப்பார். யாவரும் அவரை 'யானைத்தோழர்' என்று பெயரிட்டழைத்தனர். ஒரு நாள் யானை மதங் கொண்டிருந்தது. அதனைப் பாரதியார் அறியார். வழக்கம்போலப் பாரதியார் யானைக்குத் தேங்காய், பழம் கொடுத்துத் தடவிக் கொடுத்தார். யானை அவரைத் துதிக்கையால் தூக்கிப் போட்டது. நல்ல வேளையாக காலால் மிதித்துக் கொல்லவில்லை. பாரதியார் யானையின் கால்களுக்கிடையேகுற்றுயிராய்க் கிடக்கிறார் என்றசெய்தி கோயிலிலிருந்த குவளை கிருஷ்ணமாசாரியாருக்குத் தெரிந்தது. அவர் பதைபதைத்து, ஓடோடியும் வந்து பாரதியாரை வெளியே தூக்கி வந்தார். இச்செய்தி நகரெங்கும் விரைவில் பரவிற்று. நண்பர் பலர் வந்து கூடினர். பாரதியாரை மருத்துவச் சாலைக்கு அழைத்துச் சென்றனர். வைத்தியத்தினால் காயம் குணமாக்கப்பட்டது. தேகமெங்கும் ஊமைக்

காயம் கண்டிருந்ததினால் உடலில் வலி மிகுந்தது; உடல் தேறவில்லை. மூன்றுமாத காலம் பாரதியார் நோய்வாய்ப்பட்டு வருந்தினார். 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி இரவு இவ்வுலகில் புகழ் உடலை நிறுவிப் பொன்னுலகு எய்தினர். அவரது பூதவுடல் அழிந்தது; புகழ் உடல் அழியவில்லை. தமிழுள்ளளவும், தமிழருள்ளளவும் பாரதியார் புகழும் நிலைத்திருக்குமெனின் அவர் அமர கவி என்பதில் தடை என்னை? தமிழகத்தில் தோன்றி, மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் மிகுந்து தூங்கும் தமிழரைத் தட்டியெழுப்பத் தமிழிலக்கிய உலகில் புதுநெறி வகுத்துக் கொண்டு, தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்திசூடி, பாப்பாப் பாட்டு, பாரதி அறுபத்தாறு, பாஞ்சாலி சபதம், முரசு, காட்சி, குயில், தேசிய கீதங்கள் முதலிய செய்யுள் நூல்களும், ஞானரதம், சித்தக் கடல், ஜகத் சித்திரம், விடுதலை, பதஞ்சலி யோக சூத்திரம், வேத ரிஷிகளின் கவிதை, கீதை, முன்னுரை, சந்திரிகை, நவதந்திரக் கதை, தராசு என்ற உரைநடை நூல்களும் இயற்றித் தந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தையாக விளங்கிய பாரதி தமிழகப் பெரியார் ஆவர்.

# 2. பண்டித நாவலர் வேங்கடசாமி நாட்டார்

'சோழ வளநாடு சோறுடைத்து' என்று ஆன்றோர் கூறுவர். அந்நாட்டை வளப்படுத்துவது பாவலர் போற்றுங் காவிரியாறு. கோசல நாட்டைக் கூற வந்த கம்பர் 'காவிரி நாடு அன்ன கழனி நாடு' என்று கூறுகிறார். வான் பொய்ப்பினும் தான் பொய்யாது அளித்தலால் காவிரிக்குப் 'பொன்னி' என்றும், அந்நாட்டிற்குப் 'பொன்னிநாடு,' 'காவிரிநாடு' என்றும் பெயர்களுண்டு. கங்கையிற் புனிதமாகிய காவிரி, சோழவள நாட்டில், வெண்ணாறு, வெட்டாறு, அரசிலாறு, குடமுருட்டி, வீரசோழன், கோரையாறு, பாமணியாறு என்னும் பெயர்களோடு பல கிளைகளாகப் பிரிந்து பரந்து பாய்ந்து நிலத்தில் வளம் கொழித்து வேளாண்மையை மிகுத்துப் பொன்னைக் கொழிக்கின்றது. அதனால் சோழ நாட்டை ஆண்ட சோழர்களுக்கு 'வளவர்' என்ற பெயரும் உண்டு.

சோழ நாட்டில் ஊர்கள் பல. ஊர்களெல்லாம் மிக்க செழிப்புள்ளனவாகும். அந்நாட்டில் திருவையாறு ஒரு சிறந்த சிவத்தலம். தஞ்சாவூருக்கு வடக்கே ஆறு கல் தூரத்தில் காவிரிக்கரையில் அமைந்தது. தஞ்சாவூருக்கும் திருவையாற்றிற்கும் இடையே ஐந்து ஆறுகள் உள்ளன. நிலம் எவ்வளவு செழிப்பாக இருக்கும் என்பதைக் கூறவேண்டுமோ? திருவையாற்றிலிருந்து மாயூரம்வரை நிலம் மிக்க வளப்பம் வாய்ந்தது. கிராமங்கள்



ந. மு. வேங்கடசாமி நாட்டார்

பல ஒன்றற்கொன்று மிக நெருங்கி அமைந்துள்ளன. தேவாரப் புலவர் பாடிய திவ்வியத் தலம் திருவையாறு. அங்குப் பெரிய கோயில் உள்ளது. இராஜராஜ சோழனுக்கு மனைவியான உலோகமாதேவியால் கட்டப்பட்டது. ஆதலால் 'லோகமாதீச்சரம்' என்ற பெயர் கொண்டது. தியாகராஜர் வாழ்ந்தது அவ்வூரிலேதான். திருவையாற்றைச் சுற்றிலும் வளப்ப மிக்க கிராமங்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்று **நடுக்காவேரி**. அது சிற்றூர் எனினும் அறிஞர் பலர் விரும்பி வாழும் பெருமை வாய்ந்தது.

நடுக்காவேரியில் பல்வேறு குடியினர் வசித்து வந்தனர். அவர்களுள் **நாட்டார்** மரபினர் ஒருவராவர். நாட்டார் என்பார் கள்ளர் வகுப்பைச் சார்ந்தவர். கள்ளர் என்ற உடனே திருடும் தொழிலுடையார் என்றுகொள்ளல் தவறு. கள்ளர், மறவர், அகம்படியர் முதலான குலத்தவர் எல்லாரும் வீரம் மிக்கவர்; நாட்டைக் காப்பவர்; படைத்தலைமை பூணும் பேறுடையார். கள்ளர்மரபினர் மன்னராக இருந்து மாநிலம் புரந்திருந்தனர் என்பது தமிழ் நூல்களில் அறியலாம். பெரிய புராணத்தில் கூறப்படும் **கூற்றுவ நாயனர்** கள்ளர் மரபினரே. பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான **திருமங்கை மன்னன்** கள்ளர் மரபினரே. புதுக்கோட்டை மன்னர் கள்ளர் மரபினரே. கள்ளர் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் சிற்றரசராகவும் ஜமீன்தாராகவும் இருந்தனர் என்பதை நூல்களின் வாயிலாய் அறியலாம். நாலடியாரில் **பெருமுத்தரையர்** என்பாரைப் பற்றிப் பேசப்படுகின்றது. அப்பெருமுத்தரையர் நடுக்காவேரிக்கு அருகிலுள்ள

செந்தலை என்னும் இடத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட கள்ளர் குலத்தினரே யாவர். எனவே, கள்ளர் அறிவும் ஆற்றலும் வாய்ந்தவராய்த் தமிழகத்தில் வாழ்ந்த பழங்குடியினராவர்.

நடுக்காவேரியில் வாழ்ந்த கள்ளர் மரபினருள் ஒரு வகுப்பினர்க்கு நாட்டார் என்ற பட்டப் பெயருண்டு. அப்பெயராலேயே அவ்வகுப்பினரின் முன்னோர் தமிழரசர் காலத்தில் நாட்டையாள்வதில் பங்கெடுத்துக் கொண்டவர் என்று உணரலாம். அத்தகைய நாட்டாருள் முத்துசாமி நாட்டார் என்பவர் ஒருவர். முத்துசாமி நாட்டார் குடும்பத்திற்குப் போதிய அளவிற் நிலபுலம் இருந்தது. அக்காலம் உத்தியோகத்தில் மோகங் கொள்ளாத காலம். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்', 'சிரைத்தேடின் ஏரைத்தேடு', 'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை' என்பவாய ஆன்றோர் மொழிகட்கு இணங்கப் பயிர்த்தொழில் புரிந்து வாழ்க்கையை இன்பமாக நடத்தி வந்தார் முத்துசாமி நாட்டார். அவர் ஒழுக்கத்தில் குன்றாதவர். கல்வி கேள்விகளிலும் சிறந்தவர்; நடுநிலை தவறாதவர்; கிராமத்தில் நடக்கும் பொதுக்காரியங்களில் பங்கெடுத்துக்கொண்டு நலம் பல புரிவர். முத்துசாமி நாட்டார் அறிவு ஆற்றல் மிக்கவர்; தமிழ்ப் புலமையும் சோதிடப் புலமையும் பெற்றிருந்தார்; தெய்வபக்தி மிக்குடையவர். அவர் நன்னெறியில் ஒழுகி இல்லறநெறி வழுவாது வாழ்ந்து வந்தார். அவருக்கு அருமைப் புதல்வராய் 1884-ஆம் ஆண்டு, ஏப்ரல்மாதம் நான்காம் தேதி **வேங்கடசாமி நாட்டார்** பிறந்தார். சில ஆண்டுகட்குப்பின் மற்றொரு புதல்வர் பிறந்தார். அவ

ருக்குக் **கோவிந்தராஜ நாட்டார்** என்று பெயர். சைவத்தில் ஊன்றிய பற்றுடைய முத்துசாமி நாட்டார் தம்பிள்ளைகளுக்குத் திருப்பதிமலைமேலுள்ள பெருமாள் திருநாமத்தையும், அடிவாரத்திலுள்ள பெருமாள் திருநாமத்தையும் இட்டுள்ளதை நோக்கும் பொழுது அவர் வைணவத் துவேஷம் அற்றவர் என்பது விளங்கும். அவர் பல யாத்திரை சென்று வந்தவர். ஆதலின், திருப்பதி யாத்திரை சென்று வந்த பின்னர் பெற்றெடுத்தவர் என்று கருதி அப்பெயர் வைத்திருக்கலாம்.

வேங்கடசாமி நாட்டார் இளம்பருவத்தி லிருந்தே தந்தையால் சிறந்த நெறியில் வளர்க்கப்பட்டார். ஆறாவது வயதில் அவர் அவ்வூரிலிருந்த திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். பின்னர்ப் பொதுக்கல்வியையும் அவ்வூர் ஆரம்பப் பாடசாலையில் பெற்றார். தந்தையார், வேங்கடசாமி நாட்டாரைக் கோயிலுக்கும் புராணப் பிரசங்கங்களுக்கும் தம்முடன் அழைத்துச் செல்வார். முத்துசாமி நாட்டாருக்குத் திருத்தமாகப் பேசும் பழக்கம் உண்டு. அப்பழக்கமே மைந்தருக்கும் உண்டாயிற்று. "தமிழ் மக்கள் தம் மொழியைத் திருத்தமாகப் பேசவேண்டும். கொச்சைத் தமிழால் மொழி சிதைகிறது; அதனால் சுவை குறைகிறது; இனிமை மறைகிறது; ஆற்றல் அழிகிறது; அழகு கெடுகிறது; வீரம் குலைகிறது. கொச்சைத் தமிழால் மொழிக்கொலை யுண்டாகிறதேயன்றி வேறு பயன் இல்லை. எளிய சொற்களை இனிமையாகவும் திருத்தமாகவும் பிறர்க்கு நன்கு விளங்கும்படியும் பேசலாம். மொழியின் வளர்ச்சியும் ஆக்கமும் ஒரு சிலரால் திருத்த

மாக எழுதும் முறையில் மட்டும் அமைந்தால் விளக்க முறு. எல்லோரும் மொழியைத் திருத்தமாகப் பேச வேண்டும். அதுவே நாகரிகத்தின் சின்னம் என்ருல் பிழையில்லை. மொழிக்கும் மக்களுக்கும் ஏற்றம் உண் டாகும். தமிழ்ப் பேச்சு, தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொருவிதமாக வழங்குகின்றது. தாய் தந்தையரும், ஆசிரியரும், மற்றப் பெரியோரும் யாவரிட மும் திருத்தமாகவே பேசுவது என்று விரதங்கொண் டால் விரைவில் யாவரும் திருத்தமாகப் பேசமுடியும்''.

முத்துசாமி நாட்டார் புகழுடையவர். அவரைக் காணப் பலர் வருவர். அவர் அரிய நூற்பொருள்களைப் பற்றிப் பேசுவார். அக்காலத்தில் வேங்கடசாமி நாட் டார் சிறுவராயினும் தந்தையுடன் அமர்ந்து கூர்ந்து கேட்பார்; தமக்கு விளங்காதவற்றைப் பின்பு தந்தை யைக் கேட்டுத் தெரிந்துகொள்வார். பல விஷயங்களைப் பெரியோர் சொல்லக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண் டும் என்ற ஆர்வம் சிறுவராகிய வேங்கடசாமி நாட்டா ரிடமிருந்தது என்று தெரிகிறது. இதுவன்ருே முன் னேற்றமடைதற்குரிய சிறுவரிடம் காணப்பட வேண் டிய அறிகுறி? வீட்டுத் திண்ணையில் இராமாயணமோ, பாரதமோ, கந்தபுராணமோ, பாகவதமோ படிக்கப் பட்டுப் பொருள் சொல்லப்படும்; முத்துசாமி நாட்டா ரும் பொருள் சொல்வார்; பிறரும் பொருள் சொல்வர். அக்காலத்தில் வேங்கடசாமி நாட்டார் உடனிருந்து கேட்பார். பாடல்களைப் படிப்பதற்கு ஆள் கிடைக்காத பொழுது வேங்கடசாமி நாட்டார் செய்யுட்களை இசை யோடு இனிமை தோன்றப் படிப்பார். முத்துசாமி

நாட்டாரின் இளவலான **சொக்கலிங்க நாட்டார்** என்பார் இசைப் பயிற்சியும் தமிழ்ப் புலமையும் வாய்ந்தவர். அவரிடம் வேங்கடசாமி நாட்டார் பெற்ற பயிற்சியே செவ்விய முறையில் இனிமை தோன்றச் செய்யுட்களைப் படிக்கும் ஆற்றலை அளித்தது.

அவ்வூரிலுள்ள பள்ளிக்கூடப் படிப்பு முடிந்த பின் வேங்கடசாமி நாட்டார் தந்தையர்க்கு உதவியாகப் பயிர்த் தொழிலில் ஈடுபட்டார். பெற்ற தந்தையும், சிறிய தந்தையும் தமிழ்ப் புலவர்களாக இருந்ததால் அவர்களிடத்துத் தமிழ் நூல்களைப் பாடங் கேட்டு வந்தார். அவ்விளம் பருவத்திலேயே வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி, இந்த நேரத்தில் இன்ன இன்ன வேலையைச் செய்வதெனத் திட்டம் வகுத்துக் கொண்டார் வேங்கடசாமி நாட்டார். பிள்ளையிடம் சீரிய ஒழுங்கும், நேர்மையும், கல்வியில் விருப்பும் கண்ட முத்துசாமி நாட்டார் தம் மைந்தருக்கு நீதி நூல்களையும், நிகண்டு முதலான கருவி நூல்களையும் முறைப்படி கற்றுக் கொடுத்தார். பின்னர் அந்தாதி, மாலை, உலா, பிள்ளைத் தமிழ், தூது, பரணி முதலான பிரபந்த வகைகளில் பலவற்றையும் வேங்கடசாமி நாட்டார் பாடங் கேட்டார்; சிலவற்றைத் தாமே உழைத்துப் படித்துணர்ந்தார். அவ்வாறு கற்று வந்ததால் அவர்க்குத் தமிழில் ஆர்வமும் ஊன்றிய ஞானமும் உண்டாயின.

பிரபந்தங்களைக் கற்பது இக்காலத்தில் அருகி விட்டது. காவியங்களில் கூறப்படும் அரிய செய்திகள் எல்லாம் எளிய நடையில் பிரபந்தங்களில் அமைந்

துள்ளன. நிகண்டு கற்றலால் கடின பதங்களுக்கு உடனே பொருள் விளங்கும்; அகராதி வேண்டுவ தில்லை. பிரபந்தங்களைப் படித்ததால் பதப் புணர்ச்சி, பதப்பிரிவு, சொல்லாட்சி, முதலியன நன்கு விளங்கும். அவற்றைப் பாடம் செய்ததால் பல அரிய கருத்துக்கள் மனத்தில் பதிகின்றன. அக்கருத்துக்களே காவியங் களான பேரிலக்கியங்களில் காணப்படும்பொழுது எளி தில் விளங்குவதோடு இன்பமு முண்டாகின்றது. பல பிரபந்தங்களைப் படித்த பயனாக எளிதில் சொற்களை எடுத்து ஆளும் திறன் ஏற்படுகிறது. கற்பனையும், தோன்றும் கருத்தை வெளிப்படுத்தற்குரிய சொற் பிர யோகமும் உள்ள காலத்தில் கவியமைத்தல் எளிதா கின்றது. முறையாகப் பிரபந்தங்களை மட்டும் நல்லா சிரியரிடம் பாடங்கேட்டுப் பெரும் புலவர்களாய் விளங் கியோரும், பிரபந்தங்களைமட்டும் இயற்றிப் பெரும் புலவர்களாய் விளங்கியோரும் உண்டு. ஒட்டக்கூத்தரும், ஐயங்கோண்டாரும் காவியங்கள் பாடவில்லை; பிரபந் தங்களை இயற்றினர். சிவப்பிரகாசர், குமரகுருபரர் முதலி யோரும் அத்தகையரே. அன்னார் புகழ் தமிழ் மொழி வழங்குமளவும் நிலைபெற்றிருப்பதன்றோ?

பிரபந்தங்களை முறையாகப் பாடங்கேட்ட வேங் கடசாமி நாட்டார் இலக்கண நூல்களையும் கற்கவிரும்பி பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலைத் தந்தையா ரிடம் பாடம் கேட்டார் அந்நூல் சூத்திரங்களை யெல் லாம் மனப்பாடம் செய்தார்; பின்னர் யாப்பிலக்கணத் தையுங் கற்றார். தந்தையாரிடம் வேங்கடசாமி நாட் டார் நளவெண்பா, திருவிளையாடற் புராணம் என்ற

நூல்களைப் பாடங் கேட்டார். அவருடைய திருத்தமான பேச்சையும், ஒழுங்கான முறையையும், கல்வியின் ஆர்வத்தையும், கூரிய அறிவையும் அறிந்த அவ்வூரார் அனைவரும் அவரைப் புகழ்ந்தனர். வேங்கடசாமி நாட்டாரை இனி **நாட்டார்** என்றே வழங்குவோம்.

'சாவித்திரி வெண்பா' என்ற நூலை இயற்றிய **ஐ. சாமிநாத முதலியார்** என்பவர் நடுக்காவேரிக்குச் சென்றால் முத்துசாமி நாட்டாரைப் பார்க்காமல் செல்வதில்லை. அவர் தமிழ் நூலில் காணும் அரிய விஷயங்களைப்பற்றி நெடுநேரம் பேசிக் கொண்டிருப்பார். அக்காலங்களில் நாட்டாரும் உடனிருந்து கூர்ந்து கவனிப்பார். சாமிநாத முதலியார், நாட்டாரின் தமிழ் அறிவையும் நுண்மதியையும் கண்டு, ஒரு சமயம் அவரை நோக்கி, "**பாண்டித்துரைத் தேவர்** மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியுள்ளார். அச்சங்கத்தில் பிரவேச பண்டித, பால பண்டித, பண்டித தனித் தேர்வுகள் உண்டு. அத்தேர்வுகளுக்குப் படிக்கலாமே," என்றார். நாட்டார் மனத்தில் தமிழ்க் கனல் ஒளிவிசத் தொடங்கியது. அத்தேர்வுகளுக்குப் படிக்கும் அவா பிறந்தது. அவ்வளவே! நாட்டார் படிக்கத் தொடங்கினார்.

நாட்டார் பிரவேச பண்டித பரீட்சைக்குரிய நூல்களை முயன்று, 'இன்னும் பத்து மாதங்களே உள்ளன' என்ற நிலையில் படிக்கத் தொடங்கினார்; தந்தையாரிடம் பெற்ற கல்வியின் துணைகொண்டு படிக்கலானார். பயிர்த்தொழிலை விடுத்தார். தந்தை

யாரும் மைந்தரின் கல்விப்பற்றை அறிந்து ஒன்றும் கூறுது. யாவற்றையும் தாமே கவனித்துக் கொண்டார். நாட்டார் முயன்று படித்துப் பிரவேசப் பண்டித பரீட்சையில் முதல் வகுப்பில் இரண்டாம் மாணவராகவும், இலக்கணத்தில் முதல் மாணவராகவும் 1905-ஆம் ஆண்டு தேறினர்; இரண்டிற்குமுரிய பரிசுகளைப் பெற்றார். நடுக்காவேரிக் கிராமத்திலுள்ளார் அனைவரும் அது கேட்டு மகிழ்ந்தனர். 1906—ஆம் ஆண்டு முன்போலவே, பால பண்டித பரீட்சைக்குரிய நூல்களை வாங்கி வைத்துக்கொண்டு தாமாக முயன்று படிக்கலானர். இரண்டு ஆண்டுகள் பள்ளியில் சேர்ந்து படிக்க வேண்டிய பாடத்தைக் கற்பிப்பாரின்றித் தாமே உழைத்துக் கற்றுப் பரீட்சை எழுதினர். இத்தேர்விலும் சிறப்பாகத் தேறிப் பரிசு பெற்றார். அவ்வாண்டில் அப்பரீட்சையில் முதல் வகுப்பில் தேறியவர் நாட்டார் ஒருவரே. கற்பிப்பார் இல்லாத கிராமத்திலிருந்து கொண்டு, தாமாக முயன்று படித்து முதன்மையாக வருவதென்றால் எளிதோ? இவற்றால் நாட்டாரது பேருழைப்பும், நுண்மதியும் விளங்குகின்றது. முத்து நாட்டாருக்கு எவ்வளவு ஆனந்தம் உண்டாயிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்! மைந்தர் பெறும் சிறப்பெல்லாம் பெற்றோர்க்குப் பெருமையையும், புகழையும் ஆனந்தத்தையும் அளிக்குமன்றோ!

பண்டித பரீட்சைக்கு 1907-ல் செல்வதெனஉறுதி கொண்டு நாட்டார் மிக முயன்று படித்தார். இத்தேர்வுக்குப் பால பண்டித பரீட்சைக்குப்பின் இரண்டாண்டுகள் படித்தல் வேண்டும். இத்தேர்விற்குத் தொல்காப்

பியம், யாப்பருங்கல விருத்தி, மாறனலங்காரம் என்ற பேரிலக்கண நூல்களும், புறநானூறு, அகநானூறு, பதிற்றுப் பத்து முதலான சங்க இலக்கியங்களும் பிற காவியங்களும் பாடமாகும். சங்க நூல்களையும் பேரிலக்கணங்களையும் பாடம் சொல்லுவார் அவ்வூரில் இல்லை. சந்தேகம் தெளிவிப்பாரும் இல்லை. அந்நூல்களைப் பழைய உரைகளுடன் படிக்கவேண்டும். உரைகளோ நூல்களைவிடக் கடினமானது. இந்நிலையில் ஆசிரியர் இன்றித் தம் மதியையே தமக்குத் துணையாகக்கொண்டு உண்மை உழைப்பும் ஊக்கமுமே பற்றுக் கோடாக நாட்டார் படித்துப் பண்டித தேர்வில் தாம் ஒருவரே முதல்வராகத் தேறினர். அத்தேர்வுக்குரிய முதல் வகுப்புப் பரிசாகிய தங்கத் தோடாவையும் அவர் பெற்றார். அன்றுமுதல் **பண்டித மு. வேங்கடசாமி நாட்டார்** என்றழைக்கப் பெற்றார். தமிழகமெங்கும் அவர் பரிசு பெற்ற செய்தி பரவிற்று. யாவரும் அவரை வாழ்த்தினர்.

நாட்டார்க்கு இருபத்து மூன்றாம் வயதில் மணம் செய்வித்தனர். நாட்டாரின் குணநலன்களுக்கு ஏற்ற அவ்வம்மையார் அவரது அறிவின் திறத்தை அறிந்திருந்தனர். தாய் தந்தையர் மிக்க மகிழ்ச்சி கொண்டனர்.

திரிசிராப்பள்ளியில் 'பிஷப் ஹீபர் காலேஜ்' என்ற கல்லூரி இருந்தது. இப்பொழுது அது உயர்தரக் கலாசாலையாக உள்ளது. அந்தக் கல்லூரியில் **பிச்சை இப்ராஹிம் புலவர்** என்பார் தமிழ் ஆசிரியராக இருந்தார். கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஒருங்கு வாய்ந்தவர். எனவே, இப்ராஹிம் புலவர் பொருள் கருதி

அவ்வேலையை ஏற்றுக் கொண்டாரல்லர். தாம் கற்ற தமிழை மாணவர்கட்கு இன்பமாக அளிக்க எண்ணியே அப்பதவியை ஏற்றுக்கொண்டார். அவர் யாவர்க்கும் அஞ்சாதவர். மெத்தை தைத்த வில்வண்டியில், சதங்கைகளும், மணியும் அணிந்த இருமாடுகள் பூட்டப் பெற்றுக் "கலீர், கலீர்" என்ற ஒலியுடன் பள்ளிக்கு வருவார். இப்பெரும் புலவர், டாக்டர் சாமிநாத ஐயருக்கு நெருங்கிய நண்பர்.

பிச்சை இப்ராஹீம் புலவர் கம்பராமாயணத்தை மிக ஆழ்ந்து துருவித் துருவி நுணுக்கமாகக் கற்றிருந்தார். மிக அருமையாக அவர் அந்நூலைப் பாடம் சொல்வார். அவர் பாடம் சொல்லும்பொழுது பிற கல்லூரி மாணவர்களும் விரும்பி வந்து கேட்பார்கள். 1908-ஆம் ஆண்டு அவர் சில மாதம் விடுமுறை எடுக்க நேர்ந்தது. கல்லூரித் தலைவரான ஆலன். எப். கார்டினர் என்பார், தக்கார் ஒருவரை அப்பதவியில் வைத்து விட்டுச் செல்லுமாறு புலவரை வேண்டிக் கொண்டார். அதற்கு அவரும் இசைந்தார்.

நாட்டாரவர்கள் மதுரைச் தமிழ்ச் சங்கத்துப் பண்டித பரீட்சையில் முதன்மையாகத் தேர்வுபெற்றது பிச்சை இப்ராஹீம் புலவருக்குத் தெரியும். செந்தமிழ்ப் பத்திரிகை வாயிலாகவும் அவரை அறிந்திருந்தார். உடனே புலவர் நாட்டாருக்குத் தன்னைக் காணுமாறு ஒரு கடிதம் எழுதினார்; நாட்டார் அவர்களும் வந்து இப்ராஹீம் புலவரைக் கண்டார். நாட்டாரிடம் தம் வேலையை ஒப்படைத்துவிட்டுப் புலவர் விடுமுறை பெற்றுச் சென்றார்.

வேங்கடசாமி நாட்டார் பெரு மகிழ்ச்சியோடு வகுப்பினை எடுத்துக் கொண்டார். நாட்டாரவர்கள் நன்கு படித்தவராதலாலும், இப்ரஹீம் புலவரைப் போலவே இசையோடு பாடவல்லவர் ஆதலாலும், திருத்தமாகப் பேசும் திறன் படைத்தவர் ஆதலாலும், மிகச் செம்மையான முறையில் பாடங்கள் நடத்தி வந்தார். அது கல்லூரித் தலைவருக்குப் பெரு மகிழ்ச்சியை அளித்தது. நாட்டாரவர்களைப் பற்றிய செய்திகளை மாணவர்கள் நன்குணர்ந்தனர். மற்றும் அவரது திருத்தமான பேச்சும், தூய ஒழுக்கமும், கற்பிக்கும் ஆற்றலும் மாணவர் உள்ளத்தைப் பிணித்தன; அவர்பால் அளவற்ற மதிப்பினை உண்டாக்கின. நாட்டாரவர்கட்கு நற்பெயர் கிடைத்தது. அதனைக் கண்டு பிச்சை இப்ரஹீம் புலவர் பெரிதும் மகிழ்ந்தார். ஊரிலுள்ளார் நாட்டாரின் திறமையைக் கேட்டுச் சைவப் பிரசங்கங்களும் இலக்கியச் சொற்பொழிவுகளும் ஆற்றுமாறு வேண்டினர். நாட்டாரவர்களும் அவ்வாறே பிரசங்கங்கள் செய்தார். அவற்றால் அவர் புகழ் மேன்மேலும் பரவியது; அவரை அறியாதார் இலராயினர்.

1909-ல் பிச்சை இப்ரஹீம் புலவர் திரும்பி வந்து தன் உத்தியோகத்தை ஏற்றார். நாட்டாரவர்கள் கோயம்புத்தூரில் செயின்ட் மிக்கேல் உயர்நிலைப் பள்ளிக்குத் தமிழாசிரியராகச் சென்றார். அங்கும் நாட்டாரவர்கள் நற்பெயர் பெற்றார்; பிரசங்கங்கள் புரிந்தார். 1910-ல் பிச்சை இப்ரஹீம் புலவர் கல்லூரியினின்றும் விலகினார். அப்பதவிக்குத் தக்கவர் நாட்டாரவர்களே என்று கல்லூரித் தலைவர், கார்டினர் அறிந்திருந்தாராத

லால், அவர் நாட்டாரவர்களை வரவழைத்து அப்பதவியை அளித்தனர். 1910-முதல் 1933-வரை நாட்டாரவர்கள் நிலையாக அக்கல்லூரியிலிருந்து தமிழ்போதித்து வந்தார். அவ் இருபத்துநான்கு ஆண்டுகளிலும் கற்ற மாணவர்கள் மிகவும் சிறப்பாக நாட்டாரவர்களின் புலமையைப் பற்றியும், கற்பிக்கும் ஆற்றலைப்பற்றியும் கூறுவர். அவர் தமிழ் கற்றோர் யாவரும் தமிழ்ப்பற்று மிக்குடையவர்களாய் விளங்குவராயினர்.

மலைக்கோட்டையில் நாட்டாரவர்களுக்கு வீடு அமைந்தது. அவர் வீட்டிற்கு எதிரில் திருநாவுக்கரசர் மடம் ஒன்று உண்டு. அம்மடத்தில் நாட்டாரவர்கள் இலக்கண வகுப்புக்கள், இலக்கிய வகுப்புக்கள் என்பன ஏற்படுத்தி இளைஞருக்கு முறையாகப் பாடம் சொல்லி வந்தார். அக்காலத்தில் அவரிடம் கற்ற மாணவர்கள் பலர் இன்றும் அருந்தமிழ்ப் புலவர்களாய் இருந்து வருகின்றனர். அவர்களுட் சிலர் மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்விலும் வெற்றி பெற்றுள்ளனர். வேறு சிலர் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பரீட்சையில் தேறிப் பட்டம் பதவிகளோடு வாழ்கின்றனர். அக்காலத்தில் பிரசங்கங்கள் புரிதலும், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், செந்தமிழ் என்ற பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் எழுதுதலும், மாணவர்களுக்குப் பாடம் சொல்லுதலும் ஆகிய தொண்டுகளை நாட்டாரவர்கள் செய்து வந்தார். சைவசித்தாந்தம், இலக்கியம், இலக்கணம், நூலாராய்ச்சி முதலான விஷயங்களைப்பற்றியே நாட்டாரவர்களின் சொற்பொழிவுகளும், கட்டுரைகளும் அமையும். அவைத் தலைமை தாங்கிக் கூட்டங்

களை நடத்திவைப்பதில் நாட்டாரவர்கள் மிகத் திறமை பெற்றவர்கள். அவர் புகழ் தமிழ் நாடெங்கும் பரவியது.

செட்டி நாட்டு அரசரான **ராஜா. ஸர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள்** தம் பெயரால் **சிதம்பரத்தில் பல்கலைக் கழகம்** ஒன்றை ஏற்படுத்தி, அவ்விடத்திற்கு **அண்ணாமலைநகர்** என்று பெயரிட்டார். அங்கே பெரிய பெரிய கட்டடங்கள் கட்டினார். அங்குத் தமிழ் வித்துவான் வகுப்புக்கள் தொடங்கப் பெற்றன. தமிழைச் செவ்வையாகப் போதிக்கும் தமிழ் நாட்டிலுள்ள தலை சிறந்த புலவர்கள் எல்லோரும் ஒருங்கு சேர்க்கப்பட்டனர். நாட்டாரவர்களும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துப் புலவர் குழாத்துள் ஒருவராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். 1933-ஆம் ஆண்டு நாட்டாரவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராய் அமர்ந்து தமிழ் போதிக்கலானார். அங்குத் திருவாளர் **சோமசுந்தர பாரதியார்**, மகாவித்துவான் **ராகவ அய்யங்கார்**, பண்டித மணி மு. **கதிரேசன் செட்டியார்**, சர்க்கரை **இராமசாமிப்புலவர்** முதலியோருடன் நாட்டாரவர்களும் நெருங்கிப் பழகித் தமிழை ஆராய்ந்து போதித்து வந்தார். 1940-ல் நாட்டாரவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை விடுத்து ஓய்வு கொண்டார்.

நாட்டாரவர்கள் தம் காலம் முழுவதும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தோடும் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். சைவ சித்தாந்தக் கூட்டங்களிலும், இலக்கியக் கூட்டங்களிலும் நாட்டாரவர்களின் தொடர்பு இராமல் இரா. நாட்

டாரவர்கள் சொற்பொழிவுகள் பொருள் விசேடம் அமைந்தவையாதலால் புலவர் பெருமக்கள் நிறைந்து கூடி விழைந்து கேட்பர். ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வற்றைப் பத்திரிகைகளில் வெளியிட்டார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் தமிழ்க் கல்லூரித் தலைவராக ஓராண்டு வேலை பார்த்தார். சென்னைப் பல்கலைக்கழகத் தில் தமிழ்ப் பாடதிட்டக் குழுவினருள் ஒருவராகவும் நாட்டாரவர்களிருந்து அரிய தமிழ்ப்பணி புரிந்துள்ளார். **கபிலர், நக்கீரர், வேளிர்வரலாறு, கள்ளர் சரித்திரம், சோழர் வரலாறு, கண்ணகி வரலாறு, கற்புமாண்பும்** என்னும் நூல்களை எழுதி வெளியிட்டார். திருவிளையாடற் புராணம், சிலப்பதிகாரம், மணிமேகலை, இனியவை நாற் பது, இன்னாநாற்பது என்னும் நூல்களுக்கு உரைகள் எழுதி வெளியிட்டார். யாப்பருங்கலக்காரிகை என் னும் நூலைப் பதிப்பித்தார். கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவரான **ரா. வேங்கடாசலம் பிள்ளை** அவர்களுடன் சேர்ந்து அகநானூற்றிற்கு அரிய உரை எழுதி வெளி யிட்டார்.

நாட்டாரவர்களுக்கு **நடராசன்** என்ற மைந்தனும் இரு பெண்மக்களும் உண்டு. நடராசன் எம். ஏ. பட்டம் பெற்று உத்தியோகத்தில் அமர்ந்துள்ளார். பெண்கள் இருவரையும் மணந்த மருமக்கள் இருவரும் வித்துவான் பட்டம் பெற்றவர் ஆவர். மூத்த மகளான **பார்வதி யம்மையார்** வித்துவான் பட்டம் பெற்றவர். நாட்டா ரவர்களின் குடும்பமே தமிழ்ச் சுவையை நன்குணர்ந்த குடும்பம்.

நாட்டாரவர்கள் வாழ்க்கையில் அறியத்தக்க அரிய செய்திகள் பல உண்டு. அவர் காலை எழுந்து நீராடித் திருநீறணிந்து மலைமீதமர்ந்த தாயுமானவரைத் தரிசிக்கத் தவறார். திருவாசகத்திலும் திருக்கோவையாரிலும் நாட்டாரவர்களுக்கு மிக்க ஈடுபாடு. தாயுமானவர் திருமுன் நின்று கண்கள் நீர் சொரியத் தம்மை மறந்து தேவார திருவாசகங்களை அகங் குழைந்து இனிய குரலில் பாடும் அற்புதக் காட்சி யாவர் மனத்தையும் குளிரச் செய்யும். நீறின்றி அவர் நெற்றி யிராதெனில் அவரது திருநீற்றுப்பற்று எத்தன்மையது என்பது விளங்கும். புன்முறுவல் பூத்த முகத்தோடு யாவரிடத்தும் மெல்லிய குரலில் இனிய மொழிகளால் அமைதியோடும் திருத்தமாகவும் பேசும் இயல்பு நாட்டாரிடம் காணலாம். சிறுவர் முதல் பெரியோர் ஈறாக யாவரிடத்தும் அவர் மிக்க மரியாதையாகப் பேசுவார். அவர் தோற்றம் மிக்க கம்பீரமானது; அவரது நேர்மையை விளக்குவது. கற்பிப்பாரின்றித் தாமாகவே ஆய்ந்தாய்ந்து உழைத்துப் படித்து நுட்பங்களை நன்குணர்ந்து உயர்நிலை எய்தியவர் நாட்டாரெனில், வருந்தியுழைத்தால் மேன்மை எய்தலாம் என்ற பாடத்தை அவர் வரலாறு தமிழ் மாணவர்கட்கு அறிவுறுத்தும். தம் வாழ்நாளில் உடல் நலமும் கருதாது, தமிழ்ப்பணி புரிந்து தமிழிற்கும், தமிழகத்திற்கும், கள்ளர் மரபிற்கும் அழியாப் புகழைத் தேடித் தந்த பெரியார் ந. மு வேங்கடசாமி நாட்டாராவர்.


---

# 3. திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளை

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே."

என்பது ஆன்றோர் வாக்கு. மானிடம் பெற்றோர் யாவரும் நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் உடையவராய்த் திகழ்தல் வேண்டும். மக்களை மாக்களினின்றும் பிரிப்பது அறிவே. அறிவால் எய்துவன பல; அவற்றுள் சிறந்தது நாகரீகம். அறிவும் நாகரீகமும் வாய்ந்து மானிடம் பெற்றதின் பயனை அடைவதற்கு வேண்டுவன செய்து கொள்வதே மக்கள் தம் கடமையாகும்.

தாய் நாட்டின்மீது பற்றில்லாதவன் தாயினிடம் பற்றில்லாதவனே ஆவான். தாய்மொழியின்மீது பற்றுண்டாக அம்மொழி பேசும் மக்களுக்கு, ஆய்ந்து செய்யத் தக்க நலன்களைச் செய்து அழியாப் புகழ் பெற்றோர்களே என்றும் மக்கள் நெஞ்சில் நிலைத்து வாழ்பவராவர். அன்னார் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் ஓயாது உழைத்து, இடுக்கண் வந்தக்காலும் தாங்கி எதிர்த்து நின்று நாடு, மொழி, மக்கள் நலம் கருதி வாழ்ந்தோர் ஆவர். அது செயற்கருஞ் செய்கை அல்லவா? அத்தகைய பெரும் பணியை மேற்கொண்டு, நாடு, மொழி மக்கள் நலங் கருதித் தொண்டாற்றி அழியாத புகழ் எய்திய வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளை ஆவர்.



வ. உ. சிதம்பரம் பிள்ளை

பாண்டிய நாட்டின் பெருமையும் பழமையும் பகர்தற்கு அரியது. பொருநை நதி பாயப்பெறுதலால் பல வளங்களும் பெற்று விளங்குவது. தொன்று தொட்டே வீரத்தில் சிறந்து விளங்குவது. **பாஞ்சாலங் குறிச்சி** என்பது பாண்டிய நாட்டிலுள்ளதோர் ஜமீன். அந்த ஜமீன் தலைவரான **கட்ட பொம்மனை** அறியாதார் யார்? அவன் சரித்திரம் வீரச் சுவையை ஊட்டுவதொன் றன்றோ! அப் பாஞ்சாலங்குறிச்சிக் கடுத்திருப்பது **ஓட்டப்பிடாரம்.** அதனை **அளகாபுரி, அளகை** என்ற பெயர் களாலும் அழைப்பர். அந்நகரில் **உலகநாதப் பிள்ளை** என்பார் ஒருவர் நியாயவாதியாய் இருந்தார். அவர் மனைவியார் **பரமாயி** என்னும் பெயரினர். உலகநாதப் பிள்ளை அருங்குணங்கள் பல வாய்ந்தவர்; தெய்வ பக்தி உடையவர்; ஒழுக்கத்தில் குன்றாதவர். அவர்க்கு மக்கள் எழுவர். அவ்வெழுவருள் மூவர் பெண்கள்; நால்வர் ஆண்கள். அந்நால்வரில், வ. உ. சிதம்பரம் பிள்ளை ஓட்டப்பிடாரத்தில் 1872–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாம் தேதியன்று பிறந்தார்.

சிதம்பரம் பிள்ளை இளமைப் பருவத்தில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தார். அவருக்குத் தமிழை முறையோடு கற்பித்த ஆசிரியர், ஒழுக்கத்திலும் குண நலங்களிலும் சிறந்தவரான **வீரப்பெருமாள் அண்ணாவி** என்பவர் ஆவர்; ஆங்கிலத்தை முதலில் கற்றுக்கொடுத் தவர் அவ்வூர் தாலூகா ஆபீஸ் எழுத்தாளரான **கிருஷ்ண ஐயர்** என்பவர். உலகநாத பிள்ளை எட்டையா புரத்திலிருந்து **அறம் வளர்த்த நாதன்** என்பாரை அழைத்துவந்து ஒரு பள்ளிக்கூடத்தை உண்டாக்கி

அதில் அவரை ஆசிரியராக இருத்தி அங்கு சிதம்பரம் பிள்ளையைப் படிக்க விடுத்தார். சிதம்பரம் பிள்ளை இளமைப் பருவத்திலேயே இராமாயணம், பாரதம், திருவிளையாடற் புராணம் முதலான நூல்களிலுள்ள கதைகளைப் பிறர் சொல்லக் கேட்பார். மற்றும் அவர் பல்வேறு வகையான சிறுவர்களுக்கு ஏற்ற விளையாட்டுக்களில் ஊக்கமும் உற்சாகமுமுடையவராய் விளங்கினர். அவர் இளமைப் பருவத்தில் குறும்புத்தனமுடையவர்; ஆசிரியரை வருத்துவர். ஆரும் வகுப்பை முடித்த பின்னர்ச் சிதம்பரம் பிள்ளை தூற்றுக்குடிக்குப் படிக்கச் சென்றார். தூற்றுக்குடியைத் தூத்துக்குடி என்றும் அழைப்பர்; அதற்குத் திருமந்திர நகர் என்றும் ஒரு பெயர் உண்டு.

சிதம்பரம் பிள்ளை ரோமன் கத்தோலிக்க பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார்; அவ்வருடம் பரீட்சையில் தேர்ச்சி பெறவில்லை. வேறு பள்ளியில் சேர்ந்தும் பயன்படாமையால் மீண்டும் அவர் கத்தோலிக்க பள்ளிக்கூடத்திற்கே வந்து சேர்ந்தார். மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேர்தல் பெற்றார்; சவரிராயர் என்பாரிடம் தமிழ் கற்றார்; சிறிது காலம் சிதம்பரம் பிள்ளை தாலூகா ஆபீஸ் குமாஸ்தாவாக இருந்தார்; பின்னர் உத்தியோகத்தை விட்டு, திருசிராப்பள்ளிக்குச் சென்று சட்டப் படிப்புப் படித்தார்.

1905–ல் சிதம்பரம் பிள்ளை சட்டப் படிப்பைப் பூர்த்தி செய்தபின், (வக்கீல்) நியாயவாதியாகி ஸிவில், கிரிமினல் என்னும் இருவகை வழக்குகளையும் நடத்தி வந்தார். தந்தையும், பெரிய தந்தையும் சிறந்தோர்களா

யிருந்ததினால் அவர்க்குப் பல நன்மைகளுண்டாயின. மற்றும் சிதம்பரம் பிள்ளையிடம் அரிய குணங்கள் பல வாய்ந்திருந்தன. உண்மை பேசுதல், இனிமையாகப் பேசுதல், எக்காரியத்தையும் திருந்தச் செய்தல், எளிய வர்களிடத்தில் பொருள் பெறுதிருத்தல், பொய் வழக்கினை ஏற்றுக் கொள்ளாதிருத்தல் முதலியன அவரிடத்தில் காணப்பட்ட நற்குணங்களாகும். சிதம்பரம் பிள்ளை சிறிது காலத்திற்குப் பின் தூற்றுக்குடிக்கு வந்து தம் தொழிலை நடத்தலானார். அவருக்கு ஆங்கு நல்ல பெயரும் தக்கவருவாயும் கிடைத்தன. ஒரு சமயம் ஆறுமுகம் பிள்ளை என்னும் ஆசாரியின்மீது கொலை வழக்கு ஒன்று கொண்டு வரப்பட்டது. அவ்வழக்கில் அவருக்காகச் சிதம்பரம் பிள்ளை வாதாடி அவரை விடுவித்தார். அந்த ஆறுமுகம் பிள்ளைதான் தமிழை நன்கு கற்றுத் திருவாவடுதுறை மடத்தில் தம்பிரானாக இருந்து காலஞ் சென்றவர்.

திருச்செந்தூரில் சுப்பிரமணியப் பிள்ளை என்பார் ஒருவர் இருந்தார். அவர் மகளார் வள்ளியம்மை என்பாராவர். அவ்வம்மையார் தமிழ் மொழியைக் கற்றவர்; திருக்குறளுக்கு உரை கூறும் ஆற்றல் வாய்ந்தவர்; பல நற்குணங்கள் நிரம்பியவர். அத்தகைய நங்கை சிதம்பரம் பிள்ளைக்கு வாழ்க்கைத் துணைவியரானார். இல்லறம் நல்லறமாக நடந்து வந்தது. அவர் வீட்டில் விருதுநகர் ராமய்யா தேசிகர் என்ற துறவியார் ஒருவர் இருந்தார். அவர் பார்வை இழந்தவர். அத்துறவிக்கு வள்ளியம்மையார் ஏற்ற தொண்டுகள் புரிந்து வந்தார். ஒருநாள் சிதம்பரம் பிள்ளை மனைவியாரிடம் சென்று

'அத்தேசிகர் கீழ்க் குலத்தார் என்று புகலுமுன் அம்மை யார்' "எல்லா உயிர்களிடத்தும் ஈசன் உளன் என்பதனுல் குலத்தின் உயர்வு தாழ்வு காண்டல் எதற்கு" எனக் கூறினர் என்றுல் அம்மையாரின் சீரிய மன நிலையை அறியலாமன்றே! **நாயக சுவாமியார்** என்பவரோடு சிதம்பரம் பிள்ளை பிரம்மத்தைப்பற்றி உரையாடிக் கொண்டிருக்கும்போது வள்ளியம்மையார் அயலிலிருந்து அதைக் கேட்டுக்கொண்டிருப்பது வழக்கம். அதனுல் அம்மையாருக்குச் சிறந்த மனநிலை ஏற்பட்டது.

இத்தகைய அறிவும் குணநலமும் வாய்ந்த அம்மை யார் நெடுங்காலம் கணவனுக்குப் பல்லாற்ருனும் துணையாயிருந்து வாழும் பேறு பெறவில்லை. திடீரென அம்மையார் இம்மண்ணுலக வாழ்க்கையை நீத்தார். அம்மையாரைப் பிரிந்த சிதம்பரம் பிள்ளைக்கு உண்டான துக்கம் அளவிடற்கரியது. எனினும் என் செய்வது. 'விதியினை வெல்லும் வகைவல்லார் யார்?' பலரும் தேற்றச் சிதம்பரம் பிள்ளை ஒருவாறு தேறுதலடைந்தார். பின்னர் அவர் வள்ளியம்மையாரின் இளைய பாட்டனுரின் பேத்தியான **மீனுட்சியம்மையாரை** இரண்டாம் மனைவியாக மணந்து கொண்டார்.

சிதம்பரம் பிள்ளையின் மனம் மாறுதலுற்றது; பற்றுள்ளம் அகன்றது. யாவர்க்கும் இதமே புரியும் இடல்புண்டாயிற்று. அழுக்காறு, அவா, வெற்றுரை என்பன என்றும் அவர் மாட்டில்லை. பொய்யுரை என்றும் அவர் புகன்றறியார். 'இல்லை' என்று உரைத்துக் கொண்டு தம்மிடம் வருபவர்க்கு அவர் 'இல்லை' என்று உரைத்

தது இல்லை. அவரிடத்து அன்பும் அருளும் மிக்குப் பெருகின. அறத்தினைச் செய்ய அவர் உள்ளம் விழைந்தது. தற்பெருமையை என்றும் அவர் கொண்டவரல்லர். மனிதகுலத்தில் வேற்றுமைகள் அவர்பால் தோன்றியதில்லை. இறைவனை வணங்குதலில் என்றும் தவறார். சிறுவரிடத்திலும் தெள்ளிய உரை கண்டால் 'அறிவு' என்று அவர் கொள்வார். வேற்றுமை பாராட்டாது யாவர்க்கும் இயன்ற உதவியை அவர் புரிந்து வந்தார். சுருங்கக் கூறின் சிதம்பரம் பிள்ளையிடம் தேச பக்தர்க்குரிய சீரிய குணங்கள் எல்லாம் காணப்பட்டன. அவர் **விவேகபானு** என்ற பத்திரிகை ஒன்றை நடத்தினார்; அதன் மூலம் அறிவையும் தேச பக்தியையும் மக்களுக்கு ஊட்டினார். வாலிபர் சங்கம், பிரம சங்கம் முதலான சங்கங்களில் சேர்ந்து அவர் தம்மாலியன்ற பணிகளைப் புரிந்து வந்தார்.

சிதம்பரம் பிள்ளைக்குத் தேசப்பற்று பெருகி வளர்ந்தது. தொழில் வளர்ச்சியால்தான் ஒரு நாடு முன்னேற்றம் அடையும் என்று அவர் உறுதியாக நம்பினார். சங்க நூல்களிலும், வரலாற்று நூல்களிலும் 'தமிழர் வங்கமேறிச் சென்று வாணிபம் பேணித் தங்கம் திரட்டினர்' என்று அவர் படித்திருந்தார். அத்தகைய தமிழர் இன்று சீர்குலைந்து, அடிமையுற்றுத் தொழிலிழந்து, வறுமையால் வாடுவது கண்டு உள்ளங் கரைந்தார். **தூற்றுக்குடி** ஒரு துறைமுகம். அங்கிருந்து **கொழும்புக்குக்** கப்பலில் சரக்குகள் அனுப்பப்படவேண்டும். அவ்வாறு தூற்றுக்குடியிலிருந்து கொழும்பிற்குச் சென்ற கப்பல்கள் **பிரிட்டிஷ் நேவிகேஷன் கம்பெனியார்க்கு** உரியன.

ஆதலால் ஆங்கில வியாபாரிகளுக்கு நன்மையும், இந்திய வியாபாரிகளுக்கு இடர்ப்பாடும் உண்டாயின. அவற்றைச் சிதம்பரம் பிள்ளை நன்கு உணர்ந்திருந்தாராதலால் அவர்க்குச் சுதேசிய கம்பெனி ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணமுண்டாயிற்று. இந்தியாவின் முன்னேற்றத்திற்காகச் செய்யத் தகுவன யாவை என மேலும் சிந்தித்துக்கொண்டே இருந்தார்.

ஏழைகள் படும் துயர் அவர்க்கு நன்கு விளங்கிற்று. செல்வத்தால் செருக்குற்றிருப்பவர்களும், அதிகாரச் செருக்குற்றிருப்பவர்களும் சிதம்பரம் பிள்ளையால் வெறுக்கப்பட்டவராவர். அன்னாரிடத்தில் அகப்பட்டுத் துன்புறும் ஏழைகளுக்குத் தகுந்த உதவி அளித்து வந்தார். தமிழில் சிதம்பரம் பிள்ளை சிறந்த பயிற்சியுடையவர். அவர் திருக்குறளைப் பழுதற வாசித்து அதற்கு ஒரு புத்துரை எழுதிப் பதிப்பித்தார். சத்தியத்திற்கும், தெய்வத்திற்கும் அஞ்சவேண்டுமே யன்றி மானிடர்க்கு அஞ்சுவது பேதமை என்பது அவர் நெஞ்சில் உரம்கொண்டமைந்த கொள்கை. ஊரில் நடைபெறும் பொதுக்காரியங்கள் யாவற்றிலும் சிதம்பரம் பிள்ளை கலந்து கொள்வார். குணங் கண்டால் போற்றுவதும், குற்றங் கண்டால் கண்டிப்பதும் சிதம்பரம் பிள்ளையின் இயல்பு. அவர் நேர்மைக் குணங் கண்டு யாவரும் அவரை நன்கு பாராட்டினர்.

லார்டு கர்ஸன் என்பவர் 1905-ல் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக இருந்தார். அவர் ஒரு சிறந்த ராஜ

தந்திரி. அவர் 1905-ல் வங்காளத்தை இரு பிரிவாகப் பிரித்தார். அப்பிரிவினை அதுவரை ஒற்றுமையுற்றிருந்த வங்காள இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரித்து அவர்களுக்குள் வேற்றுமையை உண்டாக்குவதாகும். வங்காளிகளுக்குள் ஒற்றுமை குலையும் என்பதை உணர்ந்த மக்கள் அவ்வாறு பிரித்தல் கூடாது என்று தடுத்தனர்; அதற்காகக் கிளர்ச்சியும் செய்தனர். என்ன செய்தும் அரசாங்கம் அதற்குச் செவி சாய்க்கவில்லை. மேலும், அரசாங்கத்துக்குத் துணைவரான மேனாட்டு வியாபாரிகள் மேனாட்டுப் பொருள்களை இந்தியாவில் கொண்டு வந்து குவித்து, விற்று, இந்தியரின் பணத்தை வாரிக் கொண்டேகிக் கொண்டிருந்தனர். அவ்வினைத்தைக் குலைக்க வேண்டியதும் அவசியமாயிற்று. எனவே அன்னிய நாட்டுச் சாமான்களை அகற்றல், தாய்நாட்டுச் சாமான்களை வாங்குதல் என்ற கொள்கைகளை வங்காள இந்துக்கள் எங்கும் பரப்பலாயினர். இவ்வியக்கமே **சுதேசி இயக்கம்** என்ற பெயர் பெறும்.

வடநாட்டில் சுதேசிய இயக்கம் வலுத்தது; நாட்டில் எங்கும் கிளர்ச்சி உண்டாயிற்று. அவ்வியக்கம் தென்னாட்டிலும் பரவியது. சிதம்பரம் பிள்ளையவர்கள் அவ்வியக்கத்தைப் பற்றி நெடிது சிந்தித்தார். அந்த இயக்கம் நாட்டிற்கு வேண்டற்பாலதே என்பது அவருக்கு நன்கு புலப்பட்டது. மக்கள் நாட்டுப் பற்று குறைந்து அடிமைபோல் வாழ்தல் அவருக்கு வெறுப்பைத் தந்தது. மக்கள் உள்ளத்தில் தேசப்பற்று என்னும் கனலை மூட்ட அவ்வியக்கம் தக்க சாதனமாகும் என்பது அவருக்கு நன்கு விளங்கிற்று. லார்டு கர்ஸன்

செய்த வங்காளப்பிரிவினை மிகவும் அநீதியானது என்பது அவர் உள்ளத்தில் பதிந்தது. அவர் அரசியல் ஞானி அல்லவா? பிரித்தாளும் முறையைக் கொண்ட ஆங்கிலேயரின் வஞ்ச நெஞ்சம் அவர்க்குப் புலனாகாமல் இருக்குமோ?

சிதம்பரம் பிள்ளைக்குச் சுதேசி இயக்கத்தில் பற்று உண்டாகவே, அவர் வாளாவிருக்க முடியவில்லை. பரதேசச் சரக்குகளை மக்கள் வாங்கலாகாது என்று வற்புறுத்தினார் சிதம்பரம் பிள்ளை. சுதேசியப் பற்று மக்களிடம் வேரூன்றுமாறு அவர் தம் சொல்வன்மையால் அரிய பல பிரசங்கங்கள் செய்தார்; வழக்கறிஞர் தொழிலை விடுத்தார்; நாட்டுரிமைப் போரில் புகுந்து பாடுபடத் தொடங்கினார். அவர் எதனை மக்களைச் செய்யுமாறு கூறினும் தாம் முதலில் அதனை அவர்களுக்குச் செய்து காட்டுவார். சுதேசி இயக்கத்தை மக்களிடைப் பரப்ப வந்த சிதம்பரம் பிள்ளை முதலில் தம்மிடமுள்ள அன்னிய ஆடைகள் அனைத்தையும் மலை போல் குவித்து எரித்தார். அன்னியப் பொருள் எதனையும் வாங்குவதில்லை என்று அவர் உறுதி கொண்டார். கிராமங்கள் தோறும் சென்று சுதந்தரக் கனலை மூட்டினார். சுதேசி இயக்கத்தையும் அதன் நலத்தையும் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறவே, மங்கள் ஒருங்கு திரண்டனர்; அன்னிய ஆடைகளை எரித்தனர். சுதந்தரக்கனல் எங்கும் மூண்டது.

சிதம்பரம் பிள்ளை தமிழ் மொழியை நன்கு கற்றவர். திருக்குறளைப் பழுதற ஓதி உணர்ந்தவர். திருக்

குறளில் பொருட்பாலை நன்குணர்ந்தவர் எவரும் அரசியல் அறிவு பெறுதல் எளிது. ஆகவே, சிதம்பரம் பிள்ளை அரசியல் ஞானியானது விந்தையன்று. தமிழ் மக்கள் பண்டு எவ்வாறு வாழ்ந்தனர்? ஏன் ஒடுங்கினர்? அவர்கள் பெருமை குலையக் காரணம் என்ன? என்பவற்றை ஆராய்ந்தார் மொழிப்பற்று மிக்குடையவராதலின் தமிழிலக்கியங்களைத் துருவிப் பார்த்தார்; உண்மை விளங்கிற்று. 'நாட்டில் கைத்தொழில்கள் குன்றின. பண்டு நம் மக்கள் கைத்தொழில்களில் வல்லுனராய், நாவாய்ஓட்டி எகிப்து, அரேபியா, சீனு, உரோமாபுரி முதலான இடங்களுக்குச் சென்று வாணிகஞ் செய்து பெரும்பொருள் ஈட்டிச் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்தனர். அதற்கு மாருக இக்காலத்தில் கைத்தொழில்கள் குன்ற, எப்பொருளுக்கும் மேனுட்டையே எதிர்நோக்கி நிற்க, அன்னியர் கப்பலேறி நம் நாட்டிற்கு வந்து வாணிகம் செய்து, பெரும் பொருளை நம்மிடமிருந்து பறித்துக்கொண்டு, தம் தாய்நாடு சென்று செல்வச் சிறப்போடு வலிமையுற்று வாழ்கின்றனர்' என்பதை உணர்ந்து மனம் புண்பட்டார். தம் தாய்நாட்டைப் பண்டுபோல் சீரும், சிறப்பும், செல்வமும்பெற்று விளங்கச் செய்யவேண்டுமென்ற எண்ணம் அவர் உள்ளத்தில் எழுந்தது. அதற்குச் சுதேசி இயக்கம் இன்றியமையாத ஓர் கருவியாகும். 'தரும சங்கம்' என்ற நெசவுச்சாலை ஒன்றை அவர் ஏற்படுத்தினர்; சுதேசிப் பண்டகசாலை ஒன்றை நிறுவினர்; பிரசங்கங்கள் புரிந்தார். மக்களுக்குச் சுதேசப்பற்று உண்டாயிற்று. இதனுல் அரசாங்க அதிகாரிகளுக்கும் ஆங்கிலேய வர்த்தகர்களுக்கும் சிதம்பரம் பிள்ளை மீது சினம்

தோன்றிற்று. தோன்றினால் என்ன? பிள்ளையவர்கள் சுதேசிப் படை ஒன்று திரட்டிவிட்டார்.

அக்காலத்தில் கொழும்பிற்கும், தூற்றுக்குடிக்கும் மேற்கூறியபடி, பிரிட்டிஷார் கப்பலிலேயே சரக்குகள் கொண்டுபோகப் பட்டதால், ஆங்கிலேய வியாபாரிகளுக்கு மிகுந்த லாபமும், இந்தியவியாபாரிகளுக்குப் பல கஷ்ட நஷ்டங்களும் உண்டாயின. எனவே, சிதம்பரம் பிள்ளை சுதேசிக் கப்பல் கம்பெனி ஒன்று நிறுவப் பணம் திரட்டினர். தென்னிந்தியாவில் மட்டுமன்றி வட இந்தியாவிற்கும் சென்று பணம் சேகரித்தார். பாலவனத்தம் ஜமீன்தார் **ஸ்ரீ பாண்டித்துரைத் தேவர்** லக்ஷரூபாய் அளித்தார். சிதம்பரம் பிள்ளை தமது அரும்பெரும் முயற்சியால் 1906-ஆம் ஆண்டு '**சுதேசிக் கப்பல் கம்பெனி**' ஒன்றைத் தோற்றுவித்தார். அந்தக் கம்பெனிக்குப் பாண்டித்துரைத் தேவர் தலைவரானர், அக்கம்பெனியார் இரண்டு கப்பல்களை வாங்கினர். இந்திய வியாபாரிகளின் பொருள்களை அவை வெளிநாடுகளுக்கு ஏற்றிச் சென்றன. இங்குத்தான் சிதம்பரம் பிள்ளையின் மனவலிமையையும் உறுதியையும் நாம் அறியவேண்டும்.

சிதம்பரம் பிள்ளை பணந்திரட்டச் சென்றபொழுது "நான் மீண்டும் தமிழ் நாட்டிற்கு வரும் பொழுது இரண்டு கப்பல்களுடன் வருவேன்; இல்லையேல் கடலில் விழுந்திறப்பேன்" என்ற வஞ்சினம் கூறிச் சென்ருர். அவர் அவ்வாறே இரு கப்பல்களுடன் தமிழகத்திற்கு வந்தார். அவர் பணந் திரட்ட பம்பாய்க்குச் சென்றிருந்த பொழுது அவருடைய மகன் நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிலையிலிருந்தான். அவர் மனைவி

நிறைந்த கருப்பவதியாயிருந்தாள். நண்பர்கள் பலர், அவரது மனைவியையும் மகனையும் ஒருமுறை வந்து பார்த்துவிட்டுச் செல்லுமாறு அவருக்கு வற்புறுத்திக் கடிதம் எழுதினார்கள். அதற்கு அவர், "என் மனைவியையும் மகனையும் கடவுள் காப்பார். அவர் என்னிலும் சக்தி வாய்ந்தவர்," என்று பதில் எழுதினார். இவற்றால் சிதம்பரம் பிள்ளையின் மன வலிமை, உறுதி, எடுத்த காரியத்தைத் தொடுத்து முடித்தல் என்னும் அரிய குணங்கள் புலனாகின்றன அல்லவா? தன் குடும்பத்திற்குச் செய்யும் தொண்டைக் காட்டிலும் தாய் நாட்டிற்குச் செய்யும் தொண்டே சீரியது எனச் சிதம்பரம் பிள்ளை மதித்தார் என்பதில் என்ன தவறு? அவர் கொணர்ந்த கப்பல்களுக்கு **லாவோ, காலியா,** என்ற பெயர்கள். பண்டைத் தமிழர் கப்பலோட்டினர். பிற்காலச் சோழ மன்னர்களான கரிகால் பெருவளத்தான் இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் என்பார் அலைகடல் நடுவே பல கலம் செலுத்தினர். இவை வரலாற்று நூல்களாலும் இலக்கியங்களாலும் அறியப்படுவன. ஆனால் இக் காலத்தில் **கப்பலோட்டிய தமிழர்** சிதம்பரம் பிள்ளை அவர்களே.

சுதேசிக் கப்பல் கம்பெனி நாளுக்கு நாள் வலிமையுற்றுச் செவ்வையாக நடந்து வந்தது. பெண்களும் தம்மாலான சிறு தொகையை அக்கப்பல் கம்பெனிக்குக் கொடுத்துதவினர் என்றால் வேறு சொல்வானேன்? மக்கள் எவ்வளவு நாட்டுப் பற்று உடையவர்களாக விளங்கினர் என்பதை அறியலாமன்றோ? 'தமிழர் தலையெடுக்கின்றனர்; அன்னார் பண்டு அலைகடல் நடுவண்

மரக்கலம் செலுத்தி அரும் பொருள் திரட்டியவர். ஆதலின் அவர்கள் முன்னேறுவர் என்பதில் ஐயமில்லை' என்பது ஆங்கிலக் கம்பெனியாருக்கு இனிது விளங்கிற்று. போட்டியாகச் சுதேசிக் கப்பல் கம்பெனி வேலை செய்தல் ஆங்கிலேயர்க்கு அளவிலாத் துன்பத்தைத் தந்தது. ஆங்கிலேயக் கப்பல் கம்பெனிக்கோ மூலதனம் அதிகம். போட்டியிடும் நிலையில் பின்னும் பணமும் கப்பல்களும் அதிகமாயின. அவர்கள் கட்டணங்களைக் குறைத்தனர்; இலவசமாக மக்களை ஏற்றிச் செல்லவும் துணிந்தனர். பொருள் மிகப் படைத்த ஆங்கிலக் கப்பல் கம்பெனியோடு ஏழைத் தமிழர் சுதேசிக் கப்பல் எவ்வாறு போட்டியிட முடியும்? எனினும் உணர்ச்சியும், ஊக்கமும், முயற்சியும், தைரியமும் குன்றாது சுதேசிக் கப்பல் கம்பெனியைச் சிதம்பரம் பிள்ளை இனிது நடத்தி வந்தார். அதனால் ஆங்கிலேயக் கம்பெனியாருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. அவர்கள் சிதம்பரம் பிள்ளையை நெருங்கி அவருக்கு லக்ஷ ரூபாய் அளிப்பதாகவும், அவர் அதனை விட்டு விலகுமாறும் வேண்டினர். பொருளை அவர் பொருட்படுத்தவில்லை. அச்சுறுத்திப் பார்த்தார்கள்; அதற்கும் அவர் அஞ்சவில்லை. சிதம்பரம் பிள்ளையை நயத்தினாலும் பயத்திலும் வேதிக்க முயன்ற முயற்சிகள் வீணாயின. ஆகையால் அவர்கள் அவர்க்குத் தீங்கு செய்யத் தக்க சமயம் பார்த்திருந்தனர்.

தூற்றுக்குடியில் சிதம்பரம் பிள்ளைக்கு மதிப்பு பின்னும் அதிகமாயிற்று. அவர் கூறியபடி செய்ய மக்கள் துணிந்து நின்றனர். சுதேசிய இயக்கம் நாளும்

வலிமை பெற்றது. நாட்டுப் பற்று மக்கள் மனத்தில் மிகுந்து காணப்பட்டது. சிதம்பரம் பிள்ளை தேசிய மகா சபையில் சேர்ந்தார். வருடந்தோறும் நடை பெறும் தேசிய மகா சபைக்குச் சென்றார். வடநாட்டா ரும் சிதம்பரம் பிள்ளையின் உண்மை யுழைப்பையும் தேசப்பற்றையும் கண்டு போற்றலாயினர். காங்கிரஸ் சபையில் இரு கட்சிகள் உண்டாயின. அவை மிதவா தக்கட்சி, தீவிரவாதக் கட்சி என்பன. தீவிர வாதக் கட்சி யைப் பாலகங்காதர திலகர் தலைமை தாங்கி நடத்தினர். சிதம்பரம் பிள்ளை தீவிரக் கட்சியில் சேர்ந்தார். பால கங்காதரரோடு நெருங்கிப் பழகினர். தீவிரக் கட்சியின் கொள்கைகளை மக்களிடைப் பரப்பிச் சுதந்திரப் போருக்குத் தென்னுட்டு மக்களைத் தக்காராக்கும் பொறுப்பு சிதம்பரம் பிள்ளையிடம் ஒப்படைக்கப் பட்டது. தென்னுடு முழுமைக்கும் ஒப்பற்ற வீரர் சிதம்பரம் பிள்ளையே என்பது திலகரின் கருத்து. 1908-ல் திருநெல்வேலியில் தோற்றுவித்த 'தேசாபிமான சங்கத்தில்' சிதம்பரம் பிள்ளை சுதேசிப்பற்று, அன்னியப் பொருள்களை விலக்கல், தேசியக் கல்வி என்னும் பொருள்பற்றி அரிய சொற்பொழிவுகள் ஆற்றித் தூங்கியிருந்த தமிழ் மக்களைத் தட்டி யெழுப்பினர். இச்சமயத்தில் துறவியான சுப்பிரமணிய சிவாவும் திரு நெல்வேலிக்கு வந்திருந்தார். சிவாவும் சிதம்பரம் பிள்ளையும் நெருங்கிய நட்பினர் ஆயினர். சிவா சிறந்த தமிழறிஞர்; தேச பக்தர்; அஞ்சா நெஞ்சம் படைத் தவர்; மனஉறுதியுடையவர்; ஆற்றலும் அறிவும் மிக்க வர். இவ்விருவர் சொற்பொழிவுகளால் தென்னுடு முழு

வதும், மக்கள் புத்துணர்ச்சி பெற்றனர் ; நாட்டுப்பற்று ஓங்கி வளர்ந்தது.

தூற்றுக்குடியில் 'கோரல்ஸ் மில்' என்று ஒரு ஆலை உண்டு. சம்பளக் குறைவு காரணமாகத் தொழிற்சாலை, பஞ்சாலை முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பிணக்கு ஏற்பட்டது. அதன் காரணமாக வேலை நிறுத்தம் செய்யவேண்டிய நிலைமையைத் தொழிலாளர் அடைந்தனர். ஒற்றுமையாக வேலை நிறுத்தமும் செய்தனர். முதலாளிகளும், தொழிலாளிகளும் தத்தம் நிலையில் உறுதிகொண்டு நின்றனர் ; சிதம்பரம் பிள்ளை சமரசப்படுத்த முயன்றும் பயனின்றிப் போயிற்று. தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தால் இன்னலுற்றனர். சிதம்பரம் பிள்ளைக்குத், தொழிலாளர் செயல் நியாய மானதாகத் தோன்றியதனால் அவர் பொது மக்களிடம் பணம் வசூலித்து அவர்களுக்கு உதவி புரிந்தார். பாட்டாளி மக்களும் சிதம்பரம் பிள்ளை சொல்லுக்கு அடங்கி நடந்தனர். தொழிலாளர்களால் கலவரம் நடைபெறக் கூடும் என்று அஞ்சி அரசாங்கம் நிலைப்போலீஸ் படையொன்றைக் கொண்டுவந்து ஆங்கு வைத்திருந்தனர்.

அகில இந்திய காங்கிரஸின் சிறந்த தலைவர்களில் ஒருவரான **பாபு விபின் சந்திரபாலர்** சிறையிலிருந்து 1908-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ஆம் தேதி விடுதலை பெற்றார். அந்நாளைக் கொண்டாடுவதெனத் திருநெல்வேலி ஜில்லா முழுவதும் ஏற்பாடுகள் நடைபெற்றன. திருநெல்வேலியில் தாம்பிரபரணி ஆற்றங்கரையில் மாபெருங் கூட்டம் நடைபெற்றது. சிவாவும், சிதம்பரம் பிள்ளையும் அக்கூட்டங்களில் கலந்துகொள்ளக் கூடா

By W3c N51

தென்று ஜில்லா கலெக்டர், தடை உத்தரவு போட்டார். அதற்கோ அவர்கள் அஞ்சுபவர்கள்! சிவாவும் சிதம்பரம் பிள்ளையும் ஜில்லா கலெக்டரின் தடையுத்தரவைமீறி அக்கூட்டத்தில் பின்னும் தீவிரமாகவும், அழகாகவும், வீரக் கிளர்ச்சியுடனும் பேசினார்கள். சமயம் எது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த போலீஸார் சிவாவையும், சிதம்பரம் பிள்ளையையும் சிறைசெய்வதென்று தீர்மானித்தனர். தூற்றுக்குடியில் சிதம்பரம் பிள்ளையைச் சிறைசெய்தால் கலகம் உண்டாகும் என்று அஞ்சிய கலெக்டர் திருநெல்வேலியில் தம்மை வந்து காணுமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்களும் சென்று கலெக்டரைக் கண்டனர். கலெக்டர், அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவை விட்டு நீங்க வேண்டுமென்றும், அரசியல் கிளர்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை என்று ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றும் கூறினார். நீண்ட நேரம் தர்க்கம் நடந்தது; இருவரும் கலெக்டர் கூறியவற்றிற்கு ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டனர். அது காரணமாக அவ்விருவர்மீதும் ராஜத் துவேஷக் குற்றம் சாட்டப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டனர். இருவர் மீதும் ராஜத்துவேஷ வழக்கும் தொடரப்பட்டது. சிவாவும் சிதம்பரம் பிள்ளையும் சிறைசெய்யப்பட்ட செய்தி மிக்க விரைவில் நாடெங்கும் பரவியது. ஆங்காங்கு குழப்பங்கள் ஏற்பட்டன.

இருவர்மீதும் தொடரப்பட்ட வழக்கை விசாரித்தவர் பின்ஹே என்னும் நீதிபதி, சிதம்பரம் பிள்ளைமீது இருவகைக் குற்றங்கள் கூறினார். கவி சுப்பிரமணிய

TAMIL NADU ARCHIVES LIBRARY 104974

பாரதியாரும் இவ்வழக்கில் சிதம்பரம் பிள்ளையின் சார்பில் சாட்சி கூறினார். 1908-ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் தேதி நீதிபதி பின்ஹே தீர்ப்புக் கூறினார். அதன் படி சிதம்பரம் பிள்ளைக்கு அரச நிந்தனைக்காக ஆயுள் அளவு தீவாந்தரத் தண்டனையும், அவருக்கு ஆதரவு அளித்ததற்காக சுப்பிரமணிய சிவாவிற்குப் பத்து வருஷச் சிறைத் தண்டனையும் விதித்தார். இத்தீர்ப்பைக் கேட்டுத் தமிழக முழுவதுமுள்ள மக்கள் நடுங்கினர்; வருந்தினர். அப்போது சிதம்பரம் பிள்ளைக்கு வயது முப்பத்தைந்து. அவர், இளம் மனைவியையும், இரு சிறு குழந்தைகளையும், பெற்ற தாய் தந்தையரையும் விட்டுப் பிரிந்து சிறைவாசத்தை மேற்கொள்ளவேண்டுமே என்று சிறிதும் அஞ்சினரல்லர். தேசத்தின் விடுதலைக்காகத் தம் உடல், பொருள், ஆவி மூன்றையுமே துறக்கத் துணிந்தவரன்றோ அவர்! ஆனால் 'அத்தண்டனை கொடுமையானது' என்று இந்திய மந்திரியான லார்டு மார்லி கூறினார்; அத் தண்டனையை விதித்த நீதிபதிக்கோ 'ஹை கோர்ட் ஜட்ஜ்' பதவி கிடைத்தது.

சிதம்பரம் பிள்ளை மனங்கலங்காது விருப்புடன் அத்தண்டனையை ஏற்றுக்கொண்டார். சிதம்பரம் பிள்ளை கடுந்தண்டனையை ஏற்றுக்கொண்ட அதே வாரத்தில் பாலகங்காதர திலகர் அரசாங்கத்திற்கு விரோதமாகக் 'கேஸரி'ப் பத்திரிகையில் கட்டுரைகள் எழுதினரென்று குற்றம் சாட்டப்பட்டு ஆறு வருஷக் கடுங்காவல் தண்டனையும் பத்தாயிர ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார். தென்னாட்டில் சிதம்பரம் பிள்ளையும், வடநாட்டில் பாலகங்காதர திலகரும் தண்

டனை பெற்றதன் பயனாக இந்தியா முழுவதும் கிளர்ச்சி பொங்கியெழுந்தது; குழப்பம் உண்டாயிற்று. பின்னே தீர்ப்பைக் குறித்துப் பல பத்திரிகைகள் பலமாகக் கண்டித்தெழுதின. சிதம்பரம் பிள்ளையின் மனைவியார் அத்தண்டனையை அகற்றச் சென்னை ஹைகோர்ட்டுக்கு மனுச்செய்துகொண்டார். ஆர்னல்டு ரைட், மன்ரோ என்னும் இரு நீதிபதிகளின் முன்பு வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. சிதம்பரம் பிள்ளைக்காக இரு பெரு வழக்கறிஞர்கள் பேசினார்கள். முடிவு யாதெனில், சிதம்பரம் பிள்ளைக்குத் தீவாந்தர தண்டனை மாறி ஆறு வருடம் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டது. சிதம்பரம் பிள்ளை முதலில் கோயம்புத்தூர்ச் சிறையிலும், பின்னர்க் கண்ணனூர்ச் சிறையிலும் தம் சிறைவாசத்தைக் கழித்தார்.

கோயம்புத்தூர்ச் சிறையில் சிதம்பரம் பிள்ளை பட்ட துன்பம் சொல்லும் தரத்ததன்று. தனித்த அறையில் சிதம்பரம் பிள்ளை கிடந்தார். அறுசுவை உண்டி உண்ட அவர் கேழ்வரகுக் கூழைக் குடித்தார்; கல் உடைத்தார்; மாடுபோலச் செக்கு இழுத்தார்.

அக்காலத்தில் சிறைவாசம் மிகக்கொடுமையானது; எனினும் அவர் மனம் சலிக்கவில்லை; சிறையில் சிதம்பரம் பிள்ளை படும் துன்பங்களை அறிந்த மக்கள் வெளியில் பலவாறு கிளர்ச்சி செய்தனர். அவ்வாறு கிளர்ச்சி செய்ததும் ஓரளவு நற்பயனை அளித்தது. சிதம்பரம் பிள்ளைக்குச் சிறையதிகாரிகள் அளித்து வந்த துன்பம் சிறிதளவு குறைந்தது என்றே கூறவேண்டும். கோயம்புத்தூர்ச் சிறையிலுள்ள காலத்தில் சிதம்பரம் பிள்ளைக்

குச் செய்த துன்பங்களைக்கண்ட அச்சிறையிலுள்ள கைதிகள் பெரிதும் வருந்தினர். அவர்கள் கலகமும் செய்தனர் என்றால் எவ்வளவிற்கு அவர்கள் மனக் கொதிப்படைந்திருக்க வேண்டும் என்பது நன்கு விளங் கும். அதன் பயன் சிறையதிகாரிகள் கைதிகளுக்குச் செய்யும் தண்டனைகளைக் குறைத்துக்கொண்டனர். சிறையில் கைதிகளுக்கு அளிக்கும் உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம் என்பனபற்றி பிள்ளையவர்கள் அதிகாரிகளோடு போர் தொடுத்தார். கைதிகளைக் கொடிய முறையில் நடத்துவதும், அவர்களைத் துன் புறுத்திக் கடின வேலை வாங்குவதும்பற்றி அதிகாரி களுடன் சண்டை போட்டார்; சிறைச்சாலை அதிகாரி களின் மனப்பான்மையையும் நடத்தையையும் கண்டித் தார். வேறு விதியின்றிச் சிறைச்சாலையில் சீர்திருத்தம் உட்புகுந்தது.

சிதம்பரம் பிள்ளைக்குத் தேசப் பற்றும் தமிழ்ப் பற்றும் அதிகம். மொழிப் பற்றே அவரைத் தூண்டி நாட்டுத் தொண்டில் புகுத்தியது. தாய் மொழிப் பற்றே நாட்டுப் பற்று அன்றோ! சிதம்பரம் பிள்ளை சிறையில் சும்மாவிருக்கவில்லை. அவர் சிறைச்சாலையி லிருந்துகொண்டு தமிழ்த் தொண்டு புரிய எண்ணினர். ஜேம்ஸ் ஆலன் என்பவர் ஆங்கிலத் தத்துவ ஞானி. அவர் பல அரிய நூல்களை இயற்றியுள்ளார். அவற்றை யெல்லாம் சிதம்பரம் பிள்ளை நன்கு படித்தறிந்து இனிய எளிய நடையில், **மனம் போல வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம்** எனப் பெயரிட்டுத் தமிழில் எழுதினர். தமிழ் மொழிக்கு அரிய விஷயங்களைக்

கொண்ட தமிழ் உரைநடை நூல்கள் தேவை என் பதைச் சிதம்பரம் பிள்ளை நன்கு அறிந்திருந்தார். அது மட்டுமன்றித் திருக்குறளை நன்கு ஆராய்ந்து, அதற்குச் சிறந்த குறிப்புக்கள் எழுதி வைத்தார். 1912-ல் சிதம் பரம் பிள்ளை விடுதலை செய்யப்பட்டார். விடுதலையான பின் அவர் குடும்பத்துடன் சென்னைக்கு வந்து வசிக்க லானார். தாம் எழுதிய குறிப்புக்களுடன் திருக்குறளைப் பதிப்பித்தார். சென்னைத் தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. பாலகங்காதர திலகர் அக்காலத்தில் சிதம்பரம் பிள்ளையின் அரிய தொண்டைப் பாராட்டி மாதந்தோறும் பொருளுதவி புரிந்து வந்தார் என்றால் எத்தகைய பெரு மதிப்பைச் சிதம்பரம் பிள்ளை பெற்றிருந்தார் என்பது நன்கு விளங்குகிறதன்றோ? குடும்பத்தின் செலவுகளைக் குறித்துச் சிதம்பரம் பிள்ளை, அரிசி, நெய் வியாபாரமும் செய்தார். பிறர் ஆதரவில், பிறர் கையை எதிர்நோக்கி வாழும் வாழ்க்கை, சிதம்பரம் பிள்ளை மனத்திற்கு ஒவ் வாததே அவர் வியாபாரத்தில் இறங்கியதற்குக் காரண மாகும்.

சிதம்பரம் பிள்ளையின் உயிர்த் தோழர்களாய் விளங்கியோர் சுப்பிரமணிய சிவாவும், கவி சி. சுப்பிர மணிய பாரதியாருமாவர். சிதம்பரம் பிள்ளை சிறை யில் அனுபவித்த துன்பங்களைக் கேட்டு, மனங் கசிந்து சுப்பிரமணிய பாரதியார் கல்லும் கரையும்படிப் பாடி யுள்ளார். சிதம்பரம் பிள்ளை ராஜத் துவேஷக் குற்றத் திற்காகச் சிறை சென்றிருந்ததால் அவர் வக்கீல் சன்னத் துப் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. பிற்கால

வாழ்க்கையில் சிதம்பரம் பிள்ளையை வாட்டியது வறுமையே. அதற்குக் காரணம் நாட்டு மக்கள் குறையே. தமக்கு உழைத்தார் யாரென்றும், எவ்வளவு நலனைத் தேடித் தந்தார் என்றும் உணர்ந்து அத்தகையாரைப் பிற்காலத்தில் காத்தல் நாட்டு மக்களின் கடமையல்லவா? பிரம்பூர் ரயில்வேத் தொழிலாளர் சங்கத் துணைத் தலைவராய் அமர்ந்து தம் வறுமையையும் பொருட்படுத்தாது, நலத்தையும் வேண்டாது, தொழிலாளர் நலனைக் கோரிப் பிள்ளையவர்கள் பாடுபட்டார் என்றால், "என் கடன் பணி செய்து கிடப்பதே," என்ற கருத்து எவ்வளவு ஆழ்ந்து அவரிடம் பதிந்திருந்தது என்பது நன்கு விளங்கும். நீதிபதி இ. எஸ் வாலஸ் என்பவரின் உதவியால் சிதம்பரம் பிள்ளை, இழந்த வக்கீல் சன்னத்தை மீண்டும் பெற்றார். அவர் கோயில்பட்டிக்குச் சென்று தங்கிச் சிறிது காலம் வக்கீல் தொழில் புரிந்தார்; பின் தூற்றுக்குடிக்கு வந்தார்.

சிதம்பரம் பிள்ளை சென்னையிலிருந்த காலத்தில் பிரம்பூரில் வசித்து வந்தார். தம்மை யடைவார்க்குத் தமிழ்ச் சுவையை யூட்டினார். திருமணம் செல்வகேசவராய முதலியாருடன் சிதம்பரம் பிள்ளை பிற்காலத்தில் தமிழ்த் தொண்டு செய்யத் தொடங்கினார். தொல்காப்பியத்தில் பொருளதிகாரம், எழுத்ததிகாரம் என்பவற்றை நன்குஆராய்ந்து இளம்பூரணர் உரையொடு பதிப்பித்தார். இன்னிலை என்ற நூல் ஒன்றை அவர் பதிப்பித்துள்ளார். அதனை அவர் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றெனா எண்ணினார். அவரது அரிய தொண்டினை அறிந்த பிரம்பூர் மக்கள் அவர் பெயரால் ஒரு சாலையை

யும், ஒரு விளையாட்டு மைதானத்தையும் ஏற்படுத்தினர்.

சிதம்பரம் பிள்ளை மனம் மிகவும் இளகுந் தன்மை வாய்ந்தது. அதனாலன்றோ அவர் ஏழைகளின் தோழரானார்! சிதம்பரம் பிள்ளையின் நண்பர்களில் ஒருவர் சுவாமி **சகஜானந்தர்.** அவர் சிதம்பரம் பிள்ளையை முதலில் அடைந்தபோது, தாம் நந்தனார் குலத்தவரெனக் கூறிக் கொண்டார். அவர் உண்மை கூறியது உணர்ந்து மகிழ்ந்து சிதம்பரம் பிள்ளை அவருடன் நெருங்கிப் பழகினார். சிதம்பரம் பிள்ளை சாதிப் பிணக்குகளை வெறுத்தவர் என்பதில் இதனால் நன்கு வெளியாகும். சிறையில் அவர் இருந்த காலத்தில் சுதேசிக் கப்பல் கம்பெனி அன்னியர் விளைத்த இன்னல்களால் முறிந்துபோயிற்று. அப்போது அவர், பங்குத்தாரர்களுக்கு, பொருளைக் குறித்து வருந்த வேண்டாமென்றும், சிறையிலிருந்து வெளிவரும்வரை பொறுத்திருந்தால், தாம் வந்து அவரவர் தொகையைக் கொடுப்பதாகவும் குறித்துக் கடிதம் எழுதினார். என்னே அவரது நேர்மை யுள்ளம்! சிதம்பரம் பிள்ளை செய்ந்நன்றி மறவாதவர். சுதேசிக் கப்பல் கம்பெனி வைத்து நடத்தியபொழுது உதவியவர் ஆறுமுகம் பிள்ளை. ஆதலால் அவர் பெயரைச் சிதம்பரம் பிள்ளை தமது இரண்டாவது மைந்தனுக்கு இட்டார். சிறையிலிருந்தபொழுதும், வெளிப்பட்ட பின்பும் உதவியவர் தில்லையாடி வேதியப் பிள்ளை; ஆதலின் சிதம்பரம் பிள்ளை தம் புதல்விக்கு வேதவல்லி என்று பெயரிட்டார். கோயம்புத்தூர்ச் சிறையில் துன்புற்ற காலத்தில் உதவியவர்

சி. கே. சுப்பிரமணிய முதலியாராவர். ஆதலின் சிதம்பரம் பிள்ளை அவர் பெயரைத் தம் மூன்றுவது மைந்தனுக்கு இட்டார். இழந்த வக்கீல் சன்னத்தைப் பெறப் பேருதவி புரிந்தவர் நீதிபதி இ. எஸ். வாலஸ். ஆதலால் சிதம்பரம் பிள்ளைத் தம் நான்காம் மைந்தனுக்கு வாலீஸ்வரன் என்று பெயரிட்டார். இவற்ருல் அவரது செய்ந்நன்றி யறிதல் என்ற சான்ற குணம் நனி விளங்கும்.

இத்தகைய அரிய குணங்களும், நற்செய்கைகளும், நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் மிக்குடைய தேசத் தொண்டரான சிதம்பரம் பிள்ளையின் அறுபதாம் ஆண்டு விழா மிகச் சிறப்பாக 1932-ல் நடைபெற்றது. பிறகு சிறிது காலம் தேசத் தொண்டாற்றி, அவர் 1936-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் தேதி பூவுலகை விட்டுப் பொன்னுலகு எய்தினர். அவரது பூதவுடல் மறைந்ததே அன்றிப் புகழுடல் மறையவில்லை. சென்னை மக்கள் அவரது அரிய தொண்டினைப் போற்றிச் சிலைசெய்து அமைத்துச் சிறப்புச் செய்தனர். தமிழ்ப் பற்று அவரைத் தேசத் தொண்டிற் புகுத்தி அழியாப் புகழை அடையும்படிச் செய்தது. 'திரை கடலில் கலம் செலுத்த வேண்டும் தமிழர்' என்ற அவர் எண்ணமும் செயலும் எத்தகையன என்பதை எண்ணி அவர் பெயரால் ஒரு நீராவிக் கப்பல் வாங்கி அதை 1949-ம் வருடம் பிப்ரவரி மாதம் 9-ம் தேதி யன்று சுதந்திர இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாக இருந்த ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரால் கடலில் மிதக்க விடப்பட்டது. அது இப்பொழுது தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் ஜனங்களையும சாமான்களையும்

ஏற்றிச் செல்கின்றது. சிதம்பரம் பிள்ளை தமிழர்க்கும் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் உழைத்த **தமிழகப் பெரியார்** என்பதை யாரே மறுக்க வல்லார்? தமிழக முள்ளளவும் சிதம்பரம் பிள்ளையின் புகழ் சிறந்தோங்கி நிற்கும் என்பது திண்ணம்.

---

# 4. திரு. பச்சையப்ப முதலியார்

( 1753—1794 )

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது வள்ளுவர் வாய்மொழி. செல்வம் இல்லையேல் இவ்வுலகில் என்ன செய்யமுடியும்? எதனைப் பெற முடியும்? எதனை வாங்க முடியும்? இந்நிலவுலகில் அனுபவிக்கக்கூடிய இன்பங்களில் எவற்றைத் துய்க்க முடியும்? செல்வம் இல்லையேல் யார் மதிப்பார்? 'இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாய் வேண்டாள், செல்லாது அவன் வாயிற் சொல்' என்பது உண்மை உரையே அன்றோ?

ஆனால், உலகில் செல்வம் பெற்றோர் நிலையும் இயல்பும் எவ்வாறாகவுள்ளன? செல்வம் பெற்றோர் இரு வகையினர். ஒரு பிரிவினர் தம் முன்னோரால் தேடிவைக்கப்பட்ட செல்வத்தைச் சிதைவுறாது தக்கபடிக் காப்பாற்றி வாழ்பவர். மற்றொரு பிரிவினர், தாழ்ந்த நிலையில் எளிய குடும்பத்தில் தோன்றித் தமது பெரு முயற்சியாலும், உழைப்பாலும், திறத்தாலும், கவலையுடன் அளவோடு செலவிட்டு எஞ்சியதைச் சேமித்து வைக்கும் இயல்பாலும் பெரும் பொருள் ஈட்டி வாழ்பவராவர். செல்வம் வந்துற்றபொழுது, மக்கள் மனநிலை மாறுபடுதல் இயல்பு. திரண்ட செல்வம் வந்தபொழுது நெறி வழுவாதொழுகிச் செல்வத்தையும், தம்குலம், குடிப்பெருமைகளையுங் காத்து வாழ்பவருமுண்டு. அவ்




பச்சையப்ப முதலியார்

வாறன்றிப் பெருஞ் செல்வம் வந்துற்றபொழுது கர்வத்தால் தம் நிலையையும் குடிப்பெருமை முதலியவற்றையும் மறந்து மனம்போன போக்கிற் சென்று, தீ நெறி பற்றி ஒழுகி மானத்தையும், பெருமையையும் இழந்து இழிநிலை யெய்துவாரும் உண்டு. எளிய நிலையில் பிறந்து, தம் அருமுயற்சியால் பெரும் பொருள் திரட்டி, யாவர்க்கும் உதவுபவர், தெய்வப்பற்றும், அறச் செயலுமுடையோராய் வாழ்ந்து உலகில் அழியாப் புகழை நிலை நாட்டுவர். அத்தகையோரை உலகோர் என்றும் புகழ்வர். அவர் பொன்றினும் புகழ் பொன்றாது. அத்தகையவரே புண்ணியர் எனப் போற்றப்படுவர். அவரே யாவர்க்கும் பெரியோர் ஆவர்.

முக்திதரும் நகரங்கள் ஏழில் ஒன்று **காஞ்சிபுரம்** என ஆன்றோர் கூறுவர். அந்நகர் மிக்க பழமை வாய்ந்தது. அந்நகர் சோழருக்கும், தொண்டையருக்கும், பல்லவருக்கும் தலைநகரமாக விளங்கியது. 'நகரங்களில் சிறந்தது காஞ்சி' என்று **காளிதாசனால்** புகழ்ந்து கூறப்பட்டது. சைவ, வைணவ, சமண, பௌத்த மதங்களுக்குச் சிறந்த தலமாகவும், கல்விக்கு ஒரு நிலைக்களனாகவும் உள்ளது. அக்காஞ்சிபுரத்தில் அகமுடைய வேளாளர் குடியில் நடுத்தரக் குடும்பமொன்றில் தோன்றியவர் **விசுவநாத முதலியார்**. அவர் தம் மனைவி **பூச்சியம்மையரோடு** இனிது வாழ்ந்து வந்தார். அவர் நல்லொழுக்கமும் தெய்வப்பற்றுமுடையவர். சென்னைக்கு வடமேற்கே உள்ள **பெரியபாளையம்** என்ற கிராமத்திலுள்ள அம்மன் கோயிலுக்கு அவரும் அவர் மனைவியும் ஆண்டுதோறும் செல்வதுண்டு. அவ்வூரில் **ரெட்டிராயர்**

என்ற பெயர் கொண்ட மாத்துவப் பிராமணர் ஒருவர் இருந்தார். அப்பிராமணர் ஆறுகாட்டுச் சுபேதாருடைய பிரதிநிதியாகப் பெரியபாளையத்தில் அதிகாரம் செலுத்தி வந்தார். அவருக்கும் விசுவநாத முதலியாருக்கும் நெருங்கிய நட்பு உண்டு ; விசுவநாத முதலியாருக்கு இரு பெண் குழந்தைகள் பிறந்தன. அவற்றிற்குச் **சுப்பம்மா, அச்சம்மா** என்று பெயர்களிட்டு அன்போடு வளர்த்து வந்தார். ஆயினும், ஆண் குழந்தையில்லையே என்ற வருத்தம் அவர் மனத்திலிருந்தது. விசுவநாத முதலியாரும் பூச்சியம்மையும் தமக்கு ஓர் ஆண் மகவை அளித்துக் குடியை விளங்க செய்யுமாறு இறைவனைப் பணிந்து வேண்டினர். அவர்கள் வேண்டுகோள் நிறைவேறுவதை யுணர்த்துவதுபோல் பூச்சியம்மை கருப்பவதியானாள். விசுவநாத முதலியார் தமது குடிவிளங்க நற்புதல்வன் பிறப்பான் என நம்பி அகமகிழ்ந்தனர். ஆனால் இறைவன் திருவுள்ளம் வேறாக இருந்தது. விசுவநாத முதலியார் நோய்வாய்ப் பட்டு இறந்தார். பூச்சியம்மை அடைந்த துன்பத்திற்கு அளவில்லை; திக்கற்றவளானாள். பின், ஒருவாறு தேறிய பூச்சியம்மை, இரு பெண் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு பெரிய பாளையத்திற்குச் சென்று ரெட்டிராயர் ஆதரவில் வாழ்ந்து வந்தனர். ரெட்டிராயர் தம் நண்பர்க்கு நேர்ந்த அகால மரணத்தைக் குறித்து மிகவும் வருந்தினார். பூச்சியம்மையைத் தம் சகோதரிபோற் பாவித்து வேண்டிய உதவிகளை அளித்து வந்தார். 1754-ஆம் ஆண்டு பூச்சியம்மை ஓர் ஆண் மகவை ஈன்றாள். அம்மகவே **பச்சையப்ப முதலியார்** எனப் பின் சிறப்போடு விளங்கிய பெருந்தகை. ரெட்டிராயர்

பூச்சியம்மையையும் குழந்தைகளையும் ஆதரவுடன் காத்து உதவி வந்தார்.

பச்சையப்ப முதலியாருக்கு வயது ஐந்தானதும் ரெட்டிராயர் கல்வி கற்பிக்கலானார். பச்சையப்பர் முதலில் தெலுங்கு மொழியைக் கற்றுக்கொண்டார். பச்சையப்பரிடம் அவ் விளம் பருவத்திலேயே அருங் குணங்கள் பல காணப்பட்டன. பூச்சியம்மை கணவனை இழந்ததால் உண்டான வருத்தத்தை, மைந்தனைக் கண்டு ஒருவாறு தேற்றிக்கொண்டாள், எனினும் மகனைக் கண்டு மகிழும்பேறு கணவனார் பெறவில்லையே என்னும் துன்பம் அவள் மனத்தை வருத்தியது. இந் நிலையில் ரெட்டி ராயரும் திடீரென இறந்தார். அவர் குடும்பத்திற்கும் துன்பம் வந்தது. பூச்சியம்மை இனித் தன்னையும் குழந்தைகளையும் ஆதரிப்பவர் ஒருவரு மில்லை என்று அறிந்து, தம்முடைய சொத்துக்களை விற்றெடுத்துக்கொண்டு குழந்தைகளுடன் சென்னைக்கு வந்து சேர்ந்தாள். சென்னையில் ஒற்றைவாடைச் சாலைக் கருகில் சாமிமேஸ்திரித் தெருவில் ஒரு வீட்டில் குடியிருந்தாள். சென்னையில் தன்னை ஆதரிப்பார் யார் என்று கலங்கினாள். அந்நிலையில் அடுத்த வீட்டிலிருந்த ஒருவர், தன் எஜமானனின் அருங் குணங்கள் பலவற்றை எடுத்துக்கூறி, அவரிடம் சென்றால் துன்பம் நீங்கக்கூடு மென்று கூறினார். அந்த எஜமானர் **பௌனி நாராயணப் பிள்ளை** என்பவராவர். அவர் மிக்க இரக்க குணம் படைத்தவர், அடைந்தோரை ஆதரிப்பவர்; தெய்வ பக்தியுடையவர்; அறச்செயல் புரிவோர்; நல் லொழுக்கங்கள் நிரம்பப் பெற்றவர். அந்நாராயணப்

பிள்ளை பௌனி என்னும் துரையிடத்தில் துவிபாஷியா யிருந்து ஆங்கிலேய வியாபாரிகளுக்கும் தமிழ் வியாபாரி களுக்கும் வர்த்தகம் ஓங்கி நடக்குமாறு செய்து வந்தார். அவர் அந்தக் காலத்தில் திரண்ட பொருளைத் திரட்டிச் செல்வராகவும் விளங்கினர். பூச்சியம்மை அவரிடம் சென்று தம் நிலையை ஆதியோடந்தமாக அவர் உள்ளங் கனியுமாறு எடுத்துக் கூறினுள். நாராயணப் பிள்ளை பூச்சியம்மை கூறியவற்றை அமைதியாகக் கேட்டு, மன முருகி ஆதரவளித்தார்.

பௌனி நாராயணப் பிள்ளையை நெய்தவாயல் (நெய்தல்வாயில்) நாராயணப் பிள்ளை என்றும் கூறுவர். அவர் தரும சிந்தையுடையவர். செங்கற்பட்டு ஜில்லா வில் மெதவாயல் என்பது அவருக்கு நவாபினிடமிருந்து கிடைத்தது. அது ஒரு சுரோத்திரியக் கிராமம். அவர், அதனை அவ்விடத்திலிருக்கும் சத்திரத்தை நடத்தப் பயன்படும்படிக் கொடுத்துவிட்டார். அவர் தம் ஆதர வைத் தேடிவந்த பூச்சியம்மைக்கும் குழந்தைகளுக்கும் தக்க பாதுகாப்பளித்தார். பச்சையப்பருக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடுகள் செய்தார். பூச்சியம்மை தாம் கொண்டுவந்திருந்த பணத்தை நாராயணப் பிள்ளை யிடமே கொடுத்துவிட்டார். பிள்ளை அவர்கள் அப்பணத தைப் பலவகையாலும் விருத்தி செய்து பூச்சியம்மைக் கும் அவர் மக்களுக்கும் பயன்படும்படிப் பாதுகாத் தார். பச்சையப்பர் நாராயணப்பிள்ளையின் பேருதவி யால் பல்லாற்றானும் முன்னேறி வருதலைக் கண்டு தாய் பெருமகிழ்ச்சி கொண்டாள். நாராயணப் பிள்ளை, பச்சையப்பரிடம் அடக்கம், பொறை, கூரிய புத்தி முத

லியன இயல்பாக அமைந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்து வியாபார முறைகளையும் துவிபாஷி வேலை முறையை யுங் கற்றுக் கொடுத்தார். பச்சையப்பரும் அவற்றை நன்கு கற்றுக் கொண்டார்.

பச்சையப்பர் தமக்கைமார் இருவரும் மணப் பருவம் எய்தினர். அவர்களிருவருக்கும் தக்க இடங்களில் மணம் புரிவித்தார் நாராயணப் பிள்ளை. அவ்விருவருள் மூத்தவளான சுப்பம்மாள் ஒரு பெண் குழந்தையைப் பெற்ருள். அக்குழந்தைக்கு **அய்யாளம்மாள்** என்று பெயரிட்டனர். ஆனல் சிறிது காலத்திற்குள் கணவனுர் இறந்து போகச் சுப்பம்மாள் குழந்தையோடு தாய் வீடு வந்தடைந்தாள். அச்சம்மாள் கணவருடன் வாழ்ந்து வருங்கால் ஓராண் குழந்தையைப் பெற்ருள். அச்சம்மாள் இளம் பருவத்திலேயே இவ்வுலக வாழ்வை நீத்தாள்.

பச்சையப்பர் தொழிலில் இறங்கக் கூடிய நிலையை எய்தினர். ஒரு பீங்கான் கடைக்காரன், சாமான்களை மொத்தமாக வாங்கிச் சில்லறையில் விற்று வந்தான். அவனிடம் பல ஐரோப்பியர் வருவர். கடைக்காரருக்கும் ஐரோப்பியருக்கும் இடையே ஒரு தரகர் வேண்டியிருந்தது. அத்தரகர் வேலையைத் தாம் பார்ப்பதாக முதல் முதல் பச்சையப்பர் ஏற்றுக்கொண்டு தொழிலில் இறங்கினர். அவ்வேலையில் சிறிது காலம் பச்சையப்பர் நிலைத்திருந்து, தம் நற்குண, நற்செயல்களாலும் அறிவுத்திறனலும் பொருள் திரட்டலானர். பச்சையப்பருக்குத் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் என்ற மூன்று மொழிகள் தெரிந்திருந்தது நலம் பல விளைத்தன.

அத்தொழிற் பயிற்சியினால் பெருந்தொகையைத் திரட்டினார் பச்சையப்பர். அவற்றைப் பௌனி நாராயணப் பிள்ளையிடமே கொடுத்தார். பச்சையப்பர் தாம் சம்பாதிக்கத் தொடங்கிய காலம் முதல் தம்மை யடைந்தோர்க்கு அளிக்கும் கொடைக்குணம் வாய்ந்திருந்தார். அவர் மனம் அறச்செயல்களைப் புரிய விழைந்தது. பெரியோர், கொடையும் தயையும் பிறவியிலேயே பெற்றிருத்தல் வேண்டும் என்பர்.

இவ்வாறு இருக்கும் பச்சையப்பருக்கு இராணுவ உத்தியோகத்தர் ஒருவரது நட்பு கிடைத்தது. அவ்வுத்தியோகத்தர் சென்னைக்கு வடக்கே உள்ள பாலவாயில் சத்திரத்தில் தங்கியிருந்தார். அவ்வுத்தியோகத்தர் பச்சையப்பரிடம் அரிய குணங்கள் பல நிறைந்திருப்பது கண்டு மனம் மகிழ்ந்து, அவருக்கு ஒரு வேலையைத்தருவதாகவும் அதனை அவர் ஏற்றுக் கொள்ளுமாறும் வற்புறுத்தினார். அவ்வேலையை ஏற்றுக் கொள்ளப் பச்சையப்பரின் மனம் விழைந்தது. ஆனால் பூச்சியம்மையிடமோ நாராயணப் பிள்ளையிடமோ கூறினால் தம்மைப் போக விடார் என்பது பச்சையப்பருக்கு நன்கு தெரியும். அதனால் பச்சையப்பர் தம் தாயிடமும், தம்மை வளர்க்கும் நாராயணப் பிள்ளையிடமும் சொல்லிக் கொள்ளாமல் சென்று அவ்வேலையை ஏற்றுக்கொண்டார். ஆனால் சிறிது காலத்திற்குள் பச்சையப்பரைக் காணாமையால் பூச்சியம்மை வருந்த, நாராயணப்பிள்ளை பச்சையப்பர் இருக்குமிடம் அறிந்து சென்று, இராணுவ உத்தியோகத்தரைக் கண்டு, பச்சையப்பரை அனுப்பித் தருமாறு கேட்டு, திரும்பி அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்.

பின், நாராயணப்பிள்ளை தென்னாட்டு அதிகாரத்தை மேற்கொண்டிருந்த நிக்கலஸ் துரையிடம் பச்சையப்பரைத் துவிபாஷியாக அமர்த்தினார். பச்சையப்பர் அத்துரையினிடம் துவிபாஷியாக அமர்ந்து சிறிது பொருள் திரட்டினார். பச்சையப்பரிடம் அருங் குணங்கள் பல செறிந்திருத்தலைக் கண்டு நிக்கலஸ் மகிழ்ந்தார்.

பச்சையப்பர் எவ்வாற்றானும் சிறக்க வளர்ந்து மணப் பருவமெய்தினார். தமக்கையான சுப்பம்மை அய்யாளம்மா என்ற ஒரு பெண்மகளைப் பெற்றிருந்தாள் என்று கூறியுள்ளோம். சுப்பம்மையும் கணவனையிழந்தமையால் தாய்வீட்டையே அடைந்து விட்டாளன்றோ? அய்யாளம்மையும் மணப்பருவம் எய்தியிருந்தாள். பௌனி நாராயணப்பிள்ளை, பூச்சியம்மா யாவரும் சேர்ந்து அய்யாளம்மையைப் பச்சையப்பருக்கு மணம் புரிவிப்பதெனத் தீர்மானித்தனர். பச்சையப்பரும் ஒப்புக்கொள்ளத் திருமணம் ஆடம்பரங்கள் அதிகமின்றிச் சிறப்பாக நடந்தேறியது. மணத்திற்கு வந்திருந்த உறவினருக்கெல்லாம் தக்க மரியாதைகள் செய்யப்பட்டன.

பச்சையப்ப முதலியார் ஊக்கமும் உழைப்பும் உடையவர்; நுண்ணறிவு படைத்தவர்; யாவராலும் விரும்பப்படும் இனிய குணங்கள் வாய்ந்தவர்; உண்மை பேசுபவர்; அறம்புரி நெஞ்சம் படைத்தவர். பச்சையப்பருக்கு, நிறைந்த செல்வத்தைத் தேடி அறங்கள் பல செய்து மனிதப் பிறப்பின் பயனைப் பெறவேண்டும் என்ற உயரிய எண்ணங்கள் இருந்தன. இளமையி

விருந்தே அறம் புரியும் எண்ணம் அவர் மனத்தில் வேரூன்றியது. அவர், தாம் வீண் ஆடம்பரத்தை விரும்பாமைக்கும், பெருஞ்செலவு செய்யாமைக்கும் காரணம் அறஞ்செயல் பல செய்வதில் உள்ள ஊக்கமேயாகும். இளம் பருவத்திலேயே பச்சையப்பர் காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் ஆலயத்தில் இரண்டு விக்கிரகங்களைச் செய்து கும்பாபிஷேகம் செய்வித்ததும், பங்குனி உத்தரத் திருக்கலியாண மண்டபம் கட்டுவித்ததுமே அவர் உள்ளக் கருத்தை நன்கு விளக்கும். அவர் பெரும் பொருளை யீட்டி., அறச் செயல்களைப் புரிதற்கே மண்ணில் தோன்றியவர் என்பதை அவரது வாழ்க்கை வரலாறு நன்கு உணர்த்தும்.

பச்சையப்பர் உயர்ந்த தோற்றமும், கட்டமைந்த உடலும், ஆழ்ந்தகன்ற கண்களும், பரந்த மார்பும், கூரிய மூக்கு முடையவர்; செந்நிற மேனியர். அக்காலத்தில் செல்வரான பெரியோர் அணிவனபோன்ற ஆடைகள் அவர் அணிவார். பச்சையப்பர் இசைப்பிரியராகவும் இருந்தார். தெய்வப்பற்றும், தமிழ்நூற் பயிற்சியும் உடையவராதலால் அவர் தேவார திருவாசகங்களைத் தம் ஓய்வு நேரங்களில் இனிய குரலில் பாடி மகிழ்வார்.

பச்சையப்பர் துவிபாஷி உத்தியோகம் செய்து வந்த காலம் தென்னிந்தியாவில் குழப்பம் மிகுந்திருந்தது. ஆங்கிலேயர் எலிஸபெத்து இராணியாரிடம் அனுமதி பெற்றுத் தென்னிந்தியாவில் வியாபாரம் செய்ய வந்தனர்; பிரெஞ்சுக்காரரும் இந்நாட்டில் ஆங்காங்கு வர்த்தக சாலைகள் ஏற்படுத்திக் கொண்டிருந்தனர். ஆங்கிலேயர் சிறுகச் சிறுக நாடுகளைக் கைப்பற்றியாள

வும் தொடங்கினர். ஆற்காட்டு நவாபு, நிஜாம் அரசர், ஐதர் அலி, மராத்தியர் ஆகியோர் தென்னிந்தியாவில் செல்வாக்குடையவர் ஆவர். ஆனால் இவர்களுள் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் ஆதியிலிருந்தே பகை; எனவே, தென்னிந்தியாவில் சமாதானமே இல்லை.

ஆற்காட்டு நவாபும், நிஜாம் அரசரும் ஒரு சில சமயங்களில் ஒற்றுமையாகவும், ஒரு சில சமயங்களில் பகைத்தும் ஒழுகுவர். ஆங்கிலேயர் தங்கள் நிலை கருதி ஆற்காட்டு நவாபிடம் நட்புப் பூண்டிருந்தனர். ஐதர் அலி செய்துவந்த அக்கிரமச் செயல்கள் சொல்லிலடங்கா. ஐதர் படைகள் கொள்ளை அடித்தன; ஆதலால் ஐதரையும் அவரது படைகளையும் கண்டு மக்கள் நடுங்கினர். தங்கள் செல்வங்களைப் பூமியில் புதைத்து வைத்தனர். உத்தியோகத்தர்களோ செல்வம் திரட்டினர். அக்காலம் துவிபாஷிகளுக்கு, ஏராளமான செல்வம் திரட்ட வசதி இருந்தது. பச்சையப்பரும் அதனை நன்குணர்ந்தார். ஆனால், இளம்பருவமுதல் அறத்திலீடுபட்ட மனமுடையவராதலால் அறநெறியிலன்றிப் பிறநெறியில் செல்வம் தேடப் பச்சையப்பர் துணிவு கொள்ளவில்லை. அதற்கு எவ்வளவு மன உறுதி வேண்டும்! அதனாலன்றோ அவர் பெயர் இன்றும் மறையாமல் நிலைத்திருக்கின்றது? அவரது அறச்செயல்கள், அவர் பெயர் உலகமுள்ளளவும் நிலைநிற்குமாறு செய்துவிட்டன.

பச்சையப்பர் காலம், இடம் கருதிச் செவ்வையாகச் செயலாற்றினர். அவர் தருமராய முதலியார், புங்கத்

தூர்ச் செங்கல்வராய முதலியார் என்னும் இருவரையும் துணையாகக் கொண்டார். அவர்கள் துணைகொண்டு ஆங்கிலேயரின் ஜாகீரான பூவிருந்தவல்லி, திருப்பாசூர் முதலான இடங்களிலிருந்து வசூலித்தற்குரிய நெல் குத்தகையைத் தாம் வாங்கிக் கம்பெனியாருக்குப் பணத்தைச் செலுத்தி வந்தார். அத்தொழிலைச் செம்மையாக நடத்தி வந்ததால் ஆண்டுதோறும் மிக்க லாபம் கிடைத்தது. இதுபோன்ற பல வியாபாரங்களைப் பச்சையப்பர் செய்து வந்தார். அதனால் அவருக்குப் பொருள் திரண்டு வந்து சேரலாயிற்று. ஆற்காட்டு நவாபான வாலாஜாவுக்கும், சென்னைப் பக்கங்களில் வியாபாரம் செய்த ஆங்கிலேயருக்கும் மன வேற்றுமை ஏற்பட்டது. நவாபு வாலாஜா, ஜோஸப் சலிவன் என்னும் அதிகாரியை வங்காளத்திலிருந்த ஆங்கிலேய கவர்னர்-ஜெனரலிடம் அனுப்பினார். சலிவன் சென்று வந்ததால் நவாபுக்குச் சில நன்மைகள் ஏற்பட்டன. கவர்னர்-ஜெனரல், சலிவன் துரையை ஆங்கிலப் பிரதிநிதியாக நவாபு சமஸ்தானத்திற்கு நியமித்தார். அத்தகைய சலிவன் துரையிடம் பச்சையப்ப முதலியார் துவிபாஷியாக வேலைக்கு அமர்ந்தார். அத்துரையவர்களின் நன்மதிப்பையும் தம் நன்னடத்தையால் பெற்றார். அவர் பேரும் புகழும் சிறந்தோங்கி வளர்ந்து வரலாயின. யாவரும் பச்சையப்பரைப் போற்றிக் கூறினர். பல்வேறு நிலைகளில் பல்லோர் பழக்கம் ஏற்பட்டதால் பச்சையப்ப முதலியாரிடம் ராஜ தந்திரங்களும் நிறைந்திருந்தன. தென்னாட்டில் பாளையக்காரரும், குறுநில மன்னருமாகப் பலர் ஆண்டுகொண்டிருந்தனர். குழப்பம் மிக்க காலமாதலால், அவர்கள் பல்வேறு சமயங்களில் பச்சையப்ப

முதலியாரின் உதவியை நாடி வருவர். அதனால் பல குறுநில மன்னரும் பாளையக்காரரும் பச்சையப்ப முதலியாருக்கு வேண்டியவர்களாக இருந்தனர். அவர்களுக்குப் பணமுடை ஏற்படுங் காலங்களிலெல்லாம் பச்சையப்ப முதலியார் பணம் கொடுத்து உதவுவார். அதனால் பச்சையப்ப முதலியாருக்கு வட்டி மூலம் அதிகப் பணம் வந்து குவிந்தது.

அக்காலத்தில் தஞ்சாவூரை ஆண்டுவந்த மராத்திய அரசர் ஆங்கிலக் கம்பெனியாருக்கு ஆண்டுதோறும் ஓரளவு தொகை கொடுக்கவேண்டும் என்று ஒரு உடன் படிக்கையிருந்தது. அவ்வரசர் ஒருவகை நாணயங்களால் கொடுக்க முடியாமல் பலவகை நாணயங்களாகக் கொடுத்தார். அதனால் ஆங்கிலக் கம்பெனிக்குப் பல இடைஞ்சல் உண்டாயின. அத்தொகையைப் பச்சையப்பர் ஒரேவகை நாணயத்தால் கொடுத்து விடுவதென்றும், தஞ்சையரசர் பச்சையப்ப முதலியாருக்கு நூற்றுக்குப் பத்து வீதமும், இருபது வீதமும் தள்ளிக் கொடுப்பதென்றும் ஏற்பாடு செய்து கொண்டார். இவ்விதமான உதவியைக் கப்பங் கட்டும் பிறர்க்கும் பச்சையப்ப முதலியார் செய்து வந்தனர். அவ்விதம் தள்ளிக் கொடுக்கப்படும் சிறுசிறு தொகையாலும் ஏராளமாகச் செல்வம் குவிந்தது. பச்சையப்பர் இது காரணமாக, தஞ்சாவூரில் ஒரு பெருமாளிகையைக் கட்டிக்கொண்டு சிறப்பாக வாழ்ந்து வரலானார்; தமக்குக் கிடைத்த பெருஞ் செல்வத்தைப் பௌனி நாராயணப் பிள்ளையிடமே கொடுத்து வைத்தார். நாராயணப் பிள்ளை தம் பெயராலும் வர்த்தகம் செய்யும்படி அவருக்கு

அனுமதி கொடுத்தார். அதனாலும் பெருஞ் செல்வம் திரண்டது. எங்கிலேயிலும் பச்சையப்பர் அறஞ்செய்தலே மேற்கொண்டிருந்தார்; உற்றார் உறவினருக்கும் உதவி வந்தார்.

எவ்வளவு இருப்பினும் என்? அவருக்குப் பொருளும் புகழும் பொங்கிப் பெருகினாலும் என்ன பயன்? பொன்போற் புதல்வன் இல்லாத குறை பச்சையப்பரை மிகவும் வருத்தியது. அதனால் அவர் புதல்வர்ப் பேறு கருதி இரண்டாவது மனைவியை மணம் செய்துகொண்டார். அப்பெண் **வேதாரணியம்** என்னும் தலத்தில் வாழ்ந்த ஒரு வேளாளரின் பெண்; **பழநி ஆயி** என்னும் பெயரினள். பச்சைப்ப முதலியார் இரண்டாம் மனைவியின் மூலம் ஒரு பெண் மகவைப் பெற்றார். அதற்குச் **சின்னாயி** என்று பெயர். ஆனால் அக்குழந்தை இளம் பருவத்திலேயே இறந்துவிட்டது. இரண்டாவது மணம் செய்து கொண்டபின் பச்சையப்பருக்கு வீட்டில் துன்பமே மிகுந்தது. மூத்தாளும் இளையாளும் நேர் மாறாக நடந்து கொண்டனர்.

முதலியாரைப் போலவே துவிபாஷித் தொழிலில் திரண்ட செல்வத்தைத் திரட்டி, அறங்கள் பல புரிந்த, **குழந்தை வீரப்பெருமாள் பிள்ளை** சென்னையில் சிந்தாதிரிப்பேட்டையில் வசித்து வந்தார். அவரும் முதலியாரும் சிறந்த நண்பர்கள். ஆதலால் பச்சையப்ப முதலியார், குழந்தை வீரப்பெருமாள் வீட்டிற்கு எதிரில் பெரிய வீடு ஒன்று கட்டிக்கொண்டு அங்கு வசிக்கலானார். அக்காலமே பச்சையப்ப முதலியாருக்கு மிகத் திரண்ட வருமானம் வந்த காலம் ஆகும். செல்வம்

பெருகப் பெருகப் பச்சையப்பரின் அறச் செயல்களும் பெருகலாயின. காசி முதல் ராமேசுவரம் வரைக்குமுள்ள சிவ, விஷ்ணுத் தலங்களில் நித்தியக் கட்டளைகளை ஏற்படுத்தினார். பச்சையப்ப முதலியார் அறச் செயல்களைத் தமிழ் நாடெங்கும் இன்றும் காணலாம்.

பச்சையப்ப முதலியார் தஞ்சாவூரில் வசித்துவந்த காலத்தில் **அமரசிங்கு** என்னும் அரசர் தஞ்சாவூரை ஆண்டுவந்தார். அவரும் சென்னை அரசாங்கத்திற்கு அடங்கிக் கப்பம் கட்டுபவரே. அவர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஆண்டு தோறும் செலுத்த வேண்டிய கப்பத் தொகையைச் சரிவரச் செலுத்தவில்லை. சென்னை கவர்னர் **ஆர்ச் பெல்காமல்** பச்சையப்ப முதலியாரை வரவழைத்து உபசரித்துத் தஞ்சாவூர் நிலைமையை விளக்கி, தஞ்சாவூரினது நெல் சாகுபடி வருமானத்தை வசூல் செய்து பணமாகக் கம்பெனிக்குக் கட்டிவருமாறு வேண்டிக்கொண்டார். முதலியார் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், தஞ்சை அரசனுக்கு ஒரு லக்ஷம் வராகன் கடனாகக் கொடுத்தார். தஞ்சாவூர் அரசர் பின்னும் பல செல்வர்களிடம் கடன் வாங்கினார். அரசர் நிலைமையைப் பற்றிப் பல்வேறு விதமாகக் கேள்விப்பட்ட கம்பெனியார் அரசருக்குக் கடன் கொடுத்தவரை விசாரிக்க விரும்பிச் சென்னைக்கு வரும்படி கட்டளையிட்டனர். முதலியார் அவர்கள், தம் செயல் நேர்மையானதென்று விளக்கி, அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினார். சென்னை வாசம் முதலியாரின் உடல் நிலைக்கு ஏற்கவில்லை. எனவே, அவர் மறுபடி தஞ்சைக்

குச் சென்றார். அவரைப் பாரிசவாயு, நீரிழிவு, வயிற்று வலி, மூலரோகம் முதலியன தொடர்ந்து துன்புறுத்தின. முதலியார் அவர்கள் கும்பகோணத்திற்குச் சென்றார். அவர் தமக்கு மரணகாலம் நெருங்கிவிட்டது என்று அறிந்தார். 1794-ம் வருடம்மார்ச்சு மாதம் 22-ஆம் தேதி பௌனி நாராயணப் பிள்ளைக்குத் தம் கருத்தைத் தெரிவித்தார்; மரண சாஸனத்தை எழுதி முடித்தார். பின்னர், பச்சையப்ப முதலியார் திருவையாறு என்னும் தலத்தை அடைந்தார். அங்கு 1794-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

அவருக்குப் பின் அவர் செல்வம் குறித்து பலர் வழக்குத் தொடர்ந்தனர்; யாவும் பயனற்றுப் போயின. முதலியார், தஞ்சை யரசருக்குச் செய்த உதவிக்காகத் தென்னங்குடி என்னும் கிராமத்தைச் சுரோத்திரியமாக அரசர் அவருக்கு அளித்திருந்தார். அதனை முதலியார் சிதம்பரம் நடராசப் பெருமானது மாலைக் கட்டளைக்கு உபயோகப்பட ஈந்தார். ஜார்ஜ் நார்ட்டன், அட்வகேட்-ஜெனரலானபோது பச்சையப்பரின் தருமங்களைச் சரிவர நடத்த தகுந்த ஏற்பாடுகள் செய்தார். மற்றும், ஜார்ஜ் நார்ட்டன் துரையவர்களின் பெருமுயற்சியால் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி நிறுவப்பட்டது. காஞ்சிபுரத்திலும், சிதம்பரத்திலும் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளிகள் ஏற்பட்டன. காஞ்சியில் இப்பொழுது அவர் பெயரில்ஒரு கல்லூரியும் நிறுவப்பட்டு நடந்துவருகிறது. தமிழகம் உள்ளளவும் பச்சையப்ப முதலியாரின் பெயர் மறைபாது நின்று நிலவுமாறு. ஜார்ஜ் நார்ட்டன் செய்த செயல்

போற்றத் தக்கது. ஊக்கம், உழைப்பு, உண்மை, அன்பு, அருள், இரக்கம், தெய்வபக்தி என்ற சீரிய குணங்களால் சிறந்து, முயற்சியால் பெரும் பொரு ளீட்டி என்றும் அழியா அறத்திற்காக்கிப் பேரும் புக ழும்பெற்ற தமிழகப் பெரியார் பச்சையப்ப முதலியார் ஆவர்.

# 5. பரிதிமாற் கலைஞன்

## [வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள்]

உலகில் மக்களாய்ப் பிறந்தார் அனைவரும் அறிவுச் செல்வத்தைத் தேடிக்கொள்ளுவது இயல்பு; மனிதன் ஆறறிவுடையவன்; இயற்கையாகவே நல்லறிவு படைத்தவன். அவன் அறிவு, கல்வியினால் பின்னும் ஒளி வீசுவதாகும். மாணிக்கம் இயற்கையில் ஒளியுடையது. அது சாணை பிடிக்கப்பட்டால் பின்னும் அதிக ஒளி பெற்று விளங்கும் இயல்பினது. சாணை பிடிக்கப் படுதலால் ஒளியும் மதிப்பும் அதிகப்படுதல்போல, கல்வியறிவால் மனிதனது இயற்கை அறிவு விரியும்; ஒளியும் பெறும். அறிவு பெருகப் பெருக, அவனது வாழ்க்கை திருந்துகிறது; நாகரிகம் முன்னேறுகிறது. பொறுமை, உண்மை பேசுதல், இன்சொற்கூறல், நன்னெறியில் ஒழுகல் முதலியன அவனிடம் அமைதலைக் காணலாம். அவற்றால் அத்தகையோன் யாவராலும் விரும்பப் படுகிறான்.

கல்வியை யாரும் எளிதில் பெற்றுவிடல் இயலாது. எழுதவும் படிக்கவும் மட்டும் அறிந்திருத்தலால் கல்வியைப் பெற்றவனாக மதிக்கப்படான். எழுதப் படிக்கத் தெரிதல் வாழ்க்கையில் சில நன்மைகளை அளித்தல் கூடும்; ஆனால் புலமை பெற்றதாகக் கருதி விட இயலாது. புலமையெய்துதலாகிய கல்வி ஒருவனுக்கு வாய்க்கப் பெறுதல் அவனது முன்வினைப்



வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள்

பயனே. எத்துணையோ மக்கள் தமிழை நன்கு கற்றவர் ஆவர்; ஆனால் புலமை பெற்றவராகார். ஒட்டக்கூத்தர், கம்பர், புகழேந்தி, குமரகுருபரர், சிவப்பிரகாசர், மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலானோர் போன்று புலமை பெற்றோர் சிலரே. ஆனால் அவர்கள் காலத்தில் வாழ்ந்த மக்கள் எவ்வளவு பேர்! எனவே, மொழிப் புலமை எய்துதல் என்பது எளிதன்று. மொழியைக் கற்றோர் பலர் இருக்கலாம்: மொழியில் புலமை யெய்திக் கவி பாடும் திறன் படைத்தோராய் யாவரும் போற்ற விளங்குவோர் மிகச் சிலரே. மேலே கூறியுள்ளோர் இயற்றிய நூல்களை எடுத்துப் படிப்போர் 'இவ்வளவு கவிகளை இவ்வளவு இனிமையாகப் பாடுதற்கு அவர்கள் என்ன தவம் செய்தனரோ,' என்று வியப்புறுதல் ஒரு தலை. அதிலும் நெடிது வாழ்ந்து கவிகள் இசைத்தலையே தொழிலாகக் கொண்டார்க்கும் அரிதாகும் என வியப்பார்களாயின், குறுகிய வாழ்க்கையில் அரிய பல நூல்களை இயற்றி அழியாப் புகழ் எய்தினரும் உளர் என்பது விந்தையிலும் விந்தையன்றோ! ஒருவர் ஒரு மொழியைத் தெளிவுறச் சிறப்பாகக் கற்பதற்கு, ஆண்டுகள் இவ்வளவு வேண்டுமென அறுதியிடுதல் இயலாது. அதிலும் ஆங்கிலத்தில் பி. ஏ. பட்டமும், தமிழில் நிறைந்த புலமையும் பெறவேண்டுமாயின் குறைந்தது ஒருவருக்கு வயது இருபதாகிவிடும். ஆயினும், அன்னார் வாழ்ந்தது முப்பத்து மூன்றே வயது எனின், அவர் வாழ்க்கையில் எஞ்சி நின்றது பதின்மூன்றாண்டுகளே. இப்பதின் மூன்றாண்டுகளில் கல்விக்குச் செலவழிக்கக்கூடிய கால அளவு குறுகியதே ஆகும். அக்குறுகிய காலத்தில் பல அரிய நூல்களியற்றி அழி

யாப் புகழ் எய்துவது வியக்கத்தக்கதே அன்றோ! அஃது அவர் மொழிப் பற்றினை நன்கு விளக்குவதாகும்.

குறுகிய வாழ்வில் நீண்ட புகழைத் தேடிக்கொண்டு 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் **வள்ளுவர்** வாக்கிற்கு இலக்காக வாழ்ந்த பெரியார் **வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரிகள்** ஆவர். ஆங்கிலத்தில் வல்லவரும், கல்வியறிவு நிறைந்தவருமாகிய **போப்** என்னும் ஆங்கிலக் கவிஞரால் போற்றப்பட்டார் எனின், அஃது இறும்பூதை விளைவிக்கின்றது. அம்மட்டோ! தமிழ்மொழியில் இல்லாத ஒருவகை அமைப்பை ஆங்கில மொழியிலுள்ள நெறியைத் தழுவித் தமிழ் மொழிக்குக்கொண்டு வந்துள்ளார் எனின், அவர் போற்றத்தக்க பெரியார் அன்றோ? நாடக இலக்கண நூற்கள் இல்லை என்ற குறையைப் போக்கிய பெரியார் எனின் அவரைப்பற்றி வேறு என்ன சொல்லவேண்டும்?

பாண்டி நாடு புண்ணிய பூமி. புலவர் பலரைத் தோற்றுவித்த நாடு. **அகத்திய முனிவர்** வாழ்ந்த பொன்னாடு. **சங்கம்** விளங்கிய நன்னாடு. தமிழோங்கி வளர்ந்த சிறந்த நாடு. கன்னித் தமிழ் நாடு பாண்டி நாடே எனின் ஐய முண்டோ? 'யார் அறிவார் தமிழ் அருமை என்கின்றேன், என் அறிவு ஈனமென்றோ மதுரை மூதூர் நீரறியும், நெருப்பறியும், அறிவுண்டாக்கி நீ அறிவித்தால் அறியும் நிலமுந்தானே' என்று உருகப் பாடிய புலவர் வாக்கு இங்கு நினைவிற்கு வருகிறது. தமிழ அவ்வளவு இனிமை சான்றது.

"தமரநீர்ப் புவன முழுதொருங் கீன்றாள்
தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவும் தனிமுத லொரு நீ
சவுந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி உக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையா லெனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்?"

என்று குமரகுருபரர் பாடிய செய்யுளை மறக்கமுடியுமோ? இத்தகைய இனிமையான தமிழ்மொழி வழங்கும் பாண்டிய நாட்டின் தலைநகர் **மதுரை**; மதுரைக் கருகில் உள்ளது **விளாச்சேரி** என்ற கிராமம். அச்சிற்றூரில் அந்தணர் சிலர் வாழ்ந்து வந்தனர். அவ்வந்தணர் தம் ஒழுக்கநெறி கடவாத உத்தமர். அவர்களுள் ஒருவர் **கோவிந்த சிவனார்** என்பவர். அவர் சாமவேதி; கௌசிக கோத்திரத்திலுதித்தவர். கோவிந்த சிவனார் சைவத்தில் ஊன்றிய பற்றுடையவர். யோகாப்பியாசங்களும் பயின்றவர்; சாஸ்திரஞானத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றவர். யோகாப்பியாசம் கைவந்தவர் ஆதலால் நீர்மேல் நிற்றல், அந்தரத்தில் நிற்றல், நெருப்பின்மேல் நிற்றல் என்பவற்றைச் செய்து காட்டியவர்; மாந்திரீகத்திலும் வல்லவர். இத்தகைய பெரியார், சிவாநுபூதிச் செல்வராய் விளங்கிய **மாங்குடி ஸ்ரீமணிய சிவனாரின்** முதல் சீடர். ஒழுக்கநெறியில் தவறாது வாழ்ந்த கோவிந்த சிவனாருக்கு இரு குமாரர் பிறந்தனர். மூத்தவர் **சுந்தரேசர்**; இளையவர் **சூரியநாராயணர்**.

சூரியநாராயணர் 1870-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 7-ஆம் தேதி பிறந்தார். மிக்க இளமையிலேயே இவரி

டம் மிகுந்த சுறுசுறுப்பும் துடுக்குத் தன்மையும் இருந் தன. எவற்றையும் கூர்ந்து கவனிக்கும் இயல்பும், பிறர் கூறுவனற்றை விரைவில்உணரும் திறனும் இவர்பால் காணப்பட்டன. தந்தையிடமும் அண்ணனிடமும் அளவிலா அன்பும், அச்சமும், பணிவுமுடையவராக விளங்கினர். சிறு பருவத்திலேயே கண்ட புத்தகங்களைப் படிப்பார் ; எப்பொழுதும் புத்தகமும் கையுமாக இருப்பார். பத்து வயது வரையில் இவர் தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் படித்தார். அதனால் இவர் சிறு நூல்களான நீதி நூல்களும், நிகண்டு முதலிய கருவி நூல்களும் நன்கு பயின்ற பின்னர், பசுமலை உயர்நிலைப்பள்ளியில் மாணவராகச் சேர்ந்து படிக்கலானர். விளாச்சேரிக்கும் பசுமலைக்கும் ஒரே மைல் தூரம். ஆதலால் இவர் பள்ளிக்கூடத்திற்குக் கால் நடையாகவும் செல்வார் ; சில சமயங்களில் போக்கு வண்டியிலும் போவார். பசுமலையில் படித்து வருங்காலத்தில் ஒரு சமயம் இவர் தமிழ்மொழி கற்பதில் ஊக்கம் குன்றியிருந்தார். சிறந்த அறிவுள்ள பிள்ளை இவர் என்பதை நன்கு உணர்ந்த தமிழாசிரியர் இவருக்குத் தமிழில் ஊக்கம் உண்டாக்கும் நன்னோக்கத்தாலும், இவர்மேல் வைத்திருந்த அன்பினலும் இவரைத் தண்டித்தார். 'நல்ல மாட்டிற்கு ஓரடி, நல்ல பிள்ளைக்கு ஒரு சூடு' என்பது பழமொழியல்லவா? தமிழாசிரியர் இவரைத் தண்டித்தது தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும், சூரியநாராயணருக்கும் நன்மையையே விளைவிப்பதாயிற்று. 'மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது' என்பது உண்மையே ஆயிற்று. தமிழாசிரியர் தண்டிக்கவே, சாஸ்திரியாருக்குத் தமிழில் ஊக்கம் பிறந்தது; தமிழைச் செவ்வை

யாகக் கற்றுணர்வது தம் கடன் என உணர்ந்தார்: கற்கவும் தொடங்கினர். மன முண்டானால் வழியுண்டல்லவா? அது முதல் இவர் தமிழ் மொழியைத் தம் உயிரினும் சிறந்ததாக எண்ணினர். எவற்றையும் நுட்பமாகக் கூர்ந்து நோக்கி அறியலானர். கல்வியைக் கற்குங் காலத்திலேயே எப்பொருளையும் நுட்பமாக ஆராய்ச்சி செய்து, அறிந்துகொள்வது இவருக்கு இயல்பு.

பசுமலைப் பள்ளிக்குப் பின் இவர் **மதுரையி**லிருந்த **மதுரை ஜில்லா உயர்தரக் கலாசாலை**யில் சேர்ந்து படிக்கலானர். இவர் தந்தையாரிடம் சமஸ்கிருத மொழியை ஐயம் திரிபறக் கற்றுக் கொண்டார். அக்காலத்தில் மதுரையில் **சபாபதி முதலியார்** என்று ஒரு மகாவித்துவான் இருந்தார். அவர் சேதுபதி வேந்தரால் பெரிதும் போற்றப்பட்டவர். சபாபதி முதலியார் தமிழ் மொழியோடு சமஸ்கிருதமும் ஆங்கிலமும் நன்கு பயின்றவர்; கவிகள் பாடும் ஆற்றலுடையவர்; தமிழைப் போதிப்பதில் திறமை வாய்ந்தவர். அவர் மதுரைத் துரைத்தன வித்தியாசாலையில் தமிழாசிரியராய் இருந்து உபகாரச் சம்பளம் பெற்றவர். அவர் பல மாணுக்கர்களுக்குத் தமிழமுதை இனிக்க அளித்துத் தமிழன்னைக்கு மதுரையில் தொண்டு புரிந்துவந்த பெரியாராவர்.

1885–ஆம் ஆண்டு சாஸ்திரியார் சபாபதி முதலியாரிடம் தமிழ் கற்கச் சென்றார். அப்பொழுது சாஸ்திரியாரோடு இருபதின்மர் முதலியாரிடம் தமிழ்க் கல்வி கற்றுவந்தனர். அவர்கள் யாவரினும் சாஸ்திரியார் கூர்ந்த மதியினராயிருத்தலைக் கண்டு முதலியார் மிக

அன்புகொண்டு, இன்பமாகத் தமிழைப் போதித்து வந்தார்; நுண்ணிய மதி படைத்த சாஸ்திரியாருக்குத் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என்ற மொழிகளில் தமிழ்ச்சுவை ஏற ஏற, பிறமொழிகளில் பயிற்சியும், ஆராய்ச்சியும், மிகப் பெருகின. அம்மட்டுமோ! தூய செந்தமிழ் நடையில் திருத்தமாகப் பேசுவதும் எழுதுவதும் அவருக்கு மிக எளிதாயிற்று. அந்நிலையில் சாஸ்திரியார் யாவரிடத்தும், மற்றும் வீட்டிலும் தூய செந்தமிழில் பேசிவந்தார்; எழுதுவதும் திருந்தமான மொழியிலேதான்.

ஒரு மொழியைத் திருத்தமாக எழுதினாலும் பேசினாலும் அதனில் அம்மொழியின் இயல்பையும் இனிமையையும் காணலாம். மக்கள் தம் தாய்மொழியைத் திருத்தமாக எழுதுவதற்கும், பேசுவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். தாய் தந்தையர், உற்றார் உறவினர் யாவரும் திருத்தமாகப் பேசுவதை மேற்கொள்வாராயின் குழந்தைகளும் தம் தாய்மொழியைத் திருத்தமாகப் பேசுவதற்கு எளிதில் கற்றுக்கொள்ளும் என்பதில் ஐயமுண்டோ? திருத்தமாகப் பேசுபவரிடத்தில் கொச்சையாகப் பேசுவோர் உரையாடுவதற்கு நாணுவர்; அஞ்சுவர். திருத்தமாகப் பேசுவதனால் தாய்மொழிக்கும் தாய் நாட்டிற்கும் பெருமை உண்டாகிறது. பிற நாட்டாரால் நன்கு மதிக்கவும் படுவர். சாஸ்திரியார் சங்க நூற்களை நன்கு ஆராய்ந்து கற்றார். அவ்வாராய்ச்சியால் அறிவு விளம் பெற்றது. அக்காலத்தில் அவர் 'மாலா பஞ்சகம்' என்ற சிறு நூல் ஒன்றை இயற்றினார் என்பர்.

சாஸ்திரியார் உடற்பயிற்சியிலும் ஊக்கங் காட்டினார். அவர் மாணவராயிருக்குங் காலத்திலேயே கலாசாலைத் தேகப்பயிற்சி விளையாட்டுகளில் அதிகப் பங்கு எடுத்துக் கொண்டார்; அவர் பெற்ற பரிசுகளும் பல. அவருக்குச் சிலம்ப விளையாட்டிலும், மல்யுத்தத்திலும் விருப்பம் உண்டு. அதனால் அவர் மதுரையிலிருந்த யானை மாவுத்தர் ஒருவரிடம் அவ்விரண்டிலும் நல்ல பயிற்சி பெற்று, அப்பயிற்சிப் போட்டிகளில் வெற்றி பெற்றுப் பொற்பதக்கங்களும் பெற்றார். அப்பயிற்சிகளின் பயனாக உடற்கட்டும், பொலிவும், உறுதியும், நேர்மையும் அவரிடம் குடிகொண்டன. சாஸ்திரியார் 1890-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகப் பரீட்சையான (எப். ஏ.) இடைக்கலைப் பரீட்சையில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். அதனால் சேதுபதி வேந்தரது உபகாரச் சம்பளமும் சாஸ்திரியாருக்குக் கிடைத்தது. மதுரையில் சோமு முதலியார் என்ற செல்வர் ஒருவர் இருந்தார். அவர் மகனார் விசுவநாத முதலியார். விசுவநாத முதலியாருக்கும் சாஸ்திரியாருக்கும் நட்பு ஏற்பட்டு வளர்பிறைபோல் வளர்ந்தது. சான்றோர் நட்பின் இலக்கணம் அதுவே அன்றோ? விசுவநாத முதலியார் தம் நண்பருக்குக் கல்வியிலிருந்த ஆர்வத்தையும், ஊக்கத்தையும், ஆக்கத்தையும் கண்டு தக்க உதவி புரிந்து அவரைச் சிறந்தோராக்க நினைத்தார். அதனால், முதலியார் சாஸ்திரியாரைத் தம் சொந்தச் செலவில் அழைத்துக் கொண்டு சென்னைக்கு வந்தார்; சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் சேர்த்தார்.

அந்தக் காலத்தில் கிறிஸ்தவக் கல்லூரித் தலைவர் **டாக்டர் மில்லர்** என்பவர். அவர் கல்வியிலும், மதிநுட்பத்திலும் சிறந்தவர்; கிறிஸ்தவக் கல்லூரி ஓங்கி உயர்ந்து விளங்கினதற்குக் காரணமானவர். அவர் தம் கல்லூரி மாணவர் ஒவ்வொருவரையும் தனித்தனியே நன்குணர்வார். மாணவர் முன்னேற்றத்தில் பேரூக்கம் கொண்டவர். அவர்பாலிருந்த அரிய குணங்கள் பல மாணவரை அவர்பால் ஈர்த்தன. சாஸ்திரியார் கல்லூரியில் சேர்ந்த வருஷத்தில் முதல் நாள் வழக்கம்போல் ஒவ்வொரு மாணவரையும் பெயர் சொல்லி அழைத்து, வரலாறு முதலியவைகளை மில்லர் துரை கேட்டறிந்தார். சாஸ்திரியார் முறை வந்தது. மில்லர், வி. கோ. சூரியநாராயணன் என்று கூப்பிட்டார். சாஸ்திரியார் எதிரில் போய் நின்றார். அப்பொழுது மில்லர், 'நீளமான உம் பெயரை மாற்றிவைத்துக் கொள்ள முடியுமோ?' என்று கேட்டார். அவ்வாறே செய்வதாகக் கூறினார் சாஸ்திரியார். மறுநாள் மில்லர் மாணவர்கள் பெயர்களைக் கூப்பிடும்பொழுது சாஸ்திரியார் முறை வர, சாஸதிரியார் தம் பெயரைச் 'சூரியநாராயண சாஸ்திரி' என்று மாற்றி வைத்துக் கொண்டதாகக் கூறினார். 'புதுப் பெயர் பழம் பெயரினும் நீளமாகவுள்ளதே' என்று மில்லர் வினவ, சாஸ்திரியார், 'பெயரை மாற்றிக் கொள்ளத்தானே சொன்னீர். அதன்படி செய்தேன்' எனத் துணிவுடன் கூறினார். மில்லர் அவர் துணிவும் நுண்மதியும் கண்டு வியந்தார். அதுமுதல் மில்லர் சாஸ்திரியாரிடம் தனிப்பட்ட அன்பு காட்டினார்; பல உதவிகளைப் புரிந்தார்.

சாஸ்திரியார் 1892–ல் பி. ஏ. பரீட்சையில் தமிழி லும் வேதாந்தத்திலும் இந்த இராஜதானியிலேயே முதல்வராகத் தேறினார். அதனால் தமிழுக்குரியதான பாஸ்கர சேதுபதியவர்களின் பரிசை சாஸ்திரியார் பெற்றார். அக்காலத்தில் சென்னையில் **சி. வை. தாமோ தரம் பிள்ளை** என்பவர் ஒருவர் இருந்தார் அவர் யாழ்ப் பாணத்தார். தமிழில் தொல்காப்பியம், வீரசோழியம் தணிகைப் புராணம், சூளாமணி, இலக்கண விளக்கம் முதலான நூல்களைப் பதிப்பித்தவர். அவர் அரசாங்க உத்தியோகத்திலிருந்து விலகி ஓய்வு எடுத்துக் கொண் டார். தமிழில் முதன்மையாய்த் தேர்ச்சி பெற்றுப் பாஸ்கர சேதுபதியின் பரிசு பெற்றவரை அவரும் பரீட் சிப்பது வழக்கம். அம்முறைப்படி சாஸ்திரியாரை அவர் அழைத்தார். சாஸ்திரியார் ஒரு பெரியார் துணை யுடன் அவரிடம் சென்றார். பிள்ளையவர்கள் ஒரு மணி நேர வினாப்பத்திரம் ஒன்றை அவரிடம் தந்து விடை யெழுதுமாறு பணித்தார். சாஸ்திரியார் அவ்வாறே அவ்வினாப்பத்திரத்திற்கு விடை எழுதினார். மறுநாள் வரும்படி பிள்ளையவர்கள் சொல்லச் சாஸ்திரியார் அவ ரிடம் சென்றார். பிள்ளையவர்கள், 'நீர் தமிழில் வல்ல மையுடையவர் என்பதை அறிந்தேன். உம்முடைய மொழி பெயர்க்கும் திறன், கவிபாடும் திறன் என்பவற் றையுங் காண விழைகிறேன்'', என்று கூறி **ஷேக்ஸ்பியர்** நாடக நூலிலிருந்து ஒரு சிறு பகுதியை அளித்துச் செய்யுளில் மொழிபெயர்க்குமாறு கூறினார், சாஸ்திரி யார் சிறிதும் தயக்கம், அச்சம், என்பன இன்றி மிக எளிதாக,

"கன்னகங் கனிந்த பாடற் காயக னல்ல னேனும்
இன்னிசை கேட்டு நெஞ்சம் இளகிடா திருப்பான் வஞ்ச
மன்னவர்த் துரோக மாதி மாயவஞ் செய்யத் தக்கான்
அன்னவன் தனைநம் பாம லகற்றிட வேண்டு மன்றே."

என்று பாடி முடித்தார். பாட்டைக் கேட்ட பிள்ளையவர்கள் பெரிதும் மகிழ்ந்து 'திராவிட சாஸ்திரி' என்று அவரை வாயார அழைத்தனர். முன்னாள் வினாக்களுக்கு எழுதிய விடையையும், அதன் நடையையும் சிறப்பாக எடுத்துக் கூறி, அந்நடை பற்றியே ஒரு புத்தகம் எழுத இயலுமோ என வினவினார். சாஸ்திரியார் அதற்கிணங்கி மதிவாணன் என்னும் அரிய செந்தமிழ் நடையைக்கொண்ட நூலை இயற்றினார். ஆனால் அந்நூல் முடிவு பெற்றுக் கண்டு மகிழும்பேற்றைப் பிள்ளையவர்கள் பெறவில்லை என்பது வருந்தத்தக்கது.

சாஸ்திரியாரின் மதி நுட்பத்தைக் கண்ட மில்லர் துரை அவரைத் தம் கல்லூரியில் தமிழாசிரியராக அமர்த்தினார். வேதாந்த தத்துவத்திலும் இராஜதானியிலே முதல்வராகத் தேறியவர் அல்லவோ சாஸ்திரியார்? அவர் வேதாந்த தத்துவத்தைப் போதிக்கும் ஆசிரியத் தொழிலை மேற்கொள்ளாது, தமிழாசிரியர் பதவியை மேற்கொண்டது அவரது தமிழ்ப்பற்றை இனிது விளக்கும். 1895-ல் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் இறந்தார். அவர் பதவி சாஸ்திரியாருக்கே அளிக்கப்பட்டது. சாஸ்திரியார் பி. ஏ. மாணவராக இருந்த காலத்திலேயே விவேகசிந்தாமணி என்ற பத்திரிகையில் அநேகக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். தமிழ் ஆசிரியரான பின் கல்

லூரியில் தமிழ்ப் பாடம் கற்பிப்பதன்றி இல்லத்தில் பல தமிழ் மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தும் வந்தார். சாஸ்திரியார்பால் தமிழ் கற்ற இயற்றமிழ் மாணவர் களில் **சி. என். சரவண முதலியார், வி. அ. சுவாமிநாத அய்யர், ந. பலராமய்யர்** முதலாயினோர் சிறப்பாகக் கூறத் தக்கவர்களாவர். சரவண முதலியார் தமிழ் கற்க வந்தார். தமிழ்ப்பாடம் நடந்துகொண்டு வந்தது. ஒரு மாதம் ஆனபின் அம்மாதத்திற்குரிய சம்பளத்தை ஆசிரியர்க் குக் கொடுக்க வந்தார். அப்பொழுது சாஸ்திரியார், "யாம் தமிழ் மொழியை எவர்க்கும் விற்பதில்லை. இவ்வெண்ணம் உமக்கு இருக்குமாயின், இனி நீர் இங்கு வரவேண்டாம்" என்று கண்டிப்பாய்க் கூறினார். இத னால் சாஸ்திரியார் தமிழ் கற்பாரிடமிருந்து யாதொரு கைம்மாறும் வேண்டுவதில்லை என்பது விளங்கும். தமிழ்த் தொண்டே சாஸ்திரியாருக்கு இன்பம் அளிப் பதாகும்.

சரவண முதலியார் பி. ஏ. பரீட்சைக்குச் சென்ற பொழுது சாஸ்திரியார் பரீட்சகர். சரவண முதலியார் தமிழ்த் தேர்வில் முதன்மையாகத் தேர்ந்து பாஸ்கர சேதுபதியின் பரிசைப் பெறுவார் என்று யாவரும் எதிர்பார்த்தனர்; ஆனால் தம் ஆசிரியரே பரீட்சகராக இருந்ததால் பிறர் பலவாறு பேச நேரிடும் என்று அஞ் சினார் சரவண முதலியார். உடனே, அதனை அறிந்த சாஸ்திரியார் தமிழ்ப் பரீட்சகர் பதவி தமக்கு வேண்டாம் என்று கூறிவிட்டு அப்பொழுது கும்பகோணம் அரசாங் கக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த **டாக்டர் உ. வே. சாமிநாதையர்** அவர்களைத் தமிழ்ப் பரீட்சகராக நியமிக்

கும்படி அதிகாரிகளை வேண்டினர். பரீட்சை நடந்தது; சரவண முதலியாரே முதன்மையும் பெற்றார். சாஸ்திரியார் 'ஞானபோதினி' என்ற பத்திரிகையைத் திருவாளர் **மு. சு. பூர்ணலிங்கம் பிள்ளை** அவர்களோடு சேர்ந்து நான்கு வருடங்கள் நன்கு நடத்தினர். அப்பத்திரிகையில் அரிய பல கட்டுரைகள் வெளிவந்தன. சாஸ்திரியார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பரீட்சகராகவும், தமிழ்ப் பாட புத்தகக் குழுவில் அங்கத்தினராகவும் இருந்து அருந்தொண்டு ஆற்றினர்.

சாஸ்திரியார் கல்லூரியில் தமிழ்ப்பாடம் போதித்து வந்தது மன்றி இல்லத்திலும் பல மாணவர்களுக்குத் தமிழ் போதித்தனர் என்று முன்னரே கூறியுள்ளோம். அம்மட்டோ ! தமிழ்மொழிக்கு அரிய நூல்கள் பல இயற்றித் தமிழன்னைக்கு அணி செய்ய எண்ணங்கொண்டார். தமிழ் மொழியில் என்ன குறைபாடு உள்ளது என்று ஆராய்ந்தார். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில் நாடகத் தமிழ்க்குரிய இலக்கண நூலும், இலக்கிய நூலும் இல்லாமை கண்டு வருந்தி **ரூபாவதி, கலாவதி, மான விஜயம்** என்ற நாடக நூல்களை எழுதி வெளியிட்டார். **நாடக வியல்** என்ற நாடக இலக்கண நூலை மிகவும் செம்மைபெற ஆராய்ந்து எழுதி வெளியிட்டார். அதனால் தமிழில் நாடக இலக்கணமில்லை என்ற குறைபாடு தமிழ்மொழிக்கு இல்லையாயிற்று. அவர் **'பரிதிமாற் கலைஞன்'** என்னும் புனை பெயரால் **தனிப் பாசுரத் தொகை** என்ற நூலை வெளியிட்டார். அது ஒரு பொருள்பற்றி அகவற் பாவில் பதினன்கு அடிகளைக் கொண்டது. இந்நெறியில் ஆங்கிலத்தில் ஸானெட்

என்ற பாவகையால் நூல்கள் உள்ளன. தமிழுக்குச் சாஸ்திரியார் புகுத்திய புது நெறி இது. இந்நூலைத் தமிழ்ப் புலவர் டாக்டர் ஜி. யூ. போப் பாதிரியார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவர் மொழி பெயர்த்த பொழுது ஆசிரியரது புனை பெயர் தெரியுமே அன்றி இயற் பெயர் தெரியாது. அவர் கூறுவதை இங்குக் காண்போம். "தமிழ், சரசுவதியின் சிறந்த மறுதோற்றம், புத்துடையில் ஏற்படுவதற்கான அறி குறிகள் காட்டும் நவீன நூல்கள் இரண்டைத் தவிர வேறொன்றும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. 'மனோன்மணீயம்' என்ற நூலின் ஆசிரியர் சிறந்து விளங்கிய திரு. சுந்தரம் பிள்ளையவர்கள் நமது துர திருஷ்ட வசத்தால் அதிவிரைவில் மறைந்துவிட்டனர். 'தனிப் பாசுரத் தொகை—முதற் பகுதி' என்ற ஆக்கி யோன் பெயர் குறிப்பிடாச் சிறு நூல், நாம் மனமார எதிர்கொள்ளத்தக்க புதிய மரபினர் வருகையின் முன் னுடியாகத் தோற்றுகிறது", என்று போப் எழுதினர். இயற் பெயர் தெரிந்த பின் அவர், "ஆக்கியோன் பெயர் இப்போது கிடைத்திருக்கிறது. இப் பாக்களை இயற்றி யவர், சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி யார்", என்று எழுதியுள்ளார்.

அக்காலத்தில் சென்னை கவர்னராயிருந்த பாரன் ஆம்தில் என்பவருக்குப் போப் பாதிரியார் தம் ஆங்கில மொழி பெயர்ப்பை அனுப்பிச் சாஸ்திரியாரைப்பற்றி மிகவும் சிறப்பித்துத் தெரிவித்தார். கவர்னர் பாரன் ஆம்தில் சாஸ்திரியாரை வரவழைத்துப் பேட்டி

கொடுத்து மிகவும் சிறப்பாக நூலைப்பற்றிப் பேசிப் பாராட்டினுர். அதனுல் அந்நூல் போப் பாதிரியாரு டைய மொழி பெயர்ப்புடன் கவர்னருக்கே உரிமை செய்யப்பட்டது.

பின்னர், சாஸ்திரியார் பதினுன்கு பகுதிகள் கொண்டதான **பாவலர் விருந்து** என்னும் அரிய நூலை வெளியிட்டார். மதுரையில் பாண்டித்துரைத் தேவ ரவர்கள் நான்காம் தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்திய பொழுது அங்கிருந்த புலவர் குழாத்துள் ஒருவர் நமது சூரிய நாராயண சாஸ்திரியார் ஆவர். அக் காலத்தில் மதுரை மாநகர் தமிழை மறந்திருந்த நிலையை மிகவும் உருக்கமாகப் பாடியுள்ளார். மற்றும் சாஸ்திரியார் **மணிய சிவனுர் சரித்திரம், தமிழ் மொழி வரலாறு** என்னும் நூல்களையும் இயற்றினுர். தமிழ் மொழி வரலாறு என் னும் நூல் வித்துவான் பரீட்சைக்குப் பாடமாக அமைத் திருப்பதும் அறியத் தக்கதே. அவ்வாறே சாஸ்திரி யார் இயற்றிய நாடக இலக்கணத்தையும் நாடக நூல் களையும் வித்துவான் பரீட்சைக்குப் பாடமாக்குதல் தமிழ் மக்கள் சாஸ்திரியாருக்குச் செய்யும் கைம்மாறு கும். ஞான போதினி, விவேக சிந்தாமணி என்ற பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து **தமிழ் வியாசங்கள, தமிழ்ப் புலவர் சரித்திரம்** என்று இரு புத்தகங்களாகப் பின்னர் வெளியிட்டனர்.

இவ்வாறு பல வகையாலும் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்துவந்த சாஸ்திரியார் விதிவசத்தால் க்ஷயரோக வாதைக்குள்ளானுர். அவர் தமிழ் மொழிக் காக உயிரையே தியாகம் செய்தவர். நோயின் வேத


னையை மறக்க அவர் தமிழ் நூல்களை ஓதுவார். சாஸ்திரியார் 1903-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ஆம் தேதி இறைவன் திருவடி நிழலை யெய்தினர். முப்பத்திரண்டு நிறைந்து முப்பத்து மூன்றும் ஆண்டில் அரிய தமிழ்த் தொண்டுகள் பலவற்றைச் செய்துவந்த சாஸ்திரியாரை மிக்க இளமைப்பருவத்தில் காலன் கொண்டு சென்றது வருந்தத் தக்கதே. அவர் வாழ்ந்திருந்தால் மேலும் பல அரிய நூல்களைச் செய்து தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் நலம் பல செய்திருப்பார். தமிழன்னை புத்தணிகளை நற்றமிழ்ப் பாவலரான சாஸ்திரியாரிடமிருந்து பெறும் பேற்றினைப் பெறவில்லை என்றே கூறவேண்டும். மிகக் குறுகிய காலத்தில் தமிழ் மொழியை ஆர்வத்தோடு கற்று அரிய பல புது நூல்களை அணிகளாகத் தமிழன்னைக்குச் சாத்தி அழியாப் புகழ் பெற்ற சாஸ்திரியாரைப்பற்றி அவர் மாணவரான ராவ்சாகிப் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை எம். ஏ. அவர்கள் கனிந்துருகிக் கூறும் மென் மொழிகளோடு இக்கட்டுரையை முடிப்போம்.

"அந்தோ! இத்தகைய பெருமை வாய்ந்த புலவருக்குக் கடவுள் நீண்ட ஆயுள் கொடுக்கவில்லையே. 1903–ஆம் வருடம் அவரது 33–வது வயதில் நோய்க்கிரையாகி, நாளுக்கு நாள் தேகம் இருமலினுல் மெலிவடைந்து, "ஐயா இருமல் எம்முடன் பெருமல் செய்கிறதே" எனக் கூறி, இருமிக் கொண்டே பாடம் சொல்வார், இறுதி நாள் வரையில் அவர் வீட்டில் தமிழ் முழக்கமே. அவர் பேசுவதை வியந்து கேட்பவர் ஒரு பால்; அவர் ஆணையின்படி நூல் எழுதுபவர் ஒரு

பால்; ஆக, அவர் இல்லம் எப்பொழுதும் தமிழ் மகள் குலவி நடமிடுங் கோயிலாக விளங்கும்".

"தற்கால நாடகத் தமிழுக்குப் பிதா இவர்தாமே! நாடக இலக்கணத்தைத் தமிழ் உலகிற்குத் தந்த புலவர் இவர்தாமே! இவர் இயற்றிய கலாவதிக்கு நிகரான நாடகத் தமிழ் நூல் நானிலத்துண்டோ? இவருடைய தனிப் பாசுரத் தொகை போல் இனிப்பான நூல் ஒன்று இனிப் பாரிலுண்டோ? இவர்தம் மதிவாண நூலின் செந்தமிழ்போல நெஞ்சிற் பதிவாகும் நூல் ஒன்று வருமோ இனித்தான்? மான விஜயம் போன்ற தேனமுத நூல்தான் தேடிற் கிடைக்குமோ? எழுபது ஆண்டிருந்த ஒருவர் தமிழணங்கிற்குச் செய்யும் திருப்பணியெல்லாம் முப்பது ஆண்டில் முடித்த பெருந்தகை அல்லவோ? அவர் பெயர் ஞாயிறுள்ளளவும் நானிலத்திலங்குமன்றோ?"

இத்தகைத் தமிழகப் பெரியாருக்கு நாம் செய்யும் கடப்பாடு யாது? மனித வாழ்க்கையின் நிலையை மெய்யறிவாலுணர்ந்து காலத்தை விணாக்காமல் அரிய பல நூல்களை இயற்றி அணி செய்த தமிழகப் பெரியாரான சூரிய நாராயண சாஸ்திரியாரின் அருந் தொண்டிற்குக் கைம்மாறாக, நாம் அவர் நூல்களை வாங்கி, ஓதி, நல்வழிப்படுதல் வேண்டும்.



த. வே. உமாமகேசுவரம் பிள்ளை

# திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை

மக்கள் என்பவர் யாவர்? மனித வடிவத்தில் விளங்குபவர் யாவரும் மக்கள் என்று பலரும் கருதுவர்; ஆனால் திருவள்ளுவரோ அவ்வாறு கருதாது,

> "விலங்கோடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோடு ஏனை யவர்" என்று கூறியுள்ளார்.

கற்றார் மக்கள். கல்லார் விலங்கு என்பது குறிக்கப்பட்டுள்ளது. எனவே, மக்களாவார் கல்வி நலம் வாய்க்கப் பெற்றவரே என்பது தெள்ளிதிற் புலனாகும். கல்வி நலம் வாய்க்கப் பெற்றார், நற்குணங்கள் பல செறியப் பெற்று விளங்குபவராவர். அன்னார் தாய் நாட்டுப் பற்றும், தாய் மொழிப் பற்று முடையவராய், மொழிக்கும், நாட்டு மக்களுக்கும் நலம் பல விளைவிப்பவர் ஆவர். அவர்கள் உயர்ந்த எண்ணங்களையே உள்ளத்தில் எண்ணித் தம் உடல், பொருள், ஆவியைப் பொருட்படுத்தாமல் நாடு, மொழி, மக்கள் முன்னேற்றங்களுக்கு அல்லும் பகலும் அனவரதமும் உழைப்பர். அத்தகைய பெரியோர் ஒரு சிலர் இருப்பதினாற்றான் நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும் நலம் உண்டாகின்றது.

நாடு, மொழி, மக்களுக்குச் செய்யும் தொண்டுகள் பலப் பலவாகும். எல்லாவற்றையும் ஒருவர் செய்தலும் இயலாது. எல்லோரும் செய்தல் எளிதன்று. ஒவ்வொருவர் ஒரு சிலவற்றையே செய்தல் இயலும்.

பொருள், கல்வி, அறிவு, ஆற்றல் என்பவற்றிற்கு ஏற்ப, அவரவர் நாட்டுப் பற்றுலும், மொழிப் பற்றுலும் தூண்டப்பட்டு நலம் பல செய்வர். அங்ஙனம் தொண்டு செய்தோர் பலர் உளர். அவர்களுள் ஒருவர் **ந. வே. உமாமகேசுவரம் பிள்ளை** ஆவர். எவ்வளவோ மக்கள் எத்தனையோ வகையில் தொண்டுகள் புரிந்திருக்க, அவர்கள் எல்லோருக்குங் கிட்டாத **தமிழ வேள்** என்ற தனிப் பெரும் பட்டத்தைப் பெற்றுத் தமிழகம் முழுவதும் போற்ற வாழ்ந்த பெரியார் திருவாளர் உமா மகேசுவரம் அவர்களே. அவர் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும், தமிழகத்திற்கும் செய்துள்ள தொண்டு அழியாதது; மறக்க வொண்ணுதது.

சோழ நாடு தமிழகத்துச் சிறந்து விளங்கும் நாடுகளுள் ஒன்று. சோழ நாட்டில் தஞ்சாவூர் சரித்திர சம்பந்தம் பெற்ற பழமையான நகர். தஞ்சாவூர் சோழ நாட்டின் பூங்கா ஆகும். அவ்வூர், சோழர் முதலாக பல்வேறு அரசருக்குத் தலைநகராய் விளங்கிற்று. அதன் பெருமை குன்றுதபடி இராசராச சோழனுல் கட்டப் பட்ட **பிரகதீசுவரம்** என்ற **பெரிய கோயில்** ஒன்று அழகிய சித்திர வேலைப் பாடுகளுடன் வானுற வளர்ந்து நிற்கின்றது. அத்தகைய பெருமை பொருந்திய தஞ்சாவூரின் வடபால் வெட்டாறு என்ற பெயரோடு காவிரியின் கிளை நதி ஒன்று ஓடுகிறது. அதன் கரையில் இருப்பது கருந்திட்டைக்குடி. அவ்வூரைக் கரந்தை என்ற பெயராலும் அழைப்பர். தஞ்சையைச் சார்ந்ததே கரந்தை. தஞ்சையில் வாழ்ந்த நல்லோர் பலருள் ஒருவர் **உமா மகேசுவரம் பிள்ளை.** அவர் அகமுடைய வேளாளர் குடியில்

தோன்றியவர். அவர் தந்தையார் **வேம்பப் பிள்ளை** என்பவர் ஆவர். வேம்பப் பிள்ளை தஞ்சை ஜில்லாவில் தாசில்தாராக அலுவல் பார்த்து வந்தார். வேம்பப் பிள்ளை கல்வியறிவு, ஒழுக்கங்களில் மேம்பட்டவர்; அறநெறியினின்று சிறிதும் பிறழாதவர். அவருடைய உயர் குணங்களை யாவரும் போற்றிப் புகழ்ந்தனர். வேம்பப் பிள்ளை தம் அறிவின் மாட்சி துலங்கத் தத்துவங்களைத் தெளிவாக எவரும் அறிந்து மகிழும்படி எழுதும் ஆற்றல் வாய்ந்தவர். அவர் புனைபெயரால் பல ஆங்கிலக் கட்டுரைகள் எழுதியுள்ளார். அத்தகைய சிறப்புள்ள தந்தையைப் பெற்ற உமாமகேசுவரம் பிள்ளை சிறிதளவு தவக்குறைவுடையவரே. இளம் பருவத்திலேயே உமாமகேசுவரம் பிள்ளை தம் தாய் தந்தையரை இழந்தார். ஆனால் அவருடைய சிறிய தாயாரும் அவ்வம்மையாரின் கணவரான **வி. சுப்பராயப் பிள்ளையவர்**களும், தாய் தந்தை யற்ற உமாமகேசுவரம் பிள்ளையை மிகவும் கருத்தோடு கவனித்து வளர்த்து வந்தனர். அவர்கள் பெற்றோரைக் காட்டிலும் மிக்க ஆதரவோடு வளர்த்து வந்தனர்; ஆகையால், தாய் தந்தையரை இழந்து விட்டோமே என்ற கவலை சிறிதளவும் உமாமகேசுவரம் பிள்ளைக்குத் தோன்றவில்லை.

உமாமகேசுவரம் பிள்ளை தக்க பருவத்தில் பள்ளியில் கல்வி கற்க விடப்பட்டார். அவர் இளமையில் அதிக ஊக்கமுடையவராய்க் கல்வியை ஆர்வத்தோடு கற்றுவந்தார். அக்காலத்தில் தஞ்சையில் **செயின்ட் பீட்டர்ஸ் காலேஜில்** படித்துப் பிள்ளையவர்கள் பி. ஏ. பட்டம் பெற்றார். பின்னர்ப் பிள்ளையவர்கள் தஞ்சா

லூர்க் கலெக்டர் ஆபீசில் வேலை பார்க்கச் சென்றார். சில காலம் வேலை பார்த்தார். எனினும் அவருக்கு அவ் வேலை மனத்திற்கு அமைதியைத் தரவில்லை. அதனால் அவர் அதனை விடுத்துச் சட்டக் கல்லூரியில் சேர்தற்கு விழைந்தார். அதற்கு ஏற்ப அவர் சென்னைக்கு வந்து சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்து பி. எல் பட்டமும் பெற்றார்.

பின்னர் அவர் தஞ்சையில் வழக்கறிஞராக அமர்ந்தார். வழக்கறிஞர் தொழிலை அவர் மிகவும் கண்ணியத்தோடு நடத்தி வந்தார். அநீதியான வழக்குகளை அவர் ஏற்றுக்கொள்ளார். பிறரிடம் அநீதியாகப் பொருள் பெற விரும்பார். ஏழை எளியவர்மீது மிக இரக்கங் கொண்டு, அவர்களுக்கு ஆவனவற்றைத் தாமே தேடிச் சென்று உதவி புரிவார். கட்சிக்காரரும், நீதிபதிகளும், பொதுமக்களும் புகழும்படி நடந்து கொண்டவர் உமாமகேசுவரம் பிள்ளை. அவர் முப்பத்திரண்டு ஆண்டுகள் வழக்கறிஞர் தொழிலைச் செவ்வனே நடத்தினர். வழக்கறிஞர் சுதந்தரமுடையோர்; பிறர் கட்டுப்பாட்டிற்கு அடங்கியவர் அல்லர். ஆதலால் எத்தகைய பொதுக் காரியங்களிலும், தேசத் தொண்டிலும் அவர்களே பெரும்பாலும் பங்கெடுத்துக்கொள்வர். மற்றும் சட்டக் கல்வி ஒருவனுக்கு அறிவை விருத்தி செய்ய வல்லது; ஒரு விஷயத்தைப் பல்வேறு கோணங்களில் நின்று ஆராய்ந்து அறியக்கூடிய பரந்த அறிவு உண்டாகும்படிச் செய்வது அக்கல்வி. செல்வத்தை மிகவும் பெருக்கிக் கொள்வதற்கும் அக்கல்வி பெரிதும் உதவுவதாகும்.

பிள்ளையவர்கள் தம் வழக்கறிஞர் தொழிலால் பெருஞ் செல்வத்தைத் திரட்டினர். உழைப்பாலும், உண்மையைக் காணும் ஊக்கத்தினாலும், தாம் அறிந்த உண்மையை விளங்க எடுத்துரைக்கும் வன்மையாலும், பிள்ளையவர்கள் வழக்கறிஞர் பலர்களுக்குள் மிகச் சிறந்தவராகவே மதிக்கப்பட்டார். தஞ்சைப் பெரு நகரில் பிள்ளையவர்களின் பெயரை அறியாத சிறுவரும் இலர். பிள்ளையவர்கள் பங்கெடுத்துக் கொள்ளாத பொதுக் காரியம் எதுவும் இல்லை. பொதுநலத் தொண்டில் பிள்ளை அவர்களுக்கு இருந்த ஆர்வத்தைத் தஞ்சை நாட்டாண்மைக் கழகத்தார் (தாலூகா போர்டு) பிள்ளை யவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திலிருந்து உணர லாம். பிள்ளையவர்கள் தாலூகா போர்டுத் தலைவராயி ருந்து தஞ்சை நகர்க்கும், தஞ்சைத் தாலுகாவிற்கும் ஆற் றிய தொண்டுகள் மிகப் பல. அப்பதவியை விடாது பதினைந்தாண்டுகள் தாங்கி நலம் பல புரிந்து வந்தார் எனின் மக்களுக்கு அவர் மீதிருந்த பற்றும் நம்பிக்கை யும் இனிது விளங்குவதாகும். பிள்ளையவர்கள் செய்த அருந் தொண்டுகளால் தொடக்கக் கல்வியும், தமிழ் ஆர்வமும், போக்கு வரவு வசதிகளும், பிறவும் மிகப் பெருகின.

பிள்ளையவர்கள் அளவில்லாத் தமிழ்ப் பற்று உடையவர். தமிழ் நூல்களை அவர் செம்மையாகக் கற்றிருந்தார். தமிழில் அரிய, இனிய, எளிய கட்டு ரைகள் எழுதும் ஆற்றல் அவருக்கு இருந்தது. அவருக்கு இருந்த தமிழ்ப் பற்று அவரைத் தமிழ்த் தொண்டில் ஈடுபடுத்தியது. பிள்ளையவர்கள் தூய

சைவர்; எனினும் வைணவத் துவேஷியல்லர். அவர் நெற்றியில் திருநீறு ஒளிபெற்று விளங்கும்; மார்பில் அக்க மணிமாலை விளங்கும்; வாயோ, மூவர் தேவா ரத்தை ஓதிய வண்ணமாய் அசைந்து கொண்டிருக்கும். பரந்த உள்ளத்தைக் காட்டுவது போல் அவரது அகன்ற மார்பு சிறந்து விளங்கும். பிள்ளையவர்கள் ஏறுபோன்ற பீடு நடையுடையவர். எவரைக் காணினும் பிள்ளை யவர்கள் வேற்றுமை கருதாது, புன்முறுவலுடன் இருகை குவித்து வணக்கம் செலுத்துவார். பிள்ளை யவர்கள் கேட்போர் உள்ளத்தில் புகுந்து இனிக்கும் கனிமொழிகளை நயம்படப் பேசுவார்; நாளும் திருக் கோயிலுக்குச் சென்று இறை வழிபாடு செய்யாதிரார். திருவையாற்றில் 'ஸப்த ஸ்தானம்' அல்லது ஏழூர்த் திருவிழா ஆண்டுதோறும் நடைபெறும். அத்திரு விழாவில் ஏழூர்க்கும் சுவாமியோடு சென்று சுற்றி வருவதில் பிள்ளையவர்கள் தம் வாழ் நாட்களில் ஓராண் டும் தவறியதே இல்லை. தம் வாழ்நாட்களில் பிள்ளை யவர்கள் திருக்கோயில்களைக் கண்டு வணங்க வேண்டும் என்பதைத் தமது முதற் கடமையாகக் கொண்டிருந் தார். பிள்ளையவர்கள் திருக்கோயிலுக்குச் செல்லுங் காட்சியைக் காணின், சேக்கிழார் பெருமானின்,

"தூயவெண் ணீறு துதைந்தபொன்
மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி மறவாத
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச்செஞ்சொல்

மேயசெவ் வாயு முடையார்
புகுந்தனர் வீதியுள்ளே ''

என்ற செய்யுளை நினைவூட்டும் என்பது ஒருதலை.

பிள்ளையவர்கள் தஞ்சை ஜில்லாவில் பல உயர்தரப் பாடசாலைகள் ஏற்படவும், திருவையாற்றில் அரசர் கல்லூரியில் தனித் தமிழ் வித்துவான் வகுப்பு ஏற்படுவதற்கும் காரணமாவர். அதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டவர் பிள்ளையவர்களே. பிள்ளையவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்து பணிகள் பல புரிந்துள்ளார். பிள்ளையவர்களின் சலியா உழைப்பாலும் முயற்சியாலும் தஞ்சைத் திராவிடப் பாங்கு, நில அடமான பாங்கு, கூட்டுறவுப் பதிப்பகம் என்பன நிறுவப்பட்டன.

தஞ்சைக் கடுத்த கருந்திட்டைக்குடியில் கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்பது ஒன்றுள்ளமைதத் தமிழ் மக்கள் நன்கு அறிவர். அதனை ஏற்படுத்திய நாள் முதல் அதன் வளர்ச்சியிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தவர் திருவாளர் உமாமகேசுவரம் பிள்ளையவர்களே. தம் தாய் மொழிப் பற்றினால் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் தமிழன்னையின் திருக்கோயிலாக்கி, ஆண்டு, தமிழன்னை சீரும் சிறப்பு முற்றுக் கொலுவீற்றிருக்கும் காட்சியைக் கண்டு மகிழ விரும்பியவர் பிள்ளையவர்களே. அவர் தமிழ்ச் சங்கத்தைத் தாபித்து அதன் வளர்ச்சிக்குப் பொருள் திரட்டினார்; தமிழ்ச் சங்கத்திற்குப் பெரியதோர் விஸ்தாரமான நிலம் வாங்கினார்; கட்டடங்கள் கட்டினார். தமிழ்ச் சங்கத்தின் சார்பாக மருத்துவச் சாலை ஒன்று ஏற்படுத்தினார்; நூல் நிலை

யத்தை உண்டாக்கினார்; படிப்பிடம் அமைத்தார்; திக்கற்ற மாணவர் இல்லத்தைத் திறந்து வைத்தார்; பல வகுப்புகளை ஏற்படுத்தித் தமிழும் ஆங்கிலமும் கற்பிக்கும்படிச் செய்தார்; தமிழ் வித்துவான் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ்க் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தினார்; தமிழ்ப் பொழில் என்ற திங்கள் தாள் வெளியீடு ஒன்றை உண்டாக்கித் தமிழுணர்ச்சியை உண்டாக்கினார்; தாமே இனிய பல கட்டுரைகளைத் தமிழ்ப் பொழிலில் எழுதி வெளியிட்டார். மற்றும் அச்சகம் ஒன்றை அமைத்தார். தமிழ்ப் புலவர் கல்லூரி திருப்பாதிரிப் புலியூர் திரு. ஞானியாரவர்களால் திறக்கப்பட்டது. சென்னைப் பல்கலைக் கழகத்தாரின் ஒப்பமும் பெற்றது. பிள்ளையவர்கள் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சி குறித்தும், கல்லூரியின் வளர்ச்சி குறித்தும் எடுத்துக்கொண்ட ஊக்கமும் முயற்சியும் அளவிடற்பாலன அல்ல; அவற்றிற்கெனத் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தார். பிள்ளையவர்கள் தம் பொருளையும் வாழ்க்கையையும் அவற்றின் வளர்ச்சிக்கே அர்ப்பணம் செய்தார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வாழ்வே தம் வாழ்வாகப் பிள்ளையவர்கள் கருதினார் என்பதில் ஐயமில்லை. அவர்களுக்குச் சங்கப் பள்ளிக்கூடத்திலும் கல்லூரியிலும் பயிலும் மாணவர்களின் ஒவ்வொருவர் வரலாறும் நன்கு தெரியும் எனின் எவ்வளவு அன்புள்ளம் கொண்டவராய் அவர்களைப் பற்றியெல்லாம் அறிந்து வைத்திருக்க வேண்டும் என்பதை நாம் நன்கு உணரலாம்.

தனித் தமிழ் வித்துவான்களுடைய நிலையை உயர்த்த வேண்டும் என்பதும், அவர்களுக்குப் பரந்த

அறிவும் பெரு நோக்கமும் உண்டாதல் வேண்டும் என்பதும், அவர்கள் தமிழ்ப் பண்டிதர் வேலை ஒன்றையே கருதாது வேறு துறைகளிலும் சென்று பயன் பெறும் வன்மையுடையவர்களாதல் வேண்டும் என்பதும் பிள்ளையவர்களின் நோக்கங்களாகும். பிள்ளையவர்கள் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும், கட்டுரைகள் எழுதுவதிலும், பெருந்திறல் உடையவர்கள். "நம் கல்லூரியில் படித்து, நம் கருத்துப்படி ஒரு மாணவன் புலவனாக வருவதைப் பார்த்த பின், உயிர் நீப்பின், அதுவே எனக்குப் பெரும் பேறாகும்", என்று பிள்ளையவர்கள் அடிக்கடி கூறுவாராயின் அவரது உள்ளக்கிடக்கை நன்கு விளங்குவதாகும். பிள்ளையவர்கள் முப்பது ஆண்டுகள் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவராய் இடைவிடாது இருந்து, ஓயாது உழைத்து அரும் பணிகள் பல புரிந்துள்ளார்கள். அதனால் அன்றோ பிள்ளையவர்களைத் 'தமிழவேள்', 'தமிழ்ப் புரவலர்' என்ற சிறப்புப் பட்டப் பெயர்களால் தமிழ் மக்கள் கொண்டாடிப் புகழ்ந்தனர்!

பிள்ளையவர்கள் புகழை விரும்பியவர் அல்லர்; ஆனால் புகழ் அவரை நாடிச் சென்று பெருமை எய்தியது. பிறமொழிக் கலப்பின்றித் தனித் தமிழில் சொற்பொழிவுகளை ஆற்றுந் திறல் படைத்தவர் பிள்ளையவர்கள் எனின், அவர்களது தமிழ்ப்பற்று நன்கு விளங்கும். பிள்ளையவர்களுக்குத் தமிழ்ப் புலவரிடத்துத் தனிப்பட்ட அன்பு உண்டு. பிள்ளையவர்கள் யாவரிடத்தும் எளிமையாகப் பழகுவார்கள். ஒவ்வொருவருக்கும் முடிந்த அளவு நன்மைகளைத் தாமே அறிந்து செய்வார்கள். தாம் செய்யும் நன்மைகளும், கொடை

யும் பிறர் றியாமலிருக்குமாறு செய்வது வழக்கமாம். தமக்கென்று வாழாது பிறர்க்குரியாளராக வாழ்ந்தவர் அவர்களே எனின் மிகைபடக் கூறியதாகாது.

பிள்ளையவர்கள் சைவப்பற்றுடையவர்கள் என்றும், தலயாத்திரை செய்வதில் விருப்ப முடையவர்கள் என்றும் கூறினோம்; அவர் வட நாட்டுத் தலயாத்திரையை மேற்கொண்டார். அவருடன் அவருடைய உற்ற தோழரான திரு. அ. கணபதிப் பிள்ளையவர்களும் சென்றார். பிள்ளையவர்கள் தலயாத்திரை ஒன்றைமட்டும் தம் குறிக்கோளாகக் கொள்ளாது வட நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள், மக்கள் முன்னேற்றம், மொழி முன்னேற்றம் முதலியவற்றையும் அறிந்து வருவதைக் கருத்திற்கொண்டனர் பிள்ளையவர்கள் வட நாட்டு யாத்திரையில் கவி ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதனத்தைக் கண்டார்; பின்னர், கயா, காசி, முதலான இடங்களுக்குச் சென்றார்; இந்து பல்கலைக் கழகத்தையுங் கண்டார்; பிறகு அவர்கள் சாரநாதத்திற்குச் சென்று புத்தர் பெருமானின் அருட் கோலத்தை வணங்கினார்கள்; பின்னர்ப் பிரயாகைக்குச் சென்றனர். அரித்துவாரத்திற்குப் போகும் வழியில் பிள்ளையவர்களுக்குக் காய்ச்சல் கண்டது. அயோத்திக்கு அருகிலுள்ள பைசாபாத் என்னும் இடத்தில் தங்கினர். மருத்துவம் செய்யப்பட்டது. ஆயினும் பிள்ளையவர்கள் அங்கே 9-5-1941-ல் வெள்ளிக்கிழமை யன்று மாலை 3-30 மணிக்கு இறைவன் திருவடி நிழலை யடைந்தார். உடனிருந்த கணபதிப் பிள்ளையவர்கள் நெஞ்சைப் பிளக்கும் தாங்க முடியாத துக்கத்தோடு அன்பர் திருமேனியைச் சரயு நதிக் கரை

யில் தகனம் செய்து திரும்பினர். பிள்ளையவர்களின் பிரிவைக் கேட்டு வருந்தாத தமிழ் மக்கள் இல்லை. தமிழ் நலத்திற்கே பாடுபட்ட **தமிழகப் பெரியார்** உமா மகேசுவரம் பிள்ளையவர்களின் புகழ் என்றும் நின்று நிலை பெற்று விளங்குவதாக.

## கட்டுரைப் பயிற்சி

### 1. சி. சுப்பிரமணிய பாரதியார்

1. பாரதியாரின் இளமைப் பருவம்
2. இளமையில் பாரதியாரின் மதிநுட்பம்
3. பாரதியார் பார்த்த அலுவல்கள்
4. பாரதியார் நாடு, மொழி, மக்களுக்குச் செய்த தொண்டுகள்

### 2. ந. மு. வேங்கடசாமி நாட்டார்

1. நாட்டாரின் இளமைப் பருவம்
2. நாட்டார் பண்டிதர் பட்டம் பெற்றது
3. நாட்டாரிடம் காணப்பட்ட குண நலன்கள்
4. நாட்டார் தமிழுக்குச் செய்த தொண்டுகள்

### 3. வ. உ. சிதம்பரம் பிள்ளை

1. பிள்ளையவர்களது கல்வி
2. நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும்
3. சுதேசிக் கப்பல் கம்பெனி
4. பிள்ளையவர்கள் நாட்டிற்கும் மொழிக்கும் செய்த தொண்டுகள்

### 4. திரு. பச்சையப்ப முதலியார்

1. இளமைப் பருவம்
2. முதலியார் செய்த தொழிலும் செல்வம் குவிதலும்

3. முதலியாரின் குணஞ் செயல்கள்
4. முதலியாரின் அறச் செயல்கள்

. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள்

1. சாஸ்திரியாரின் கல்வி
2. சாஸ்திரியாரிடம் இளமையில் காணப்பட்ட குண நலங்கள்
3. சாஸ்திரியார் தமிழாசிரியர் ஆனது
4. சாஸ்திரியார் தமிழுக்குச் செய்த சிறப்பான தொண்டுகள்

. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை

1. பிள்ளையவர்களின் குணநலன்கள்
2. பிள்ளையவர்கள் நாட்டிற்குச் செய்த தொண்டு
3. பிள்ளையவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குச் செய்த நலன்கள்
4. பிள்ளையவர்களின் தெய்வ பக்தியும் இறுதியும்

104974